


# பொன் விழா மலர்

'முகில்வண்ணன்'

# எழுத்து உலகில் ஐம்பது ஆண்டுகள்

## 1961 - 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் விழா மலர்

‘முகில்வண்ணன்’

# எழுத்து உலகில் ஐம்பது ஆண்டுகள்

## 1961 - 2011

கண்மணி பிரசுரம்
நெசவு நிலைய வீதி, பாண்டிருப்பு-01.
கல்முனை. இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KANMANY PUBLICATION**

| | | |
|---|---|---|
| Title | - | '**Mukilvannan**'in Ponvizha Malar |
| Author | - | Mukilvannan |
| Birth Name | - | Velupillai Sanmuganathan |
| Copy Rights | - | Author |
| First Edition | - | December 2011 |
| Page Setting | - | UmaaChandran |
| Pages | - | 115 |
| Size | - | B5 |
| Published | - | Kanmany Publication.<br>Weaving Center Road, Paniruppu 01.<br>Kalmunai. |
| Printers | - | A. J. Printers<br>44, Railway station Road,<br>Dehiwala. Sri Lanka. |

**கண்மணி பிரசுரம்**

| | | |
|---|---|---|
| தலைப்பு | - | '**முகில்வண்ணனின்**' பொன் விழா மலர் |
| ஆசிரியர் | - | முகில்வண்ணன் |
| இயற்பெயர் | - | வேலுப்பிள்ளை சண்முகநாதன் |
| உரிமை | - | ஆசிரியருக்கே |
| முதற் பதிப்பு | - | மார்கழி 2011 |
| அட்டை, பக்க வடிவமைப்பு | - | உமாச்சந்திரன் |
| பக்கங்கள் | - | 115 |
| அளவு | - | B5 |
| வெளியீடு | - | கண்மணி பிரசுரம்<br>நெசவு நிலைய வீதி, பாண்டிருப்பு-01.<br>கல்முனை. இலங்கை. |
| அச்சகம் | - | ஏ. ஜே. பிரின்டர்ஸ்<br>44, புகையிர நிலைய வீதி,<br>தெகிவளை. இலங்கை. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1961 – 2011

ஐம்பது ஆண்டுகள் எழுத்துலகில் ஆற்றிய
பணிக்காக 'முகில்வண்ணன்' அவர்களை
'வளமோடு வாழ்க'வென்று
வாழ்த்துகின்றோம்.

**மறவன்புலவு க. சச்சிதானந்தன்**

கலாநிதி **பரதன் கந்தசாமி**

**பாவாணர் அக்கரைப்பாக்கியன்**

அருட்திரு. சகோதரர் கலாநிதி **எஸ். ஏ. ஐ. மத்தியு SSJ**

திரு. **தங்கராசா மகேஸ்வரன்** *ஜே.பி.*

**சிவஸ்ரீ க.ஐ. யோகராஜா ஐயர்**

செங்கதிரோன் **த. கோபாலகிருஷ்ணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மறவன்புலவு க. சச்சிதானந்தன்**

(காந்தளகம் அதிபர், முன்னாள் ஐ. நா. வேளாண்துறை அலுவலர்)
அவர்கள் வழங்கிய வாழ்த்துரை

ஈழம் ஈந்த எழுத்தாளர் வரிசையில் முகில்வண்ணன் அவர்களின் பெயர் கல்வெட்டில் பொறித்த பெயராகும்.

புகழ் வரலாற்றில் நீங்காது நிலைபெற்ற பெயராகும்.

வாழ்கையிலேயே வரலாறு படைத்த பெயராகும்.

தமிழ் வாசகரிடை இடையீடின்றி வாழ்ந்து கொண்டிருக்கும் பெயராகும்.

ஈழத்து வட்டார வழக்குச் சொல் தேடுவோருக்கும் மண்ணொடு குழைத்த பழமொழிகள் தேடுவோருக்கும் ஊற்றுக் கண்ணான இலக்கியம் படைத்த பெயராகும்.

காலத்தின் நிலைக்கண்ணாடியாகிய நிகழ்ச்சிப் பதிவுகள் தந்த பெயராகும்.

குமரிமுனைக்கும் தெற்கே தமிழ்கூறும் நல்லுலகு உண்டென்ற பதிவுகளைப் பொறித்து வாழும் **திரு. வேலுப்பிள்ளை சண்முகநாதன்** அவர்களின், **பொன்விழா மலர்** சிறப்பாக அமைய வாழ்த்துகிறேன்.

முகில்வண்ணனாகிய அவரின் வெண்மை உள்ளமும் மாசற்ற மனமும் என்போன்றோரை அவர்பால் ஈர்த்தன. காந்தளகம் வழி சென்னையில் அவரது நூல்களை வெளியிட்டுத் தமிழக வாசகருக்கும் அவரை எடுத்துச் செல்லும் வாய்ப்புப் பெற்றேன்.

முகில்வண்ணனார் பல்லாண்டு வாழ்க, பல நூறாயிரத்தாண்டு புகழ்வாழ்வு பெறுக.

**மறன்புலவு க. சச்சிதானந்தன்**

சிட்னி, கார்த்திகை, 2042

12. 12. 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்த் தென்றல் கலாநிதி **பரதன் கந்தசாமி**

(B.A, B.com.(sp), M.A. Hons., M.Phil., Dip-in-Ed., Dip – in- Journalism)

(பணிப்பாளர், நால்வர் கோட்டம், தலைவர் கல்முனை தமிழ்ச் சங்கம்)

அவர்கள் வழங்கிய வாழ்த்துரை.

## பொன்வண்ணம் காணும் முகில்வண்ணன் வாழ்க!

''குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலை பயில் தெளிவு, கட்டுரை வன்மை
நிலம் மலை நிறைகோல் மலர் நிகர் மாட்சி
உலகியல் அறிவு உயர் குணம் இவை போல்
வளம் பிறவும் நிறையப் பெற்றவனே நல்லாசிரியன்''

எனப் பவனந்தி முனிவர் கூறிச் சென்றது நல்ல நூலாசிரியருக்கும் பொருந்தும். அன்று ஆயிரத்து தொளாயிரத்து அறுபதுகளில் எழுத்துலகில் பிரவேசித்து, இன்று ஐம்பது ஆண்டுகளை வெற்றிகரமாகக் கடந்தும் எழுதிக் கொண்டிருக்கும், தங்க விழாக் காணும் ***முகில்வண்ணன்*** என்ற **கா.வே. சண்முகநாதன்** அவர்களின் பொன்விழா மலரில், சுவடொன்றைப் பதிப்பதில் பெரிதும் மகிழ்கின்றேன்.

கல்முனை பிரதேசத்திலே கல்லொன்றை வீசினால், நிச்சயம் அது ஒரு கலைஞனின் அல்லது கவிஞனின் அல்லது எழுத்தாளனின் தலையில்தான் விழும் என்று கூறும் அளவிற்கு படைப்பாளிகளை பெற்ற பெருமையுடையது. தமிழ், முஸ்லீம் சமூகங்களில் இருந்து கவிஞர் நீலாவணனைத் தொடர்ந்து, வடக்கே பெரியநீலாவணை தொடக்கம் தெற்கே பொத்துவில் பாணமை வரையும் பல்வேறு எழுத்தாளர்கள் உதயமாகியுள்ளார்கள்.

கடந்த நூற்றாண்டின், ஐம்பதுகளின் இறுதிலும் அறுபதுகளின் முற்பகுதியிலும் ஈழத்து இலக்கியக் களத்தில், மட்டக்களப்பு பிரதேசத்தில் இருந்தும் கல்முனை பிரதேசத்தில் இருந்தும் புற்றீசல் போல் புறப்பட்டு எழுத்தாளர் குளாத்துள்ளே சிலர் சிறந்த எழுத்தாளர்களாக இனம் காணப்பட்டார்கள். சிலர் இருட்டடிப்புக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இந்த வகைக்குள் இரண்டாவது வகுதிக்குள் ஆட்பட்டும் தமது இருப்பை தற்காத்துக் கொண்ட இலக்கியவாதியாக **முகில்வண்ணன்** அவர்கள் அமைந்துள்ளார் என்பதை அவரது படைப்பிலக்கியச் சுவடுகளை ஆராயும் போது அறியக்கிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை, கவிதை, சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், மெல்லிசை எனப் பல்வேறு முனைப்புக்களில் *பன்முக ஆளுமை* கொண்டவராக காணப்படும் **முகில்வண்ணன்** இலைமறை காயாக இருந்து இலக்கியப் பணியில் தனது எழுத்தியல் ஓர்மத்தை வெளிக்காட்டி நிற்கிறார்.

ஒரு பொறியியலாளனாக, நல்ல சமூக சேவையாளனாக, நனி சிறந்த ஆன்மிகவாதியாக பல்வேறு அமைப்புக்களில் பங்களிப்பு செய்து வரும் ***பாண்டிருப்பின் மைந்தர்* முகில்வண்ணன் கா.வே. சண்முகநாதன்,** கல்முனை தமிழ் சங்கத்தின் காவலனாகவும் பணியாற்றி வருகிறார்.

காலத்தை வெல்லும் அவரது கலை இலக்கிய படைப்புக்கள், தமிழ் இலக்கியப் புலத்தில் வாழும், வளப்படுத்தும் என்பதில் பெருமை கொள்ளலாம்.

முகில் வண்ணனின் தமிழ்ப்பணி, ***தங்கவிழா*** மட்டுமல்ல ***மணிவிழா, பவளவிழா, முத்துவிழா*** என விரிவடைந்து நூற்றாண்டு விழாவும் காண வேண்டுமென்று மனம் மகிழ வாழ்த்துகிறேன்.

தமிழ்தென்றல் கலாநிதி **பரதன் கந்தசாமி**

இல: 61/1 யாட் வீதி
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. கணபதிப்பிள்ளை பாக்கியராஜா
(ஓய்வு பெற்ற அதிபர், பாவாணர் அக்கரைப்பாக்கியன்)
அவர்கள் வழங்கிய வாழ்த்துப் பா

**வளங்கள் பெருக வாழியவே!**

வாடும் பயிரை வாழவைக்க
வானில் முகில் வரும்
மழையாய்ப் பொழியும்
அதுபோல்
வாழும் எங்களை வாழவைக்க
முகில்வண்ணன் வந்தார்
அவர் எழுத்துக்கள்,
அறிவூட்டும் நற்கருத்துக்கள்!

அத்தனையும்
தமிழ்த்தாயின் சொத்துக்கள்!
நன்முத்துக்கள்!
முகில்வண்ணனுக்கு
இது மாரிகாலம்
எங்களுக்கு வசந்தகாலம்!
அதுதான் போலும்,
பொழிகின்றன ஆக்கங்கள்!
பூரிக்கின்றன நெஞ்சங்கள்!

அண்மையில் தான்
கல்முனை தமிழ்ச்சங்கத்தில்
*''இனியும் நான் இராமன்தான்''*
எனும் சிறுகதைத் தொகுதி
எங்கள் முன்
வெளிப்பட்டது!
வெற்றியும் கண்டது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகில்வண்ணன் –
ஆக்கங்களை தருவதில்
கண்ணன் – அதில்
பெரும் விண்ணன்
இவர் தந்ததையும்
தரப்போவதும்,
ஏராளம்... ஏராளம்...

''அவள் ஒரு தமிழ்ப் பெண்''
சிறுகதை வடிவில் பொழிந்தது
''ஆனந்தக் கண்ணீர்''
குறுநாவல் எனப்பொழிந்தது
சிறுவர் ஆக்கங்கள்,
ஆலய வரலாறுகள்,
பக்தி கீதங்கள்
கவிதை ஆக்கங்கள்,
கட்டுரை விளக்கங்கள்
எனப்பெய்து... பெய்து...
வாசகர்களைத்
தன்பால் வளர்த்தெடுக்கும்
எண்ணம்... கைவண்ணம்
முகில்வண்ணனிடம் உண்டு!

முகிழ்ந்தவையோ கற்கண்டு
இவையெல்லாம் நாம் கண்டு
இருக்கின்றோம் உவகை கொண்டு!

இப்பொழுது,
செங்கதிர் இலக்கிய வட்டம்
பொதுநூலக வாசக வட்டம
இணைந்தது... இதனால்
முகில்வண்ணன் பெய்யும் மழை
செல்லக்கிளியாய்ப் பறக்கிறது.
வெல்லத் தமிழ் எடுத்து
மெல்லக் கதை தொடுத்து
உள்ளக்கமலத்தை
உசுப்பிவிடும் சூரியனாய்,
செல்லக்கிளியைத்
தந்துவிட்டார் எம்மிடத்தில்
நல்ல பல சேதிகளை
சொல்லிவிட்டார் வையகத்தில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் பறந்த கிளி
இங்கு வந்து சேர்ந்தது!
இங்கிருந்து இந்தக் கிளி
இனிப் பறக்கும் எவ்விடத்தும்!
இப்படியே எழுதுங்கள்
இதுபோலே துணியுங்கள்!
உங்கள் உழைப்பையும்,
உத்வேகத்தையும் பார்த்து,
தமிழன்னை மகிழ்வுற்றாள்
தரணியெங்கும் சிறப்புற்றாள்!
தன் மகன் முகில்வண்ணனின்
தகைமைகளை அறிந்து!

பேரானந்தமுற்ற தமிழ்த்தாயை
ஆக்கம் என்னும் பூக்கள் சொரிந்து,
வழிபடும் உங்களைப்
போற்றுகின்றோம்!
பாரட்டுகின்றோம்!!

முருகனுக்கு பாமாலை தொடுத்தார்
முருகனருளாய் பொழிகின்றது!
முருகன் அடியார் எல்லாம்
மகிழ்வுற்றார்!
முருகக் கடவுளும் மகிழ்ந்து
வாழ்துகின்றான்
வாழ்க வாழ்கவே...

அன்னை திரௌபதியின்
ஆலய வரலாற்றை
கண்ணியமாய் தொகுத்தளித்தார்
அறியாத பல உண்மைகளை
மக்களெல்லாம் அறிய வைத்தார்!
அன்னை மனதில் வீற்றிருக்கும்
அரிய பல சேவைகளை
ஆற்ற வேண்டும் ஐயா நீங்கள்
அவனியில் தலை தூக்க வேண்டும்!

இன்னும்... இன்னும்...
பல வெளியீடுகளை
பாருக்குத் தாருங்கள்
பலர் போற்ற வாழுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த எழுத்தாளரே!
முகில்வண்ணன் ஐயாவே!

இன்று போல் இன்பமுடன்
பல்லாண்டு காலங்கள்
பண்புடையோர் வாழ்த்த
வாழ வேண்டுமென
வல்ல இறையோனை வேண்டுகிறோம்!

நோய்நொடியின்றி
நீடித்த ஆயுளுடன்
குன்றிலிட்ட தீபமாய்
கோபுரத்துக் கலசமாய்
வாழிய! வாழிய!
வளங்கள் பெருக வாழியவே!

பாவாணர் அக்கரைப்பாக்கியன்

57/A, பொன்னையா வீதி,
பெரியநீலாவணை.
கல்முனை.

தொ.பே. 067 2221847
கை. பே. 077 9090342



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்திரு. சகோதரர் கலாநிதி **எஸ். ஏ. ஐ. மத்தியு** எஸ். எஸ். ஜெ.
(கலாபூஷணம், வித்தியாசிரோண்மணி, அகில இலங்கையில் அதிசிறந்த அதிபர் திலகம் (எஸ். எல். ஏ. ஏ. ஈ. டி), தேசமான்ய, இருமுறை சாகித்ய விருது பெற்றவர், கல்விமான், நடிகர், நடகாசிரியர், இயக்குனர். இவற்றிற்கு மேலாக 50க்கு மேற்பட்ட பல்துறை சார்ந்த நூல்களை வெளியிட்டவர்)
அவர்கள் வழங்கிய சிறப்புரை

50 ஆண்டு எழுத்துலக வாழ்க்கை என்பது நாம் பிரமிக்க வேண்டிய ஒன்று. இதற்குக் காரணம் 50 ஆண்டு காலத்தில் நாகரீகம் கண்ட வளர்ச்சி. அந்த நாகரீகத்தின் பிழையான விளைவுகள் என்று சொல்லக் கூடிய விபத்துக்களில் சிக்கிய இன்றைய எழுத்து உலகிலே மாறிவரும் சூழலுக்கு ஏற்ப வாசகர்களைத் தம்வசப்படுத்தி வைத்திருந்த பெரியார் இவர். இந்த 50 ஆண்டு காலமும் தன்னை நிலை நிறுத்தியிருக்கின்ற **முகில்வண்ணன்** என்ற சண்முகநாதன், எழுத்துலகத் தந்தை என நாம் வர்ணிக்கலாம்.

உயர்திரு கலாபூஷணம் **சண்முகநாதன்** அவர்கள் பொறியியல் சார்ந்த ஒரு நிபுணர். இப்படிக் கூறுவதால் மட்டும் ஒரு மாமனிதரை எடைபோட்டுவிட முடியாது. அவரை எடைபோட பல நுண்ணிய துலாக்கோல்கள் அவசியம். இந்த துலாக்கோல்கள் பல என்னிடம் இல்லை.

அவரை ஒரு தொழில் அதிபராக நான் பார்த்திருக்கிறேன். பாண்டிருப்பு என்பது ஒரு பழம் பெருமை மிக்க, வரலாற்றுச் சிறப்புமிக்க கிராமமாகும். அந்தக் கிராமத்துக்கு ஒரு பெருமை உண்டு. அது வரலாற்றுப் பெரும் பஞ்சபாண்டவர்களின் தனியொரு நாயகி, ஒப்பற்ற தனிநாயகி திரௌபதி அம்மன் குடிகொண்டிருப்பதாகும்.

அந்த அம்மனை வழிபடும் மக்கள் நிறைந்த, ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்களைக் கவர்ந்து இழுக்கும் கிராமமாகும். அக்கிராமத்தில் அருச்சுனர் குடும்ப வாரிசுகளில் இருந்து வரும் **திரு. சண்முகநாதன் முகில்வண்ணன்** ஒரு மூத்த மகன். ஒரு நல்ல மகன். பண்புகள் நிறையப் பெற்ற மகன். இந்த மகன் அம்மனின் வரலாற்றை நூலாக வெளியிட்டு இருப்பது பெருமைக்குரியதாகும்.

அவர் பிரம்ம குமாரிகளின் ஒரு இராஜயோகி. பத்திமிகு சக்தியால் பெற்ற ஞானமிகு ஒரு தவப்புதல்வன் என்பதை பல்வேறு சந்தர்ப்பங்கிளில் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டறிந்துள்ளேன். அத்துடன் பொறியியல் துறையில் தொழில் சார்ந்த பல அலுவல்களையும் ஊன்றிப் பார்க்கும் தன்மையும், அவர்களுடைய வாழ்க்கைப் பின்புலங்கள், அவருடைய எழுத்து உலகின் பாத்திரங்களாகின்றன. சிலவேளை நம்மை ஏளனமும் செய்கின்றன.

திரு. சண்முகநாதன் முகில்வண்ணனுடைய 50 ஆண்டு கால எழுத்துப் பணி ஒரு கிராமத்தின் எழுச்சியை மட்டுமல்ல, அது பேசும் பாத்திரங்கள், உலகை பொதுமைப்படுத்தி நமக்குக் காட்டுகின்றன. அன்னாரின் எழுத்துலகப் பார்வை கவிதைகள் கட்டுரைகள் சிறுகதைத் தொகுப்புக்கள் நாவல்களாக இன்னும் பல பரிமாணங்களாக விளங்குகின்றன. எழுத்துலகில் பொன்விழாக் காணும் முகில்வண்ணனின் இந்த ஆக்கங்கள் அவரை, அவரது பன்முகங்களை பறைசாற்றும் என்றே நம்புகின்றேன்.

இந்த உலகிற்கு ஒரு பெருமையுண்டு. அது நேற்று இருந்தவன் இன்றில்லை என்ற பெருமை என்று வள்ளுவர் கூறுகின்றார். ஞானியின் வார்த்தைகளைப் பலகோணங்களில் பார்க்க வேண்டும். நேற்று இருந்தவனை இன்று உலகம் மறந்து விடுகின்றது. நேற்று புகழ் தேடித் தந்தவரை இந்த **'மன்னா'** உலகம் மறந்து விடுகின்றது. நேற்று இருந்தவரிடம் உதவிகள் பெற்றவரை எதிராகத் திருப்பி தம்மோடு கூட்டுச் சேர்த்துக் கொள்கிறது. இதை அழகாக காவியங்கள், புராணங்கள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன.

V ¸ . **சண்முகநாதனின்** எழுத்துலக வாழ்க்கையிலும் அவரை எதிர்த்து தம்கவி பாடியவர்களும் உண்டு. இது பிறரது தோள்களில் ஏறி நின்று அவரை குற்றுயிராக்கி பெரும் கும்பலில் தாம் முதல்வன் என்று உயர நின்று பார்க்க எத்தனிப்பவரை நமக்குக் காட்டுகின்றது. போலச் செய்பவர்கள் பலர் உண்டு. புதுமை படைக்கின்றவர்கள் சிலர் உண்டு. முகில்வண்ணன் அவர்கள் தனித்துவமிக்க எழுத்தாளர். சொந்த வாழ்க்கையிலும் பலரது சுமைகளை தாங்கி வாழ்ந்த ஒரு பெரு மனிதரின் ஆதங்கம், உணர்ச்சிகளை அவரது கதாபாத்திரங்களிலும், அவரது சிந்தனைக் கட்டுரைகளிலும், கவிதைகளிலும் பிரதிபலிக்கக் காணலாம்.

எழுத்துலகில் உயர்கல்விப் பட்டங்கள் பெற விரும்புவோர் அவரது ஆக்கங்களை ஆய்வுப் பொருளாகக் கொள்ள முடியும்.

தாம் கற்ற பாடசாலை, அதன் ஆசிரியர்கள், அதை வழிநடத்திய புனித சூசையப்பர் சபை சந்நியாச துறவற ஆசிரியர்கள், கலைஞர்கள், கதையுலகுக்கு தம்மைத் தயார் படுத்தியவர்கள் அவர் மனக் கண்முன்னால் நிற்கின்றனர். அவை அவர் நமக்குக் கூறும் அறிவுரைகள். நன்றியில்லாத மனிதர் *நமன்* உலகைச் சாரட்டும் என்று, அவர் தரும் வேதனைகளின் விளைவுகள் மறைமுகமாக இந்நூலில் குறிப்பிடப் படுகின்றது.

அவரது இந்நூல் இன்னும் பல ஆண்டுகள் வாழ்வதற்குரிய ஆழமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுதுகளைப் பெற்றிருக்கின்றன. ஒரு சிறு கலைக்களஞ்சியத்தை ஒத்த இவரது இந்நூலின் கண் அடங்கியுள்ள தேடல்களை நாம் கற்று அவரைப் போற்றிப் பாராட்டுவோம். அவரது 50 ஆண்டுகள் மக்கள் மத்தியில் அவர் தடம் போட்ட வாழ்க்கை நினைவுகள். நல்லவற்றில் எதனையோ சாதிக்க விரும்பும் அனைவருக்கும் இவரது நூல்கள் உதவுமாக.

கட்டிடக்கலையும் சட்டக்கலையும் அவர் தம் எழுத்துலகில் உளவியல் சார்ந்த கலைக்கோவிலின் கற்களாக மிளிரட்டும்.

திரு. சண்முகநாதன் முகில்வண்ணன் அவர்கள் நீடூழி வாழ்ந்து இன்னும் பல ஆக்கங்களை எழுத்துலகுக்கு வழங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

அருட்சகோதரர் எஸ்.ஏ.ஐ. மத்தியு

159, எஸ். எஸ். ஜே ஒழுங்கை.
பழைய தபாலக வீதி,
கல்முனை. 32300.
இலங்கை.
தொ. பே. 067 2221906



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. தங்கராசா மகேஸ்வரன் *ஜே.பி.*

(தலைவர், அம்பாரை மாவட்ட தமிழர் மகா சங்கம்.
தலைவர், அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் – கல்முனை பிரதேச செயலாளர் பிரிவு
உப தலைவர், கல்முனை மாவட்ட கூட்டுறவுச் சங்கம்)
அவர்கள் வழங்கிய வாழ்த்துரை

அமரர் **அருச்சுனர் வேலுப்பிள்ளை** அவர்களின் மகனான திரு. **சண்முகநாதன்** அவர்கள் பாண்டிருப்பை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவம் கொண்டவர். சிறு வயது முதல் சமூக சமய பணிகளில் ஈடுபாடு கொண்டவர். திரு. **சண்முகநாதன்** அவர்கள் பாடசாலை நாட்களில் இருந்தே எழுத்துத் துறையில் ஈடுபட்டு வருகின்றார்.

***'முகில்வண்ணன்'*** என்னும் புனைபெயரைக் கொண்ட இவர் கதை, கட்டுரை, கவிதை, நாவல், சிறுவர் விடயங்கள் எனப் பல துறைகளிலும் எழுதி வருபவர். இலங்கைப் பத்திரிகைகள் அனைத்திலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்திருக்கின்றன.

எழுதத் தொடங்கி 50 ஆண்டுகள் என்பதை அறியும் போது வியப்படையாமல் இருக்க முடியவில்லை. சோர்வின்றி அவர் இப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டதையே இது காட்டுகின்றது.

இதுவரை....

| | | |
|---|---|---|
| 1. | அவள் ஒரு தமிழ்ப் பெண் | சிறுகதைத் தொகுதி |
| 2. | ஆனந்தக் கண்ணீர் | இரு குறுநாவல்கள் |
| 3. | இனியும் நான் இராமன் தான் | சிறுகதைத் தொகுதி |
| 4. | செல்லக்கிளி | நாவல் |
| 5. | முருகனருள் | முருகன் கவிதைகள் |
| 6. | ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயம் | வரலாறு |

என்னும் நூல்களை வெளியிட்டுள்ள இவர், இவரது எழுத்தாக்கங்கள் அனைத்தையும் வெளியிட வேண்டும் என்பதே என் அவா. இதன் மூலம் அவர் உலகறிந்த ஓர் எழுத்தாளனாக வரவேண்டும். இது பலருக்கும் ஓர் எடுத்துக் காட்டாக அமையும்.

50 ஆண்டுகள் எழுத்துலகில் நீடித்திருப்பது என்பது அசாத்தியமான காரியம். இது ஓர் இமாலயச் சாதனை என்றே கூற வேண்டும். இவ்வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாருக்கு கலாபூஷண விருது கிடைப்பது பொருத்தமானதாகும். இதையிட்டு நான் மிகவும் மகிழ்வெய்துகிறேன்.

இன்னும் பல சாதனைகளை நிறைவேற்ற வேண்டி இவர் பல காலம் சுகதேகியாய் வாழ வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**த. மகேஸ்வரன் ஜே.பி.**

பாண்டிருப்பு 01.
கல்முனை.
கை பேசி 071 6475413

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சிவஸ்ரீ க.ஐ. யோகராஜா ஐயர்**

(வானோசை, இந்துமதி அர்ச்சனா போன்ற சிற்றிலக்கியங்களின் ஆசிரியரும் சோதிடரும் இலக்கியவாதியுமானவர்)

அவர்கள் வழங்கிய வாழ்த்துரை

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' – என்ற பாரதியாரின் எண்ணம் போல் எண்ணித் துணிக கருமம். நன்மைகள் விளைய நன்மைகள் செய்வோம். நமக்கென உள்ளதைப் பிறர்க்குக் கொடுப்போம் என்ற பெரியோர் வாக்கின்படி, தன்னை உணர்ந்து செயற்படுபவர் எங்கள் ***முகில்வண்ணன்*** **வே. சண்முகநாதன்** அவர்கள்.

தான் அறிந்த நல்லவற்றை பிறருக்கும் தெரியப்படுத்த வேண்டும், இல்லையேல் தன் முன் ஏழு பிறவிக்கும் பின் ஏழு பிறவிக்கும் பாவங்கள் சூழும் என்று மகாபாரதம் உரைக்கின்றது. இந்த வாக்கியத்தைக் கடைப்பிடித்து ஒழுகுபவராக எனக்குத் தென்படுகின்றார்.

உண்மையுந்தான். எங்கள் குலதெய்வக் கோயிலாம் அன்னை **ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய** வரலாற்றை, பட்டைய ஆவணங்களை சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து பெற்று, ஆலயப் பெருமைகளை உலகறியச் செய்தவர். இப்போது அதனையே ஒரு தனி நூலாக ஆலய வரலாறு முழுவதையும் விபரமாகவும், பிறருக்குத் தெரியாத பாடல்களை எல்லாம் தொகுத்து அனைவரும் அறியத் தந்துள்ளார்.

இந்நூல் பாண்டிருப்பு மக்கள் அனைவரிடமும் இருக்க வேண்டியது என்பது என் அபிப்பிராயமாகும். இந்நூலில் நாமறியாத பல உண்மைகள் பல இடம் பெற்றிருக்கின்றன.

இளவயதிலிருந்து இலக்கியத்துறையில் ஈடுபட்டு, வானொலி, பத்திரிகைகளில் ஆக்கங்களை வெளியிட்டு வருவதோடு கவிதை, கதை, கட்டுரை, நாவல், குறுநாவல் என்று பல துறைகளிலும் தன் திறமையை வெளிப்படுத்தி வருபவர்.

***''அவள் ஒரு தமிழ்ப் பெண்''*** என்னும் சிறுகதைத் தொகுதியின் சிறுகதைகள் அவரின் சமூக விழுமியங்களை, மனித நேயத்தினை வெளிப்படுத்துவதாக இருப்பதைப் அறிந்து பலர் *''நல்ல எழுத்தாளன்''* எனப் பாராட்டியதை நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவேன். அடுத்த சிறுகதைத் தொகுதி **''இனியும் நான் இராமன் தான்''** நூலும் **''ஆனந்தக் கண்ணீர்''** குறுநாவல் நூலும் **''செல்லக்கிளி''** என்னும் பெரும் நாவலும் வெளிவந்து அவரது ஆற்றலை இனம் காட்டியது எனலாம்.

அதைத் தொடர்ந்து இப்போது, ஆலய வரலாறு பற்றிய நூலும், முருகன் மீது பாடப்பட்ட கவிதைகள் அடங்கிய **''முருகனருள்''** என்னும் கவிதைத் தொகுதியும் வெளிவந்து வேறொரு பரிமாணத்தை வெளிக் காட்டி நிற்கின்றது எனலாம். இதில் குறிப்பிடும் படியாக **ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில்** பாட வேண்டி ஊஞ்சல் பாடல் இடம் பெற்றிருப்பதைக் குறிப்பிடலாம். இந்த இரு சமய இலக்கிய வெளியீடுகளும் இவரது எழுத்தாற்றலுக்கு சிறப்புத் தருகின்றன.

இவரது எழுத்துத் திறமையும் கருத்துக்களின் உண்மைத் தன்மையும், இவருக்கு இரு வேறு சிறப்புகளுக்காக அரச விருதான **''கலாபூஷணம்''** இவ்வாண்டு அளிக்கப்பட்டு கௌரவிக்கப்படுகின்றார். கலாபூஷண விருதுக்கென யாரிடமும் தேடிச் சென்று நற்சான்றிதழ்கள் பெறாமல், இவரது தமிழ்த் திறமையைக் கண்டு கலாபூஷண விருது இலகுவாக அளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்

திறமைக்கு என்றும் முதலிடம் என்பதை உணர்த்துகின்றது. எனவே உயர்திரு **வேலுப்பிள்ளை சண்முகநாதன் (முகில்வண்ணன்)** அவர்களைப் பாராட்டுவதிலும் இறை ஆசியை வழங்குவதிலும் நான் திருப்தியடைகின்றேன். ஐம்பதாம் வருட ***பொன் விழா*** மலருக்கும் என் நல்லாசிகள். வாழ்த்துக்கள்.

**சிவஸ்ரீ க.ஐ. யோகராஜா ஐயர்**

வீமர் வீதி
பாண்டிருப்பு 02
கல்முனை.

தொ. பே. 067 2222442



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செங்கதிரோன் **த. கோபாலகிருஷ்ணன்**
(ஆசிரியர் செங்கதிர்) அவர்கள் வழங்கிய வாழ்த்துரை

**திரு. சண்முகநாதன் (முகில்வண்ணன்)** தொழிலால் ஒரு பொறியியலாளராக இருந்தாலும், இலக்கியத்தில் தன் ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளார். இதில் தன்னை இளமையில் இருந்தே ஈடுபடுத்தி வருகின்றார். அந்த வகையில் இவரது ஆக்கங்கள் பலரையும் கவர்ந்திருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. இவர் இலக்கியத்துறையில் கதை, கவிதை, நாவல், சிறுவர் இலக்கியம் என்று பல துறைகளிலும் தன் திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

அண்மையில் செல்லக்கிளி என்னும் நாவல் மட்டக்களப்பில் வெளியிடப்பட்டது. அதன் மூலம் அவர் தன் ஆளுமையை வெளிப்படுத்தியிருக்கிறார். கிழக்கிலங்கையில் நாவல் எழுதுபவர்கள் மிகக் குறைவு. அந்த வகையில் அமரர் அப்துல் ஸமது. அன்புமணி, செ. குணரெத்தினம் போன்றவர்களின் வரிசையில் முகில்வண்ணன் அவர்களும் முன்னிலை வகிப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

நாவல் மட்டுமின்றி சிறுகதை தொகுதிகளும் இவரால் வெளியிடப்பட்டு இவரது திறமை நிருபிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கவிதைகளையும் அவர் விட்டு வைக்கவில்லை. அதிலும் சிறந்த கவிதைகளை எழுதியவராக அவர், தான் ஒரு கவிஞர் என்பதையும் நிருபித்து இருக்கிறார். இன்னும் சிறுவர் இலக்கியம் படைக்கும் ஒரு சிலரில் இவரும் முக்கியத்துவம் பெறுகிறார். காரணம் இவர் 1970 களில் இருந்து சிறுவர் கதை, கவிதை, நாவல் என்பன எழுதியிருக்கிறார்.

எழுத்துலகில் 50 ஆண்டுகள் நிலைத்திருப்பது சாதரண விடயமல்ல. அந்த வகையில் இத்தனை ஆண்டுகள் எழுத்துலகில் நிலைத்திருந்து தொடர்ந்து இலக்கியம் படைத்து வரும் **முகில்வண்ணன்** இலக்கிய உலகில் முன்னோடி மட்டுமல்ல மூத்த எழுத்தாளருமாவார்.

இலக்கிய துறையில் பிரபலத்தை விரும்பாத இவர் தானும் தன் பாடுமாக 35இற்கு மேற்பட்ட நூல்கள் போடும் அளவிற்கு எழுதிக் குவித்திருக்கிறார். என்பது இலக்கிய உலகம் மகிழ்ச்சியடைய வேண்டிய விடயமாகும்.

அன்னாரின் சிறப்பை உணர்ந்து அவருக்கு இலக்கிய உலகு உரிய இடத்தை வழங்க வேண்டுமென்பது எனது எதிர்பார்ப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் இவருக்கு இந்து கலாச்சாரத்தினால் **'கலாபூசணம்'** விருது வழங்கி கௌரவித்திருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

அவரது எழுத்துக்கள் அனைத்தும் நூலாக வெளியாகும் போது அவர் சிகரத்தை தொட்ட எழுத்தாளராக இலக்கிய உலகம் இவரைக் கவனிக்கும் என்பது எனது திண்ணம்.

திரு. **முகில்வண்ணன்** அவர்களுக்கு எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**த. கோபாலகிருஷ்ணன் (செங்கதிரோன்)**

19, மாடிவீட்டுத் தெரு,
மட்டக்களப்பு.

தொ.பேசி : 0652227876
கை.பேசி : 0772602634



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகம்

எழுத்து உலகில் நான் 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்ததையிட்டு இந்த பொன் விழா மலரை வெளியிடுகிறேன். பிறரைப் போல் நான் 50, 60 ஆண்டுகள் என்று கூறாமல் அதற்கான ஆதாரத்தையும் இதில் காட்டியுள்ளேன்.

எழுத்து உலகுடன் நின்று விடாமல் எனது வாழ்க்கை வரலாற்றையும் அதில் நான் சந்தித்த சிரமங்களையும் கஷ்டங்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

அத்துடன் பொதுச் சேவையில் நான் ஆற்றிய பணிகளையும் அதில் நடந்தவைகளையம் இதில் குறிப்பிடத் தவறவில்லை.

எழுத்துலகு பற்றிய முழு விபரங்களும் துலாம்பரமாக இதில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இதில் யாரையும் புண்படுத்தும் நோக்கம் எனக்கிருக்கவில்லை. ஒவ்வொரு பத்திரிகை ரீதியாகவும், அதன் ஆசிரியர்கள் பற்றியும் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறேன்.

எனக்கு நடந்தவைகளை நான் கூறும் போது சிலருக்கு சிரமமாக இருந்தால் நான் எதுவும் செய்வதற்கில்லை. சில வேளை உண்மை சுடும், அதற்காக நான் உண்மையை மறைத்து எழுதவில்லை.

எனக்கு ஆதரவு தந்தவர்களைக் குறிப்பிடும் போது என்னை அழிக்க நினைத்தவர்களையும் நான் குறிப்பிட்டே ஆக வேண்டியிருக்கிறது. இது அவர்களைத் தவறாகக் கூற வேண்டும் என்பதற்காக அன்றி எனக்கு நடந்தவைகளைப் படம் போட்டுக் காட்டவே எழுதியிருக்கிறேன்.

இல்லாவிட்டால் எனது வளர்ச்சி இன்னும் அதிகமாக இருந்திருக்கும் என்பது எனக்கு வேதனையைத் தந்திருக்கும் என்று நான் எண்ணலாம் அல்லவா? அந்த ரீதியில் நீங்களும் எண்ணிப் பாருங்கள்.

சில இடங்களில் கூறியது கூறல் என்ற தவறு இடம் பெற்றிருக்கலாம், அது நீங்கள் வேறு பக்கத்தை புரட்டிப் பார்க்காமல் இருப்பதற்காகவும், அந்தச் சந்தர்ப்பத்தை அவ்விடத்திலேயும் கூறிவிடுவது நல்லது என்பதற்காகவும் மீண்டும் கூறியிருக்கிறேன் மன்னிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் நீங்கள் இரசிப்பதை, வெறுப்பதை முடிந்தால் என்னுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். நானும் அவற்றை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். நடந்து முடிந்தது எதையும் இனித் திருத்த முடியாது. நடந்தது நடந்தது தான். நன்றி.

முகில்வண்ணன்
வே.சண்முகநாதன்.

நெசவு நிலைய வீதி
பாண்டிருப்பு – 01.
கல்முனை. இலங்கை.
தொ. பேசி 067 222 9948





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப வரலாறு

### அருச்சுனர் குடும்பம்

கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட காளிக்குட்டி வேலுப்பிள்ளை அவர்கள், பாண்டிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி மாரிமுத்து என்பவரை இளமையிலே திருமணம் செய்து கொண்டு பாண்டிருப்பு கிராமத்திலே வாழ்ந்து வந்தார்.

அவர் தொழிலால் அரச கொந்துராத்துக்காரராக இருந்தார். அந்நாளில் அவ்வாறு இருப்பது மிகக் குறைவாக இருந்த காலம். அப்படி இருந்த ஓரிருவரில் இவரும் ஒருவராக இருந்தார்.

அப்போது வாகன வசதி இல்லாத காலம். இப்போதே இரண்டு லொறிகளும் இரண்டு கார்களும் வைத்துக் கொண்டு தன் தொழிலைச் செய்து கொண்டு வந்தார் திரு. வேலுப்பிள்ளை அவர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாண்டிருப்பில் பிரசித்தி பெற்ற திரௌபதி அம்மன் ஆலயம் இருக்கிறது. இங்கே மகாபாரதக் கதை நடித்துக் காட்டப் படுவது வழக்கம். இது பதினெட்டு நாட்களுக்கு நடைபெறும். அதில் தருமர், வீமர், அருச்சுனர், நகுலன், சகாதேவன், திரௌபதி மற்றும் கிருஷ்ணர் ஆகியோரின் முக்கிய பாகங்களுக்கு, ஒவ்வொருவர் நின்றனர்.

இந்தக் கதாபாத்திரங்களில் ஒன்றான அருச்சுனர் பாகத்தை ஏற்று திரு வேலுப்பிள்ளை அவர்கள் ஆரம்ப காலம் முதல் இறக்கும் வரை அருச்சுனராக இருந்தார். இதனால் அவர் அருச்சுனர் வேலுப்பிள்ளை என்றும், அவரது குடும்பம் அருச்சுனர் குடும்பம் எனவும் அழைக்கப் படலாயிற்று. அது இன்றுவரை நடைமுறையில் உள்ளதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

திரு. வேலுப்பிள்ளை, திருமதி மாரிமுத்து குடும்பத்தில் பதினொரு குழந்தைகள் பிறந்தனர். அவர்களில் இருவர் இறந்து போக மிகுதி ஒன்பது பேர் உயிரோடு இருந்தனர். இதில் எட்டாவதாகப் பிறந்தவர் தான் திரு. சண்முகநாதன் அவர்கள். இதனோடு திருமதி மாரிமுத்துவின் இரு சகோதரிகள் மரணமடைய, கணவர்கள் வேறு திருமணம் முடிக்க, அவர்களின் ஒருவருக்குப் பிறந்த இரு பெண் குழந்தைகளையும், மற்றவருக்குப் பிறந்த ஒரு ஆண், ஒரு பெண் குழந்தையையும் இவர்களே எடுத்து வளர்த்தனர்.

ஆக மொத்தம் பதின்மூன்று குழந்தைகள் உள்ள பெரிய குடும்பமாக அவர்கள் குடும்பம் இருந்தது. எல்லோரையும் ஒரு தாய் பிள்ளைகள் போல் வளர்த்து வந்தார் அருச்சுனர் வேலுப்பிள்ளை. இவ்வாறு தான் அவர் பெயர் பின்னாளில் வழங்கலாயிற்று. அவருடைய மனைவி கூட அருச்சுனர் பெண்சாதி என்றே அழைக்கப்பட்டு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வாழ்ந்த தெருவில் அவருடைய மூன்று குடியிருப்பு வீடுகள் இருந்தன. அவர் வாழ்ந்த தெருவும் இன்று வரையும் அருச்சுனர் வீதி என்றே அழைக்கப் படுவதைக் காணலாம்.

குடும்பம் பெரியது என்று கூறியிருந்தோம் அல்லவா? அக்கம் பக்கத்து வீட்டார் கூட அங்கு வந்திருந்து வீட்டு வேலைகள், சமையல் வேலைகளைச் செய்து கொடுத்து விட்டுச் சாப்பிட்டு விட்டுப் போவது வழக்கமாக இருந்தது. அக்கம் பக்கத்து வீட்டுக்கு வேலிகள்(எல்லைகள்) கூட இருக்கவில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

இது மட்டுமா? திருமணமான மக்கள் கூட அவரது மரணம் வரை ஒன்றாகவே கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தனர். அதுவரை அவரது மூத்த மகள் அவர்களுடன் இருந்தே ஆறு குழந்தைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கியது அந்தக் கூட்டுக் குடும்பத்தில் இருந்து தான். இதே போன்று தான் இன்னுமொரு மகளும். அது மட்டுமின்றி அவர்களுடைய கணவன்மாரும் அருச்சுனர் வேலுப்பிள்ளையிடமே வேலை பார்த்து வந்தனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

1955ல் நிகழ்ந்த அவருடைய திடீர் மரணம் பல மாற்றங்களைத் தோற்றுவித்தது.

அக்கம் பக்கத்து வீட்டு வேலிகள் உடனே கட்டப்பட்டன. வேலைகளில் முதலீடு செய்த பணத்தை எடுப்பதற்கு தெரியாது குடும்பம் தவிக்க அதை கையாடி விட்டார்கள். வாகனங்கள் விற்கப்பட்டன. வேலைகளுக்கு பட்ட கடன் சுமையைத் தாங்க முடியாது வீடுகள் விற்கப்பட்டன.

குடும்பம் கஷ்டமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது. மகள் – மருமக்கள் தாங்களும் தங்கள் குடும்பமுமாக வேறு வேலைகளைத் தேடிக் கொண்டு தனிக் குடித்தனம் சென்று விட்டனர். இது சுமையைக் குறைக்கும் ஏற்பாடாகச் செய்யப்பட்டது.

இப்போது இந்தக் கஷ்டத்தின் மத்தியில் தன் குடும்பத்தை பாதுகாக்கும் பொறுப்பை அருச்சுனரின் மனைவி துணிந்து கையிலெடுத்தார். பலவிதமான உடற் பாடுகளைப் பட்டு குழந்தைகளைப் படிப்பித்து ஆளாக்கினார். எல்லா மக்களும் நன்கு படித்து ஆளாகி வேலை தேடிக் கொண்டு மணம் புரிந்து கொண்டு நல்ல வாழ்க்கை வாழ்ந்ததை அந்தத் தாய் கண்டு உள்ளம் பூரித்தாள்.

இவ்வாறு வாழ்ந்த குடும்பத்தில் எட்டாவதாகப் பிறந்தவர் தான் வேலுப்பிள்ளை சண்முகநாதன் என்று கண்டோம். இவரின் பிறப்பைப் பற்றி அவரின் தாயார் கூறுவதைக் கேட்போம்:

**''நான் ஏழு மாதமாக இருந்த போது திரௌபதி அம்மன் ஆலய உற்சவம் நடந்து கொண்டிருந்தது. அப்போது நான் ஒரு கனவு கண்டேன். நான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமரிடம் தீர்த்தம் பெறுகிறேன். அதில் இரண்டு மாதுளை வித்துக்கள் கிடக்கின்றன. அதை நான் தருமரிடம் காட்டுகிறேன். ''உனக்கு ஆண் குழந்தை பிறக்கப் போகிறது அதற்கு கணேஷ் என்ற பெயர் வை'' என்று அவர் என்னிடம் கூறினார்.

அப்படியே ஆண் குழந்தை 1942ல் டிசம்பர் மாதம் 17ம் திகதி அன்று பிறந்தது. ஆனால் பிள்ளைப் பதிவு வைத்த போது அவர் பையனுக்கு சண்முகநாதன் என்ற பெயர் வைத்து விட்டார். நான் ஏற்கனவே கூறியிருந்ததை மறந்து விட்டார். அப்போது நான் இதை ஞாபகம் ஊட்டினேன். அதற்கென்ன பதிவுப் பெயர் சண்முகநாதனாக இருக்கட்டும் அழைக்கும் பெயராக கணேஷை வைத்துக் கொள் என்று சொன்னார்.''— இது தாய் மாரிமுத்து. ஆனால் ஊரவர் யாருக்கும் அவரது பெயர் சண்முகநாதன் என்று தெரியாது. அது பாடசாலையுடன் நின்று விட்டது. ஊரில் **கணேஷ்** என்றால் தான் அனைவருக்கும் தெரியும்.

இவரின் தாயார் மாரிமுத்து வேலுப்பிள்ளை பேரப்பிள்ளைகளையும் பூட்டப் பிள்ளைகளையும் கண்ட பின்னர் 2001ல் நிம்மதியாகக் கண்ணை மூடினார்.

இந்த இரு பெயர்களுடனும் இருந்த திரு. சண்முகநாதன் அவர்கள் தேசியப் பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பித்த போது தனது மூன்றாவது பெயராக **''முகில்வண்ணன்''** என்னும் பெயரைத் 1961ல் தேடிக் கொண்டார். வேறு பல புனை பெயர்கள் இருந்த போதும் இதுவே இப்போதும் பிரபலமாக இருக்கிறது.

தொகுத்து தருவது:
பேரன் சு. உமாச்சந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது குடும்பம்



அருச்சுனர் குடும்பத்தில் எட்டாவதாகப் பிறந்த நான் சண்முகநாதன் என்ற பெயரை வைத்துக் கொண்டாலும், அந்தப் பெயர் பாடசாலையுடன் மட்டுப் படுத்தப்பட்டிருந்தது.

குடும்பத்திலும் சொந்தங்களி டத்தும் ஊரிலும் பலபேரும் அறிந்த பெயராக இருந்தது, கணேஷ் என்னும் பெயர் தான்.

ஊரவருக்கு எனது உண்மைப் பெயர் தெரிந்திருக்கவில்லை. அந்த உண்மைப் பெயரை அவர்கள் அறிய முன்னர் எனது புனைபெயர் அறிமுகமாகி பிரபலம் அடையத் தொடங்கி இருந்தது. அதனால் அடுத்து அவர்கள் அறிந்த பெயர் **'முகில்வண்ணன்'** என்பதாகும்.

இதற்கு பத்திரிகைகளுடன் பெரும் பங்காற்றியவர் எங்களூரில் கடமையாற்றிய தபால் விநோக ஊழியர் தான் என்பதை நான் குறிப்பிடுதல் வேண்டும். எனக்கு இந்தப் பெயரில் கடிதங்கள் வரத் தொடங்க அதை ஊர் மக்கள் பலரிடமும் என்னைப் பற்றிக் கூறி விளம்பரப்படுத்தினார்.

அப்பாவின் மறைவுக்குப் பின்னர் எங்கள் குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டது என்னவோ உண்மை தான். அம்மாவுடன் நாங்களும் சேர்ந்து பாடுபட்டோம். எனது படிப்புக்கு நான் கல்வி பயின்ற, அப்போது தனியார் கல்லூரியாக இருந்த கல்முனை பற்றிமாக் கல்லூரியின் வணக்கத்துக்குரிய சகோதரர்களையும் நினைவு கூரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஜி.சி.ஈ (ஆங்கிலம்) படிக்கும் போது எனது தாயின் வேண்டுதலை ஏற்று எனக்கு கடனுக்கு பாடசாலைப் புத்தகங்களைத் தந்து உதவியதுடன் மதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவையும் தந்து உதவியது அவர்கள் தான். இது எனது வாழ்நாளில் மறக்கக் கூடிய ஒன்றல்ல.



பாடசாலைப் படிப்பில் திறமையாகச் சித்தி அடைந்த என்னை உயர்தரம் படிக்கும் படி வற்புறுத்தினர் அதிபரும் ஆசிரியர்களும். அப்போது பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றிருந்தது. எனது குடும்ப நிலமை அதற்கு இடந்தரவில்லை. ஆகவே நான் வேலை தேடி வெளிக்கிட்டேன். அப்போது எனது வயது எனக்கு இடந்தரவில்லை. எங்கு சென்றாலும் வயது என்னைத் தட்டி விட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962ல் பாடசாலையை விட்டு விலகிய நான் 1963 –1964 வரை கரடியனாறு போதனா பாடசாலையில் விவசாயக் கல்வி கற்றேன். அங்கு பலவிதமான தொழிற் கல்வியைக் கற்கக் கூடியதாக இருந்தது.

அதன் பின்னர் எனது மைத்துனர் திரு. இராசையா அவர்கள் திருகோணமலையில் வேலை செய்து கொண்டிருந்த போது அங்கு அவருடன் வேலை செய்வதற்கு சென்றிருந்தேன். அங்கு இருந்த போது பல வேலைகளுக்கும் மனுப் போட்டு பரீட்சைகளுக்கும் சென்று வந்து கொண்டிருந்தேன்.

எந்த வேலையும் கிடைக்கவில்லை. ஆனால் 1965ல் எனக்கு தொழில் நுட்ப உத்தியோகத்தர் வேலை கிடைத்தது. அதை அடுத்து பல வேலைகளுக்கும் அழைப்பு வந்தது. ஆனால் ஏற்கனவே நான் இதில் சேர்ந்து விட்டேன். எனக்குத் தடுமாற்றமாக இருந்தது.

அந்த வேலையை விடுவதாக எண்ணிக் கொண்டு ஒரு கிழமை விடுமுறை வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். எந்த வேலை எடுப்பது? எதை விடுவது? என்று இருந்த போது அண்ணன் இது பதவி உயர்வுக்குரியது. ஆகவே இதிலே தொடர்ந்து இருக்கும்படி கூறினார். அதன்படி மீண்டும் பழைய வேலைக்கே வந்து விட்டேன்.

1967ல் காதல் திருமணம் புரிந்து கொண்டேன். எனது மனைவியின் பெயர் கண்மணி. நான் எட்டாம் ஆண்டு படிக்கும் போதே இந்தப் பெண்ணை திருமணம் செய்வதாகக் கனவு கண்டு வீட்டில் எல்லோருக்கும் கூறினேன். எல்லோரும் சேர்ந்து என்னைப் பகிடி பண்ணினர்.

நான் அவளுடைய அண்ணனிடமும் கண்ட கனவைச் சொல்லத் தவறவில்லை. அவளை நான் விரும்புவதற்கு இந்த கனவு கூட ஒரு காரணமாக இருக்கலாம். அதன் பின்னர் அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கக் கிடைத்த சந்தர்ப்பமும் ஒரு காரணமாக இருக்கலாம்.

திருமணம் என்று வந்த போது வீட்டில் இதற்கு எதிர்ப்பு இருந்தது. இதனைச் சமாளிக்கும் பொருட்டு எனது மனைவியின் அண்ணருக்கு எனது ஒரு தங்கையை மணம் முடித்து வைத்தேன். இது மாற்றுச் சடங்காக அமைந்தது. 1967ல் எனது மூத்த மகள் ரோஹினியும் 1969ல் எனது இரண்டாவது மகன் பிரேம்நந்தகுமாரும் 1978ல் எனது மூன்றாவது மகன் சரேண்நந்தகுமாரும் பிறந்தனர்.

இந்த இடத்தில் எனது மனைவி பற்றிச் சில கருத்துக்கள் சொல்ல வேண்டி இருக்கிறது. ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் இருப்பாள் என்று கூறுவார்கள். ஆனால் எனது நடவடிக்கைகளுக்கு முன்னாலே எனது மனைவி இருந்திருக்கிறாள். சில வேளைகளில் அபிப்பிராயங்கள் ஆலோசனைகள் கிடைக்கும். ஆனால் மறுப்புக் கூறியதாக இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் மணம் முடித்த பின்னர் எனது சகோதரிகளுக்கு மணம் முடித்து வைத்தேன் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தேன். ஏற்கனவே திருமணம் முடித்த சகோதரிகளும் நான் தங்களுக்கும் உதவ வேண்டும் என்று கேட்க அவர்கள் கேட்டதெற்கெல்லாம் உதவினேன்.

இத்தனைக்கும் என் மனைவி வாய் திறந்து எதுவுமே சொன்னதில்லை. நான் சொன்னால் சரிதான். எந்த மறுப்போ வாய் முணுமுணுப்போ ஒரு நாளும் இருந்ததில்லை.

ஆனால் அம்மா சொன்னார், நான் தங்கைக்கு வீடு கட்டிக் கொண்டிருந்த போது, **''நீ பதவி உயர்வு பெறப் போகிறாய் உனக்கென ஒரு நல்ல வீடு இல்லை. பெரியவர்கள் வீட்டுக்கு வந்து போகிறார்கள். ஆகவே முதலில் நீ வீட்டைக் கட்டிக் கொள். அதன் பின்னர் தங்கைக்குக் கட்டிக் கொடுக்கலாம்''** அது மட்டுமா வேறு பலரைக் கொண்டும் அம்மா சொல்ல வைத்தார். ஆனால் நான் தீர்மானம் எடுத்தால் அது தான் முடிவாக இருக்கும்.

எனக்கு இருக்கும் வீடு இதுதான். என்னை மதிப்பவர்கள் விரும்பினால் வரட்டும். எனது வீட்டை மதிப்பவர்கள் வராமல் இருந்தால் பரவாயில்லை என்று கூறி இருக்கிறேன்.

இத்தனைக்கும் அந்த வீட்டிலே பொறியியலாளர்கள் மட்டுமல்ல அத்தியட்சக பொறியியலாளர்கள் கூட வந்து சென்றிருக்கிறார்கள். இதனால் எனது கௌரவம் எந்த வகையிலும் குறைந்ததாக நான் கருதியதே இல்லை. தங்கைக்குரிய வீட்டைக் கட்டி முடித்த பின்னரே வீட்டுக் கடன் எடுத்து எனக்காக ஒரு வீட்டைக் கட்டினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை நிமித்தம் இலங்கையின் வெவ்வேறு பாகங்களில் வேலை செய்து வந்த நான் எனது பதவி உயர்வுக்கு தடையாக இருந்த சிங்களம் கற்றலை படித்து முடித்தேன். அதனைத் தொடர்ந்து எனது பதவி உயர்வுகள் அவ்வப்போது தங்கு தடையின்றி கிடைத்துக் கொண்டிருந்தன.

1981ல் பொறியியலாளர் பதவியைப் பெற்றேன். இதுவே கிடைத்த உயர்ந்த பதவியாகும். சில பிரச்சினை (சிங்களம்–தமிழ்) காரணமாக தொடர்ந்து பதவியில் நீடிக்க முடியவில்லை. இதனால் அரசாங்கத்தை விட்டு வெளியேற தீர்மானித்தேன்.

அதன் படி மதிப்பீட்டாளராக **(Quantity Surveyor)** சவூதி அரேபியா சென்றேன். அதில் இரு வருடங்கள் சேவையாற்றி விட்டு நாடு திரும்பிய போது 1983 ஆடிக் கலவரம் காரணமாக திரும்பிச் செல்ல முடியாது போயிற்று.

ஆனால் கலவரம் வரமுன்னர் – திரும்பிப் போக முன்னர் கொண்டு வந்த காசையும் இன்னும் கடன் பட்டும் வீட்டு வேலைகளைச் செய்து முடித்தேன். காரணம் வெளியே சென்றதும் பணமனுப்பிக் கடனை அடைத்து விடலாம் என்று எண்ணி இருந்தேன். நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைப்பதுதானே வழமை. என்னால் வேலைக்குப் போக முடியாமல் போய் விட்டது.

ஊரில் வீடு கட்டியிருந்த கடன் இருந்தது. பிள்ளைகள் மூவரும் பாடசாலை சென்று கொண்டிருந்தனர். தொழில் இல்லை. எனது குடும்பத்தை மீண்டும் கஷ்டம் பற்றிக் கொண்டது. அதிலிருந்து மீள பல முயற்சிகளைச் செய்ய வேண்டி இருந்தது.

இருந்த போதும் ஊரில் பல பொதுப் பணிகளில் சேவையாற்றக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. யாரிடமும் கையேந்தாமல் குடும்பத்தை நடத்திக் கொண்டு செல்லக் கூடியதாக ஒரு வியாபாரம் செய்யக் கூடியதாக இருந்தது.

**அருச்சுனரின் மகன்** என்று எனக்கிருந்த பெயர் இப்போது அருச்சுனா குடும்பம் என்று எனது குடும்பத்தையும் பற்றிக் கொண்டது.

காலம் வெகு வேகமாக உருண்டோடியது.
பிள்ளைகள் வளர்ந்தனர். படிப்பைப் பயந்து பயந்து முடித்தனர். பல்கலைக்கழகம் செல்ல முடியவில்லை. அவர்களைப் பாதுகாக்கவும் முடியவில்லை. பயந்து பயந்து இடம் மாற்றி வைக்க வேண்டி இருந்தது.

பொதுச் சேவை எனது உயிருக்கும் ஆபத்தைக் கொண்டு வந்தது. என்னுடன் பணியாற்றிய ஒருவரின் உயிருக்கு ஆபத்து நிகழ்ந்த போது, 1990ல் நான் ஊரை விட்டே செல்ல வேண்டி ஏற்பட்டது.

வியாபாரத் தலங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. வீட்டிலும் பொருட்கள் சூறையாடப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டதிலும் ஒரு நல்லது நடக்கும் என்பார்கள். நாங்கள் கொழும்பில் வந்து இருந்தோம். அப்போது எனது மகனை வெளிநாடு அனுப்பக் கூடியதாக இருந்தது. அவர் சென்றதால், மகளுக்கு ஒரு வெளிநாட்டு மாப்பிள்ளையை மணம் முடித்து வெளிநாட்டுக்கு அனுப்பினேன்.

அடுத்து மற்ற மகனையும் வீட்டில் வைத்திருக்க முடியவில்லை. அவனும் வளர்ந்து விட்டான். கைது செய்யப்படுகிறான். முகமூடிகளுக்கு முன்னால் கொண்டு செல்லப்படுகிறான் என்று தகவல் வந்தது. இனி அவனையும் ஊரில் வைத்திருக்க முடியாது என்ற நிலையில் அவனது படிப்பை (ஜி.சி.ஈ. ஏ/எல்) இடையில் நிறுத்திவிட்டு வெளிநாடு அனுப்ப வேண்டி ஏற்பட்டது. மூத்த மகனின் முயற்சியுடன் இது கைகூடிற்று.

இப்போது மூன்று குழந்தைகளும் வெளிநாட்டில் இருக்க நாங்கள் இருவரும் ஊரில் இருக்கிறோம். மூவருமே மணம் முடித்து குடும்பமாக வெளிநாட்டில் வசிக்கின்றனர்.

**மூத்த பெண் ரோஹினி** எங்கள் ஊரைச் சேர்ந்த, பிரான்ஸில் வசிக்கும், தேவா என்கிற தவராசா என்பவரை மணம் முடித்து இருக்கிறாள். இவர்கள் திருமணம் கொழும்பில் நடைபெற்றது. பிரான்ஸ் சென்று இப்போது லண்டனில் வசிக்கிறாள். இரு பெண் குழந்தைகளைப் பெற்றிருக்கிறாள். அதில் மூத்தவள் இலக்கியா ஜி.எஸ்.சி.ஈ படிக்கிறாள். இவள் ஆங்கிலத்தில் கவிதைகள் எழுதுகிறாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையவள் ஸ்ருதி. இப்பொது 8ம் ஆண்டு படிக்கிறாள். 5ம் ஆண்டு படிக்கும் போதே பாடசாலைப் பத்திரிகைக்கு **(The Challenge)** ஆசிரியராக இருந்திருக்கிறாள். இவளுக்கு சிறுவர்களுக்கு கதை எழுதி புத்தகமாக வெளியிட வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அதற்கு இப்போது படிப்பு தடையாக இருக்கிறது என்று கவலையடைகிறாள்.

இவள் 7ம் ஆண்டில் 120 மாணவர்களில் முதலாம் இடம் பெற்றதற்காக பாராட்டிக் கௌரவிக்கப்பட்டிருக்கிறாள். இருவரும் படிப்பில் மிகக் கெட்டிக்காரர்கள். இவர்கள் இப்போது லண்டனில் இருக்கிறார்கள்.

நான் எழுத்தாளனாக இருந்தேன். ஆனால் எனது குழந்தைகளுக்கு எழுத்தில் பற்று ஏற்படவில்லை. ஆனால் எனது பேரக் குழந்தைகளுக்கு அதில் ஆர்வம் ஏற்பட்டிருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

**அடுத்த மகன், பிரேம்நந்தகுமார்** மட்டக்களப்பைச் சேர்ந்த குமுதினி என்னும் பெண்ணை மணம் முடித்திருக்கிறான். அவர்கள் திருமணம் இந்தியாவில் நடந்தது. அவர்கள் ஒரு மகனையும் ஒரு மகளையும் பெற்றிருக்கிறார்கள். மகன் ரிஷிகேஷ் 4ம் ஆண்டு படிக்கிறான். மகள் ஸ்மிருதி 1ம் ஆண்டு படிக்கிறாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளைய மகன் சரேன்நந்தகுமார்** கல்முனையைச் சேர்ந்த மல்ஷா பியுமலி (பியுமி) யை அண்மையில் 2006ல் தான் மணம் முடித்தவன். இவர்கள் திருமணம் பிரான்ஸில் நடந்தது. அவனுக்கு ருக்ஷான் என்னும் மகன் 2009ல் பிறந்து இருக்கிறான். இவர்கள் இருவரும் பிரான்ஸில் வசிக்கிறார்கள்.




இவர்களுக்குப் பிறந்த பேரக் குழந்தைகள் மட்டுமின்றி எனது சகோதர சகோதரிகளின் மகள், மகன்மாருக்குப் பிறந்த பேரக் குழந்தைகள் நிறையப் பேர் இப்போது எனக்கு இருக்கிறார்கள். இதைவிட மகிழ்ச்சி வேறேது?

இரண்டு மகன்மாரும் எனது புத்தக வெளியீட்டுக்கு பண உதவி புரிகிறார்கள்.

இவர்களைப் பார்ப்பதற்காக இருமுறை நாங்கள் வெளிநாடுகளுக்குப் பயணம் சென்றிருக்கிறோம்.

இதுவே எனது சிறிய குடும்பத்தின் கதைச் சுருக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது பாடசாலைக் கல்வி

1942ல் டிசம்பரில் பிறந்த நான் எனது ஆரம்பக் கல்வியை பாண்டிருப்பு மெதடிஸ்த மிஷன் கலவன் பாடசாலையில் ஆரம்பித்தேன். என்னைப் பாடசாலையில் சேர்க்க எனது தாய் பெரும் பாடுபட்டாள். என்னைத் தூக்கிக் கொண்டு பாடசாலையில் விட்டு வர ஆசிரியர்கள் என்னை வகுப்பறையில் அடைத்து வைப்பார்கள். நான் அழுது ஆர்ப்பாட்டம் செய்ததும் திறந்து விடுவார்கள். அம்மா வீடு வந்து சேர முன்னர் பாதையின் மறு பக்கமாக ஓடி நான் வீடு வந்து விடுவேன். தினசரி இதுவே நிகழ்வாக இருந்தது.

அம்மாவும் விக்கிரமாதித்தன் போல் விடாது தினசரி முயற்சி செய்து என்னை பாடசாலையில் இருந்து கல்வி கற்கும்படி செய்தார். தாயின் முயற்சி வெற்றி பெற்றது. அப்பாடசாலையில் 5ம் ஆண்டு வரையே வகுப்புகள் இருந்தன.

நாலாம், ஐந்தாம் ஆண்டுகள் படிக்கும் பொழுதே பாடசாலைப் பொறுப்புகள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. பாடசாலை ஆரம்பமாக முன்னர் தலைமை ஆசிரியரிடம் இருந்து திறப்பை எடுத்து வந்து கதிரை வாங்குகளை ஒழுங்கு பண்ணி வகுப்புக்களை ஆயத்தம் செய்வது எனது பணியாக இருந்தது.

அதே போன்று பாடசாலை முடிவடைந்ததும் மீண்டும் அவற்றை அறைகளில் எடுத்து வைத்துப் பூட்டிக் கொண்டு திறப்பை தலைமை ஆசிரியரிடம் கொண்டு சென்று கொடுக்க வேண்டும். இந்தப் பொறுப்புகளால் ஒரு நாளும் லீவு எடுக்காமல் தினசரி ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்லும் பழக்கம் ஏற்பட்டது.

இதன் காரணமாக எனது இரண்டாவது அக்காவின் திருமணத்தின் போதும் எத்தனை பேர் தடுத்தும் பாடசாலைக்குச் சென்று வந்தது நல்ல ஞாபகம் இருக்கிறது.

**(இதன் ஞாபகார்த்தமோ என்னவோ எனது இரண்டாவது மகன் (ஓ.எல்) படிக்கும் போது ஒரு நாளும் விடுமுறை எடுக்காமல் பாடசாலைக்குச் சென்று வந்திருக்கிறான். அதற்கு தாயை பாடசாலைக்கு அழைத்துப் பாராட்டி கௌரவித்து இருக்கிறார்கள்)**

ஐந்தாம் ஆண்டு சித்தி அடைந்ததும், வேறு பாடசாலைக்குச் செல்ல வேண்டி இருந்தது. கல்முனை பற்றிமாக் கல்லூரியில் எனது அண்ணன் கல்வி கற்றதால் அங்கு எனக்கு இலகுவாக இடம் கிடைத்தது. இது ஒரு தனியார் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை வெஸ்லியன் மிசனரிமார் ஸ்தாபித்திருந்தனர். இது அப்போது சென் ஜோசப் சபை சகோதரர்களின் நிர்வாகத்தில் இருந்தது.

கல்முனை பற்றிமாக் கல்லூரிக்கு சென்ற போது எனது காதில் கடுக்கன் (கம்மல்) இருந்தது. அது அப்பாவுக்கும் இருந்தது. அண்ணனுக்கும் இருந்தது. அண்ணர் பாடசாலைக்குச் சென்றதும் கழட்டி இருப்பார். நான் சென்றதும் அங்குள்ள மாணவர்கள் என்னை 'சைட் லாம்ப்' என்று பகிடி பண்ணத் தொடங்கினார்கள். வீட்டில் வந்து அழுது நானும் கழட்டிவிட்டேன். என்றாலும் அந்தப் பெயர் மறையச் சில நாட்கள் எடுத்தது.

அது ஆங்கிலப் பாடசாலை அங்கே ஆங்கிலக் கல்விதான் அதிகம். இருந்தாலும் ஏழாம் ஆண்டுவரை தமிழில் படிக்கக் கூடியதாக இருந்தது. நான் எட்டாம் ஆண்டு படிக்கும் போது 1955ல் எனது தந்தை இறைபதம் எய்தினார்.

அந்த வருடம் எனது குடும்பம் பல சிக்கல்களில் மாட்டி பெரும் கஷ்டத்துக்கு உள்ளானது. அந்த வருடம் நான் சித்தி எய்தாததால் வகுப்பேற்றம் பெறவில்லை. மீண்டும் அடுத்த வருடமும் ஜே.எஸ்.சி வகுப்பிலே இருக்க வேண்டி ஏற்பட்டது.

ஆனால் பின்னர் இரட்டை வகுப்பேற்றம் எனக்குக் கிடைத்தது. இருந்த போதும், அது நான் எஸ்.எஸ்.சி. (விஞ்ஞானம்) மூன்று வருடம் கற்க வேண்டிய கல்வியாகையால் ஒரு வருடத்தை விட்டு முன்னே செல்ல முடியவில்லை.

அத்துடன் இங்கே தமிழைத் தவிர மற்ற எல்லாப் பாடங்களும் ஆங்கிலத்திலே போதிக்கப்பட்டன. ஆக்வே ஆரம்பத்தில் இருந்தே கற்க வேண்டும் என்ற அண்ணனின் வழிகாட்டலுக்கு அமைய அவ்வாறே செயற்பட்டேன்.

இந்தக் காலத்தில் **தமிழ் மன்றத்துக்குத் தலைவனாக, தலைமை மாணவ தலைவனாக, வாசிகசாலைக்குப் பொறுப்பாளனாக, வகுப்பில் தமிழ் பேசுபவர்களிடம் தண்டப் பணம் அறவிடுபவனாக** இருந்தேன். அப்போது ஒரு தமிழ் வார்த்தை பேசினால் ஐந்து சதம் அறவிடப்பட்டது. இது ஆங்கிலக் கல்வியில் எங்களைப் பரீட்சயம் பெறுவதற்காக செய்யப் பட்டது.

பாடசாலையில் கல்வி கற்ற போது நான் ஒரு பேச்சாளனாகவே இருந்தேன். ஆமாம் எப்போதும் ஆயத்தமான பேச்சாளனாக இருந்தேன். அப்போது பாடசாலையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில், வரவேற்பாக இருக்கட்டும், ஆசிரியர்கள் ஓய்வு பெறுவதாக இருக்கட்டும், யாரும் விசேச விருந்தினர் வருகையாக இருக்கட்டும் அதற்கு என்னைத் தான் பேசச் சொல்வார்கள்.

மாகாண, மாவட்ட பேச்சுப் போட்டிகளிலும் பங்கு பற்றியிருக்கிறேன். இது தமிழ் மன்றம் தந்த பயிற்சி என்று சொன்னால் மிகையாகாது. இதை ஏன் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், இதில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிப்பிடத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1959ல் பத்திரிகையில் கதை எழுதிய பின்னர் மீண்டும் தேசியப் பத்திரிகையில் 1961ல் எழுதத் தொடங்கினேன். அப்போதும் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தேன். எனது பிரவேசம் **தினகரன்** பத்திரிகை மூலமாக இடம் பெற்றது. அப்போதிருந்து எனது பேச்சுக் குறைந்து எழுதுவது கூடிவிட்டது. இந்த மாற்றம் என்னில் எப்படி ஏற்பட்டது என்று எனக்கு விளங்கவில்லை.

நான் ஆரம்பத்தில் செல்வந்தக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், தந்தையின் இழப்புக்குப் பின்னர் அதை இழந்திருந்தேன். ஆயினும், எனது உடல் அமைப்போ என்னவோ எப்போதும் அவ்வாறே எல்லோரையும் கணிக்க வைத்தது. ஆசிரியர்கள் அனைவரும் என்னோடு அன்பாகவே இருந்தனர்.

அது தனிப்பட்டவர்களின் கல்லூரி. அங்கே கற்பிக்கும் ஆசிரியர்கள் சம்பளம் எடுத்ததும் இடைவேளை நேரத்தில் அதைத் தங்கள் வீட்டுக்கு கொண்டு செல்லும் பொறுப்பையும் என்னிடம் தருவார்கள். அதைவிட பாடசாலை சம்பந்தப்பட்ட பணப் பொறுப்புகளும் என்னிடமே ஒப்படைக்கப்பட்டன.

கல்லூரியில் பயின்ற போது, எனது தமிழ் ஆசான் இளவாலையைச் சேர்ந்த இ. சு. நடராஜா பி. ஏ. (கல்வியில் டிப்பிளோமா) பெற்றவர் எனது தமிழ் அறிவில் அதிக கவனம் செலுத்தினார். 1959ல் கல்லூரிப் பத்திரிகையில் **(The Fatimite)** முதல் கதையை எழுத வைத்தவர் அவர் தான். நான் **'ஆம்பல்'** என்னும் கையெழுத்துப் பத்திரிகையை கல்லூரியில் படிக்கும் போது வெளியிட்ட வேளை ஆலோசகராக இருந்து வழி நடத்தியதும் அவர்தான்.

நான் எழுத்துத் துறையில் இவ்வளவு உயர்ந்ததற்கு அவரையே காரணமாகக் கருதுகின்றேன். அந்தக் குருவுக்கு உரிய மதிப்பையும் மரியாதையையும் நான் என்றும் என் உள்ளத்தில் கொண்டிருக்கிறேன். அவர் என்னை எப்போதும் புலவர் என்றே அழைப்பார். அது ஏனென்று எனக்கு அப்போது விளங்கவில்லை. இதனால் எனது செல்லக்கிளி என்னும் நாவல் நூலை அன்னாருக்கு குருதட்சணையாக இப்போது சமர்ப்பித்திருக்கின்றேன்.

இவரைவிட, கல்லூரி அதிபர் வண. சகோ. இம்மானுவல் அவர்கள், வண. சகோ. மொண்டீன், அவர்கள், வண. சகோ. லீனஸ் அவர்கள், வண. சகோ. அல்போன்ஸ் அவர்கள், வண. சகோ. பிரான்சிஸ் அவர்கள் என்றும் என் பெரு மதிப்புக்குரியவர்களாக இருப்பவர்கள்.

இதில் எங்கள் கல்லூரி அதிபரே இறுதியாண்டில் எங்களுக்கு ஆங்கிலம் கற்பித்தவர். பரீட்சைக்கு விண்ணப்பித்த பின்னர், மீளப் பெறும் பரீட்சை நடந்தது. அதில் ஆங்கிலத்தில் சித்தி அடையவில்லை என்று என்னை பரீட்சை எடுக்க விடமாட்டேன் என்றார். நான் வீட்டில் வந்து அழுது ஆர்ப்பாட்டம் செய்து அண்ணனிடம் கடிதம் பெற்றுக் கொண்டு சென்றே அந்த வருடம் பரீட்சை எழுதினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை எழுதும் போது தனியார் கல்லூரியாக இருந்தது, பரீட்சை முடிவுகள் வெளிவந்த போது 1962ல் அரச கல்லூரியாக வந்து விட்டது. அப்போது அதற்கு திரு. ஏ.ஜே. வீரசிங்கம் என்பவர் அதிபராக வந்திருந்தார். நாங்கள் படிக்கும் போது எஸ்.எஸ்.சி என்று இருந்த கல்விச் சான்றிதழ், பரீட்சை முடிவுகள் வந்த போது ஜீ.சி.ஈ என்றாகி இருந்தது. பரீட்சை முடிவுகள் வந்த போது எமது முன்னாள் அதிபர் வண. சகோ. இம்மானுவல் அவர்களின் மதிப்பீட்டை எண்ணிப் பெருமிதப்பட்டேன். காரணம் அதி விசேச சித்தி, விசேச சித்தி, ஆகியவற்றுடன் ஏழு பாடங்களில் சித்தியடைந்திருந்த நான் ஆங்கிலத்தில் மட்டும் சித்தியடையவில்லை. நான் தான் அந்த வருடம் கல்லூரியில் அதிசிறந்த பெறுபேற்றைப் பெற்றிருந்தேன் என்பது பெருமையாக இருந்தது. புது அதிபரிடம் இருந்தும், முந்திய அதிபர் அப்போது உதவி அதிபராக இருந்தார், அவரிடம் இருந்தும் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டேன். ஆங்கிலத்தை மீண்டும் அடுத்த வருடம் எடுத்துச் சித்தி எய்தினேன்.

பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரை நாங்கள் ஜீ.சி.ஈ உயர்தரம் பயின்று கொண்டிருந்தோம். பரீட்சை முடிவுகள் வந்ததும் நான் தொடர்ந்தும் படிக்க முடியாத எனது குடும்ப நிலை காரணமாக தொழில் தேடுவதற்காக எனது விடுகைப் பத்திரத்தை பெறச் சென்ற போது புது அதிபர் அதனைத் தர மறுத்துவிட்டார். எத்தனையோ புத்திமதிகள் சொன்னார். தொடர்ந்து படிப்பதற்கு பல வழிகளைக் கூறினார்.

நல்ல ஒரு மாணவனை அவர் இழக்க விரும்பவில்லை என்பதையே அவரிடம் இருந்து கண்டு கொண்டேன். சில நாட்களுக்குப் பின்னர் மீண்டும் சென்று எனது திடமான முடிவைக் கூறி எனது சான்றிதழ்களைப் பெற்று வந்தேன். இது நிகழ்ந்தது 1962ல் அப்போது நான் பாடசாலையை விட்டு விலகினேன்.

இனித் தொழிலைத் தேடிக் கொள்ள வேண்டும். ஆதாரமாக இருந்த ஒரு அண்ணனும் திருமணம் முடித்து விட்டார். எனக்கு மூத்த சகோதரி ஒருவரும் இளைய சகோதரிகள் மூவரும் எனதும், அம்மாவினதும் பொறுப்பில் இருந்தனர். (பின்னர் தொழில் பெற்று திருமணம் முடித்தாலும் எனது சகோதரிகளின் திருமணத்தையும் முடித்து வைத்தேன்)

இனித் தொழில் தேடுவதே எனது வேலை. அரசாங்க வர்த்தமானிகளைத் தேடி வெளிவரும் வேலைகளுக்கு, அதற்கான பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கத் தொடங்கினேன். பரீட்சைகளுக்குத் தோற்றினேன்.

அது ஒரு தொடர் கதையாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிலும், தொழிற் கல்வியும்.

நேர்முகப் பரீட்சையின் போது வயது காணாது என்று சிலவற்றில் தட்டுப் பட்டேன். சில பரீட்சைப் பெறுபேறுகள் வராமலே நின்று விட்டன. அதன் பின்னர் பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதில்லை என்று முடிவெடுத்தேன். இருந்த போதும் ஒரு முடிவு வந்திருந்தது. விவசாயப் போதனா பாடசாலையில் ஒரு வருடப் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப் பட்டிருந்தேன்.

இதைப் பற்றி விசாரித்து அறிந்த போது ஒரு வருடப் பயிற்சியை முடித்ததும் விவசாயப் போதனாசிரியர் ஆகலாம் என்ற தகவல் கிடைத்தது. 1963–1964ம் ஆண்டுக்கான பயிற்சி நெறியில் சேர்ந்து கொண்டேன். அதில் தொழில் கிடைத்ததோ இல்லையோ நல்ல பயிற்சிகள் வழங்கப்பட்டன. விவசாயம் பற்றி மட்டுமின்றி உழவு இயந்திரம் ஓட்டவும், பழுது பார்க்கவும் அதற்கான அனுமதிப் பத்திரத்தையும் பெறக் கூடியதாகவும் இருந்தது.

அதைவிட, மேசன் பயிற்சி, தச்சு வேலையில் பயிற்சி, கொல்ல வேலையில் பயிற்சி, போன்றவற்றுடன் எதேச்சையாக சமையல் பயிற்சியையும் பெறக் கூடியதாக இருந்தது. அத்துடன் நிர்வாகத்துக்கும் எமக்கும் சில பிரச்சினைகள் வந்து போது மாணவர்களை தலைமையேற்று வழிநடத்தும் தலைமைப் பயிற்சியும் எனக்குக் கிடைத்தது. அதனால் இந்த ஒரு வருடம் எனது வாழ்க்கையின் பொற்காலமாக இருந்தது எனலாம்.

பயிற்சியை முடித்து வெளி வந்ததும் தான் தெரிந்தது எங்களைப் போன்று எத்தனையோ பேர் பயிற்சியை முடித்துக் கொண்டு வேலையை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று. ஆகவே, இதில் வேலையை நம்பிக் கொண்டு இருக்காமல், வேறு வேலை தேடுவதே நல்லது என்ற முடிவுக்கு வர வேண்டியிருந்தது.

மீண்டும் வேலை தேடும் படலம் தொடர்ந்தது.

எனது மைத்துனர் திருகோணமலையில் கொந்துராத்து வேலைகள் எடுத்துச் செய்வதாக அறிந்து அங்குஅவரிடம் வேலைக்குச் சென்றேன். அங்கு ஒரு வருடம் கழிந்தது. அங்கிருக்கும் போது ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சென்று வந்திருந்தேன். அது மறந்து போயிருந்த வேளையில் வேலைக்கு வரும்படி தந்தி ஒன்று வந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது பொது வேலைகள் திணைக்களத்தில் **(PWD)** தொழில் நுட்ப உத்தியோகத்தருக்கானது என்பது அங்கு சென்ற பின்னர் தான் தெரிந்தது. அதில் தெரிவாவதற்கு எனது விவசாயப் பயிற்சியும் உதவியது எனலாம். ஏனெனில் என்னிடம் கேட்கப்பட்ட கேள்விகள் விவசாயம் சம்பந்தமாகவே இருந்தது. இதில் தெரிவு செய்யப்படுவேன் என்ற நம்பிக்கை அற்றுப் போயிருந்தேன். காரணம் என்னிடம் கேட்கப்பட்ட கேள்விகள் வேறானவை ஆனால் மற்றவர்களிடம் கேட்கப்பட்டதோ வேலைகள் சம்பந்தமானது. ஆனால் தெரிவாகி அறிவிக்கப் பட்டபோது மகிழ்ச்சி அடைந்தேன்.

1965ல் அந்த வேலைக்குத் தெரிவாகி, சேர்ந்து வேலை இடத்துக்கும் போய் ஒரு மாதம் இருக்கும், ஏனைய வேலைகளுக்கும் அழைப்புகள் வந்து இருந்தன. இந்த வேலை வெளியூரில் என்பதுடன் இலங்கை எங்கும் வேலை செய்யச் சம்மதம் என்றும் ஒப்பமிட்டிருந்தேன். இப்போது வந்திருப்பவை ஊரிலேயே என்பதால் அவற்றில் ஒன்றில் சேர்ந்து கொள்ளலாம் என்று எண்ணி ஒரு கிழமை லீவில் வீடு வந்த போது அண்ணர் அது தான் பதவி உயர்வு பெற்று முன்னேற முடியும் ஆகவே அதற்கே செல்லும்படியும் திருப்பி அனுப்பி விட்டார்.

அதுவே தொடர்ந்து இறுதிவரை வேலையாக இருந்தது. 1965ம் ஆண்டு ஒரு வருடம் பயிற்சிக் காலமாக இருந்தது. அப்போது ஒரு அதிசயம் இலங்கை எங்ஙனும் இருந்து தெரிவாகிய 40 பேர் வரை பயிற்சிக்குச் சென்றிருந்தோம். அதில் நாங்கள் இருவர் ஒரே பெயருடன் இருந்தோம். அதாவது இருவரும் வேலுப்பிள்ளை சண்முகநாதன்.

கந்தோரில் இருந்தவர்கள் தவறுதலாக இரு கடிதம் வந்திருக்கின்றது என்று ஒன்றை திருப்பி அனுப்பி விட்டார்கள். பின்னர் இருவரையும் ஒன்றாகப் பார்த்த பின்னர் அந்தக் கடிதத்தை மீளப் பெற்றார்கள்.

இருவரும் உருவத்தில் எதிர்மாறாக இருந்தோம் அவர் மெல்லிதாக இருக்க நான் சற்றுப் பருமனாக இருந்தேன்.

இருவருக்கும் பெயர் பிரச்சனை தொடர்ந்து வரும் என்பதால் இருவரும் இன்னும் ஒரு முதலெழுத்தை சேர்த்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

ஒரு வருடம் பயிற்சி முடிந்தாலும், அப்போதுதான் தொழிற் கல்வியே ஆரம்பமாகியது. அது வாழ்நாள் முழுவதுக்குமான படிப்பாக இருக்கும் என்று நான் எண்ணியதே இல்லை.

பரீட்சைத் திணைக்களத்தினால் முதலாவது உயர்வுக்கான பரீட்சைக்குத் தோற்றி விட்டு வந்து போது, அப்போது நான் ஹம்பாந்தோட்டையில் வேலை பார்த்தேன். கந்தோரில் ஒருவர் முதல் பரீட்சையைச் சித்தி எய்திவிட்டு பதவி உயர்வு பெறமுடியாமல் இருப்பது தெரிந்தது. காரணம் சிங்களம் கற்க வேண்டியிருந்ததாகும். தமிழ் அரச ஊழியர்கள் சிங்களம் தரம் 3 (JSC க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமமான) சித்தியடைய வேண்டி இருந்தது. ஆகவே பதவி உயர்வுப் படிப்பை நிறுத்திவிட்டு சிங்களத்தைப் படித்து முடிப்பதெனத் தீர்மானித்தேன்

முதலாவதாக தரம் 1 க்கான பரீட்சை எடுத்தேன் – சித்தி.
இரண்டாதாக தரம் 2 க்கான பரீட்சை ஆறு மாதங்களின் பின்னர் எடுத்தேன். அதுவும் சித்தி.
மூன்றாவதாக – தரம் 3 க்கான பரீட்சை அடுத்த ஆறுமாதங்களின் பின்னர் எடுத்தேன் – அதுவும் சித்தி.
நான்காவதாக – தரம் 4 க்கான பரீட்சை (எனக்குத் தேவையில்லாத போதும்) அடுத்த ஆறு மாதங்களின் பின்னர் எடுத்தேன் அதுவும் சித்தியடைந்தேன். இது ஜீ.சி.ஈ – சாதாரணத்துக்குச் சமமானது.

இவற்றைச் சித்தி அடைவதற்கு நான் இருந்த தனிச் சிங்களக் கிராமம், நான் சிங்களம் பேசித்தான் ஆகவேண்டும் என்றிருந்த நிலை. வேறு தமிழர்களே அங்கு இல்லை. அங்கு வேலை செய்த ஒருவரை ஆசிரியர் ஆக்கிக் கொண்டேன். ஆனால் அவர் பாடத்திட்டம் தெரியாமல் எவ்வாறு கற்பிப்பது என்ற தடுமாறிய போது தபால் மூலக் கல்வியை நாடினேன். அதன் உதவி கொண்டு எனக்குக் கற்பித்தார்.

தமிழ் அரச உத்தியோகத்தர்களுக்கு தரம் மூன்று போதும் என்றிருக்க, தரம் நான்கு, ஆங்கில மூலம் சித்தியடைந்த சிங்களவர்களுக்கு என்றிருந்தது எனக்குத் தெரியாது. இது தெரியாமல் சிங்களத்தை கற்று முடிக்க வேண்டும் என்று நான் எடுத்து சித்தியடைந்தேன். ஆனால் அது அரசாங்கத்துக்கு பெரும் பிரச்சினையாக இருந்தது. அதன் காரணமாக நாடு தழுவிய ரீதியல் தமிழர்களுக்கு தரம் மூன்று போதும் என்றும் தரம் நான்குக்கு தமிழர்களை அனுமதிக்கக் கூடாது என்றும் சுற்றறிக்கை ஒன்று அனுப்பப் பட்டிருந்தது.

அங்கிருந்த போது சிங்களத்தை நன்கு கற்றதால், சிங்களப் பத்திரிகைகள், கதைகளைப் படிக்கவும், கந்தோரில் சிங்களக் கடிதங்களுக்கான மொழிபெயர்ப்பு என்பன என்னால் செய்யக் கூடியதாகவும் இருந்தது. ஆக சிங்களத்துக்கு ஒன்றரை வருடத்தில் முழுக்குப் போட்டு விட்டேன்.

சரி! இனி தொழிற் கல்விக்கு வருவோம். ஆரம்பத்தில் (**PWD**) பொது வேலைத் திணைக்களத்தில் சோர்ந்த நான் பின்னர் அது கட்டிடங்கள், பாதைகள் என இரண்டாகப் பிரியும் போது கட்டிடத் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்தேன். மற்ற சண்முகநாதனும் இதற்கே வந்திருந்தார் என்பது பின்னர் தான் தெரிந்தது.

அதன் பின்னர் பதவி உயர்வுக்கான பரீட்சையில் சித்தி அடைய, அடைய எனக்கான பதவி உயர்வுகள் அடுத்தடுத்து தங்கு தடையின்றிக் கிடைத்துக் கொண்டிருந்தன.

1. வது, உதவிப் பரிசோதகருக்கானது **(Sub – Inspector)**
2. வது, பரிசோதகர்–பொது வேலைகள் **(Inspector of Public works)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வது, காரியாலய உதவியாளர் (தொழில்நுட்பம்) – **O. A. (Tech.)**
4. வது, உதவி மாவட்டப் பொறியியலாளர் (கட்டிடங்கள்) **Asst. District Engineer (Buildings)** இதன் முதல் வேலையாக மட்டக்களப்பு மாவட்டக் காரியாலத்தில் கடமையாற்றினேன்.

இதற்கும் மேலாக பரிசோதகர் பதவி உயர்வு கிடைத்ததும், தேசிய வீடமைப்புத் திணைக்களத்தின் தொழில் நுட்ப ஆலோசகராகவும் கடமையாற்றினேன். இக்காலத்தில் வீடமைப்புக் கடனுக்கான விண்ணப்பங்களை, வரைபடத்தை, மதிப்பீட்டை பரிசீலித்து, களத்துக்குச் சென்று பார்த்து, கடனுக்கான அனுமதியை வழங்கினேன். இதற்கு எனக்கு வேறாக வருமானம் கிடைத்தது.

பொறியியலாளராக பதவி உயர்வு கிடைக்க முன்னரே எனக்கு வேலையில் ஒரு பிரச்சினை வந்தது. சிங்களவர்களுக்கு எதிராக நான் செயற்படுவதாக எனது திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது தமிழ் – சிங்களவர் பிரச்சினை தோன்றத் தொடங்கி இருந்தது. சிங்களவரே ஆளும் இனம் எனவும் தாம் தமிழரின் கீழ் வேலை செய்வதை விரும்பவில்லை என்ற உணர்வு பரவ ஆரம்பித்திருந்தது.

அதைவிட கல்முனை மாவட்டக் காரியாலத்தில் நடந்த ஆடிட்டிங்கின் போது அதில் ஒரு உறுப்பினராக இருந்த நான் கொடுத்த அறிக்கையினால் தான் அந்த சிங்கள களஞ்சியப் பொறுப்பாளர் வேலையில் இருந்து நீக்கப்பட்டதாக என்மீது குற்றத் சுமத்தினார். இதுவே அடிப்படைக் காரணமாக இருந்தது. இதனால் என்னைக் கொழும்புக்கு மாற்றி பழிவாங்க வேண்டும் என்று முயற்சித்தார்கள்.

நான் இதிலிருந்து தப்புவதற்காக வெளிநாடு செல்வதற்கு தீர்மானித்தேன். அது மட்டக்ளப்பு மாவட்ட திணைக்களத்துக்கு மாறி வந்திருந்த போது கிடைத்தது. சவூதி அரேபியாவுக்கு மதிப்பீட்டாளராக **(Quantity Surveyor)** செல்வதற்கு தெரிவாகி இருந்தேன். அதற்காக இரண்டு வருட சம்பளமற்ற விடுமுறைக்கு விண்ணப்பித்திருந்தேன் அதுவும் எனக்குக் கொடுக்கப்படவில்லை. ஆகவே நான் அதையும் விட்டுவிட்டு சவூதிக்கு வேலைக்குச் சென்றேன்.

சவூதியில் இருந்து விடுமுறையில் நாட்டுக்கு திரும்பியிருந்த போது இனக் கலவரம் ஆரம்பமாகி இருந்தது. வந்து சேர்ந்த நாங்கள் நால்வர் இரவு முழுவதும் விமான நிலையத்திலே இருந்தோம். விடிந்ததும் வாடகை வாகனத்தில் கொழும்பு ரெயில்வே நிலையத்தக்கு வந்து சேர்ந்தோம்.

அங்கு புகையிரதம் ஓடுவதாக இல்லை. நீண்ட நேரத்துக்குப் பின்னர் திடீரென ஒரு புகையிரதம் புறப்பட்டது. அதில் ஏறி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து இருந்தோம். தமிழ்ப் பிரதேசம் வரும் வரை தண்ணீர் கூட இன்றி ஒருவாறு வந்து சேர்ந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமுறையில் தான் வந்தோம். மூன்று மாதம் முடிந்ததும் திரும்பிச் செல்வதற்கான டிக்கட் கைவசம் இருந்தது. ஆனால் அப்போது பெருமளவிலான இனக் கலவரம் வெடித்தது. அது தான் 1983ல் நடந்த ஜூலைக் கலவரம். எங்களால் எதுவும் செய்ய முடியவவில்லை. காரணம் விமான சேவைகள் கூட ரத்துச் செய்யப்பட்டிருந்தன. காலமும் கடந்தது. எங்கள் விமான டிக்கட் விசா என்பன காலவதியாகி விட்டது. கம்பனிக்கு அறிவித்த போது இலங்கையில் அப்போது சவூதி தூதரகம் இல்லாத காரணத்தால் கையை விரித்து விட்டார்கள்.

டிக்கட்டை திருப்பி அனுப்பி பணத்தைப் பெற்றுக் கொண்டோம். மீண்டும் வேலையில் சேர விரும்பவில்லை. எப்படியும் திரும்பவும் செல்லலாம் என்றிருந்தேன். இதனிடையில் கையில் இருந்த காசைக் கொண்டு கட்டியிருந்த வீட்டை இரவு பகலாக பாடுபட்டு பூர்த்தி செய்து முடித்தேன். கடன் கூட வாங்கினேன் காரணம் நான் இருக்கும் போது செய்வது நல்லது, போனதும் கடனைச் செலுத்தலாம் என்று எண்ணி இருந்தேன்.

மீண்டும் கஷ்டம் என்னைப் பற்றிப் பிடித்துக் கொண்டது. செலவுக்குப் பணம் இல்லாதது ஒரு புறம், கடன் சுமை ஒரு புறம். பிள்ளைகளின் படிப்பு மறுபுறம். இப்போது வாழ்க்கையில் இன்னு மொரு பாகம் ஆரம்பமாகியது. இனி அதற்குச் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏனைய தொழில்களும் கல்வியும்

நான் கஷ்டப் பட்டாலும் எவரிடமும் கைநீட்டவில்லை. பிள்ளைகளையும் கஷ்டப்பட விடவில்லை. சுய தொழில்களில் ஈடுபட்டு எனது வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தேன். இப்போது பலவித பொதுப் பணிகளில் ஈடுபட்டிருந்தேன். இதன் விபரங்களை கீழே தருகின்றேன.

ஆரம்பத்தில், கோழி வளர்ப்பில் ஈடுபட்ட நான், பின்னர் வியாபாரத்தில் இறங்கினேன். அது எனக்கு வளர்முகமாக இருந்தது. குடும்பம் நன்றாக ஓடிக் கொண்டிருந்த போது மீண்டும் கலவரம் வெடித்தது. ஊரில் இருந்ததால் அதனாலும் தாக்கமடைந்தேன். இது 1989ல் ஒருமுறையும் 1990ல் ஒருமுறையும் நடந்தது. இது தமிழ்ப் பிரதேசங்களில் நடந்தது. அப்போது எனது கடை கொள்ளை அடிக்கப்பட்டது. அந்த நேரத்தில் விற்பனைக்காக பத்து மோட்டார் சைக்கிள்களும் ஏனைய பொருட்களும் இருந்தன.

கொள்ளை நடந்தது போக மிகுதியை எடுத்து வந்து வீட்டில் காராஜில் வைத்தேன். இதில் மிகுதியாக இருந்த 250 க்கும் மேற்பட்ட மென்பான சோடா (கலர்) போத்தல் கேஸ்கள் இருந்தன. இந்தக் கலவர நேரத்தில் எனது மனைவியும் மகளும் ஒரு திருமண வைபவத்துக்காக மட்டுநகர் சென்றிருந்தனர். அவர்களால் திரும்பி வரமுடியவில்லை. ஆகவே நானும் பையன்களும் அங்கு செல்லத் தீர்மானித்து பெரும் சிரமத்தின் மத்தியில் சென்று சேர்ந்தோம்.

அங்கு ஓரிரு மாதம் நிற்க வேண்டி ஏற்பட்டது. இதனால் இங்கு, ஊரில் இனித் தொழில் செய்ய முடியாது என்று கருதி கொழும்பு நோக்கிச் சென்றேன். மூத்த மகனையும் அங்கு அழைத்துச் சென்றேன். அவனால் படிப்பையும் தொடர முடியவில்லை. ஊரில் இருக்க முடியாததற்கு காரணம் இருந்தது. இதற்கான காரணத்தை முன்னர் ஒரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறேன் என நினைக்கிறேன். கொழும்புக்கும் செல்வது ஒன்றும் இலகுவான காரியமாக இருக்கவில்லை.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வந்து சேர்ந்தோம். நாங்கள் வந்து சேர்ந்ததும் கொழும்பில் எங்கள் சொந்தக்காரர் ஒருவர் வைத்திருந்த நகைக் கடையில் நான் வேலைக்குச் சேர்ந்தேன். மகனை இன்னுமொரு இடத்தில் சேர்த்துவிட்டேன். அவர்கள் கடையை எனது பொறுப்பில் தந்து விட்டு சில மாதங்களில் கனடா சென்று விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையை நல்லமுறையில் மாற்றி அபிவிருத்தி செய்து வருமானத்தை பெருக்கிக் கொண்டேன். கடையை வளர்ப்பு மகனுக்கு கொடுத்திருந்தாலும் நடத்தும் பொறுப்பை என்னிடமே தந்திருந்தனர் காரணம் அவருக்கு வயதும் அனுபவமும் காணாது என்பதினால். கடைக் கணக்கைப் பார்த்ததும் அங்கே தங்கிவிடச் சென்றவர்கள் விரைவாக திரும்பி விட்டனர். நல்லது செய்யப் போய் இப்படிப் பல சிக்கல்களில் மாட்டிக் கொள்வது எனது வழக்கமாக இருந்தது. இதனால் கடையை மீண்டும் தங்கள் பொறுப்பில் தரும்படி கூறிவிட்டார்கள். வேறு செய்வதற்கு வழியில்லை. கொடுத்து விட்டு வெளியில் இருந்தவர்களிடம் அறிவித்தேன். அப்போது மூத்த மகனும் வெளிநாடு சென்றுவிட்டார். அவருக்காகப் பெரும் செலவு செய்ய வேண்டி இருந்தது. கல்முனையில் இருந்த ஒரு ஆதனத்தைக் கூட விற்க வேண்டி ஏற்பட்டது. அவர் சென்ற பின்னர், ஒழுங்கு செய்து மகளுக்கும் திருமணம் முடிந்து இருந்தது.

மருமகனின் ஆலோசனைப்படி ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்தேன். அதன்படி அவருக்கே பொருட்களை அனுப்பக் கூடியதாக இருந்தது.

அதனைச் செய்து கொண்டு இருக்கும் போது எனக்கு நிறைய ஓய்வு நேரம் கிடைத்தது. கலவரங்களினால் பாதிக்கப் பட்டிருந்த மன நிலையை மாற்ற மீண்டும் எழுதத் தொடங்கினேன். கவிதைகள் நாவல்கள் சிறுகதைகள் என்று எழுதிக் கொண்டே இருந்தேன். அப்போது எழுதிய சிறுகதைகள் இப்போது இரு தொகுதிகளாக வந்துள்ளன. இதனைக் கீழே விபரமாகக் காண்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெகுசனத் தொடர்புத் துறையில் டிப்ளோமா
### (Diploma in Mass Media)

அத்துடன் வேறு கல்விகளும் கற்கத் தொடங்கினேன். அதன்படி முதலில் வெகுசனத் தொடர்புத் துறையில் டிப்ளோமா பெற்றேன். ஏற்கனவே படித்தது போதும் என்று இருந்த எனக்கு மீண்டும் படிக்கும் ஆசை வந்தது. பதவி உயர்வுக்காக வாழ்க்கை முழுவதும் கற்றுக் கொண்டு இருந்ததாலும் பதவி உயர்வு கிடைத்த பின்னர் படிப்பில் ஓய்வு தேவைப்பட்டது. சிலகால ஓய்வுக்குப் பின்னர், மேலும் பல பட்டங்களுக்காக கற்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது. முதலில் கற்றதெல்லாம் பதவி உயர்வுக்கானது. இனிப் பட்டங்களுக்காக கற்கத் தீர்மானித்தேன்.

### சட்டத்தில் டிப்ளோமா
### (Diploma in laws)

அடுத்து சட்டத்தில் டிப்ளோமா பெறுவதற்கான கல்வியை மூன்று வருடங்களுக்கு மேல் கற்றேன். அது முடிந்ததும் அடுத்த கல்விக்கான ஆயத்தம் செய்து கொண்டிருந்தேன். அடுத்து பிரசித்த நொத்தாரிஸ் வேலைக்கான படிப்புக்கு ஆயத்தம் செய்தேன்.

### அகில இலங்கை சமாதான நீதவான்
### (Justice of the Peace for the whole Island)

இதனிடையே சட்டத்தில் டிப்பிளோமா சான்றிதழ் கிடைத்ததும் எனது சுய விபரத்துடன் நீதி அமைச்சுக்கு சமாதான நீதவான் பதவிக்கு விண்ணப்பித்தேன். இது அதிகமாக அரசியல்வாதிகளுடைய சிபார்சின் பேரிலேயே கிடைப்பது வழக்கம்.

ஆனால் நான் எனது பொதுச் சேவைகள் பற்றியும் எனது தொழிற் கல்வி ஏனைய கல்விச் சான்றிதழ்கள் பெற்றது பற்றியும் குறிப்பிட்டு விண்ணப்பித்திருந்தேன். அப்போது நீதி அமைச்சராக இருந்த கௌரவ அமைச்சர் ஜீ. எல் பீரிஸ் அவர்களின் நேரடி சிபார்சின் பேரில் எனக்கு அகில இலங்கை சமாதான நீதவான் பட்டம் கிடைத்தது.

### பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம்
### (Brahma Kumaris Raja Yoga Centre Srilanka Branch)

அப்போது தியானம் செய்வதற்கு இலவசக் கல்வி அறிவித்தலைக் கண்ணுற்ற போது அதனை அறிய வேண்டும் என்று அங்கே சென்றேன். ஏற்கனவே தியானம் செய்து கொண்டிருந்தேன். ஆகவே அதனைச் சரிவரச் செய்தற்காகச் சென்றேன். அங்கே பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினரின் அறிமுகம் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானத்துக்கான பாடத்தை எடுத்தேன். அதன் பிறகு அங்கு தினசரி ஆன்மீகக் கல்வியைக் கற்க வேண்டி இருந்தது. அதனால் வேறு எதையும் தொடர்ந்து கற்கமுடியாது போனது. இது ஆன்ம ஈடேற்றத்துக்கு முக்கியமானதாக இருந்ததால் உலகக் கல்வியை விட இந்த ஆன்மீகக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அதனை அன்றிலிருந்து இன்று வரை பதினைந்து வருடங்களாக தொடர்ந்து கற்று வருகின்றேன். இக்காலப் பகுதியில் பயிற்சி நெறிக்காக ஒன்பது தடவைகள் இந்தியா, இராஜஸ்தானுக்கு சென்று வந்துள்ளேன்.

இவ்வாறு இருக்கும் போது எனது தாயின் மரணம் 2001 மாம் ஆண்டு நிகழ்ந்தது. இதனை அடுத்து ஒன்றரை மாதத்தில் எனது மாமியின் மரணமும் சம்பவித்தது. இதனால் எனது மனைவி தனித்துப் போனார். ஏனெனில், எனது மூன்றாவது மகனும் வெளிநாட்டுக்குச் சென்று விட்டார்.

## இருதய அறுவைச் சிகிச்சை (Heart by Pass surgery)

இதனிடையே பல வருடங்களாக ஏற்பட்ட கவலைகள், கஷ்டங்கள் பிரச்சினைகள் காரணமாக உயர் குருதி அழுத்தம் ஏற்பட்டு பின்னர், எனக்கு இருதய நோய் கண்டிருந்தது. இப்போது அது உயர் நிலையை அடைந்து இருந்தது. பரிசோதனையின் போது அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும்.

(By Pass Surgery) அதைவிட உத்தரவாதம் தரமுடியாது என்று டாக்டர்கள் கூறிவிட்டனர். பிள்ளைகளுக்கு அறிவித்ததும் உடனே செய்யும் படி அறிவித்தனர். அதன்படி 2002இல் இருதய அறுவைச் சிகிச்சை இடம் பெற்றது.

நான் வேலை செய்து கொண்டு இருந்தது 2ம் மாடியில். சத்திர சிகிச்சைக்குப் பின்னர் படி ஏறக் கூடியதாக இருந்த போதும், ஒரு நாளைக்கு 4 – 5 தரம் ஏறி இறங்கக் கூடிய மாதிரி இருக்க முடியாது என்பதனால் மீண்டும் வீடு திரும்ப வேண்டி ஏற்பட்டது. பன்னிரண்டு வருடம் அஞ்ஞாத வாசத்துக்குப் பின்னர் ஊர் திரும்பினேன். அங்கிருந்த தொழில் நடவடிக்கைகளை மூடிவிட்டு ஊர் திரும்ப வேண்டிதாயிற்று.

## சர்வோதயத்தில் திட்ட இணைப்பாளர் (Project Coordinator – Sarvodaya)

சில காலம் ஓய்வுக்குப் பின்னர் 2004ல் கல்முனை சர்வோதயத்தில் இணைந்து ஒரு கிராமத்தை அபிவிருத்தி செய்யும் வேலையைப் பொறுப்பேற்று அதில் பொறியியலாளராக இணைந்து, திட்ட இணைப்பாளராக இரண்டு வருடங்கள் சேவையாற்றினேன். அத் திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததும் எனக்கு அங்கு வேலை இருக்க வில்லை. மீண்டும் ஓய்வு கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லேடன் குறூப் கம்பனியில் பொறியியலாளர்
## (Engineer – Leydan Group of Companies - Colombo)

அதன் பின்னர், லேடன் குறூப் கம்பனியில் பொறியியலாளராகச் 2006ல் சேர்ந்து கல்லாறு மத்திய கல்லூரி சுனாமி வேலைத் திட்டத்தில் பொறியிலாளராகக் கடமையாற்றினேன். இந்த வேலையைத் தொடர்ந்து செய்ய முடியவில்லை.

அதனைத் தொடர்ந்து இதே கம்பனி எடுத்திருந்த மட்டக்களப்பு கல்லடி, முகத்துவாரம் பாடசாலை சுனாமி வேலைத்திட்டத்துக்கு பொறியியலாளராக மாறிச் சென்றேன். அங்கு தொடர்ந்து 2008 வரை கடமையாற்றி அத் திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொடுத்து பராட்டுக்களைப் பெற்றேன்.

2008 ல் இருந்து இன்று வரை பௌதீகத் தொழில் ஏதும் இல்லாவிட்டாலும், ஆன்மீகச் சேவை இருந்து கொண்டே இருக்கிறது. இதுவரை அதனையும் செய்து கொண்டு, வேறு பொதுப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுப் பணியில் சண்முகநாதன்

சிறு வயது முதல் சமய சமூகப் பணிகளில் ஈடுபாடு கொண்ட எனக்கு ஆரம்பப் பணியாக சமயத் தொண்டே கிடைத்தது. எங்களூரில் இருக்கும் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் கவனிப்பார் இன்றிக் கிடப்பதாக இளைஞர்கள் பலர் என்னை நாடி வந்தனர். நான் திருமணம் முடித்து பக்கத்து ஊரில் இருந்தேன். அவர்கள் வேண்டுதலை ஏற்று ஊருக்கு வந்து சமயப் பணிகளைச் செய்து வந்தேன்.

அப்போது நான் பாண்டிருப்பில் இருந்த இரு ஆலயங்களான ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயம் அத்தடன் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயங்களின் நிர்வாக சபையின் ஒரு முகாமையாக இருந்தேன். அந்த ஆலயங்களில் ஒன்று தான் மேற்படி ஆலயமாகும். (பின்னர் நான் நிரந்தரமாக பாண்டிருப்புக்கே குடிவந்து விட்டேன்) பொதுச் சேவையில் ஈடுபடத் தொடங்கியதும் இரவு பகல் இன்றி எனது கையில் இருந்த பணம் கூட பொதுச் சேவையில் செலவாகியது ஆனால் எனது மனைவி இதுபற்றியெல்லாம் எதுவும் கூறியதில்லை. நான் எனது விருப்பத்துக்கு செயற்படக் கூடியதாக இருந்தது.

### தலைவர், இந்து இளைஞர் மன்றம்
### (President — Hindu Youngmen Association)

இந்த ஆலயத்தின் நிலமை பற்றி நான் நிர்வாக சபைக் கூட்டத்தில் தெரிவித்தேன். அப்போது அதனைப் பராமரிக்கும் பொறுப்பை நிர்வாகம் என்னிடமே ஒப்படைத்தது. ஆனால் ஆலய நிர்வாகத்தை நான் மட்டும் செய்ய முடியாது என்பதனால் இளைஞர்கள் பலரையும் சேர்த்துக் கொண்டு செயல் படுத்தினேன்.

அப்போது எமக்கென ஒரு அமைப்பு தேவைப் பட்டது. அப்போது ஸ்தாபிக்கப்பட்டது தான் இந்து இளைஞர் மன்றம். சில காலம் இது பதிவு இன்றிச் செயல்பட்டது. பின்னர் அகில இலங்கை இந்து இளைஞர் மன்றத்திலும், அதன் பின்னர் இந்து சமய விவகார அமைச்சிலும் பதிவு பெற்றது. இது 1977ல் பதிவு பெற்றது. இதன் தலைவராக நான் நியமிக்கப்பட்டேன்.

இதன் ஸ்தாபனை முதல் 1990 வரை நானே தலைவாராகச் செயற்பட்டேன். நான் சவூதிக்குச் சென்றிருந்த போது கூட இதற்கொரு தலைவரை நியமிக்காமல் நான் திரும்பி வரும்வரை உப-தலைவருடனேயே மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கியது. இப்போது இளைஞர்கள் என்மீது வைத்திருந்த நம்பிக்கையையும் பொது மக்கள் எனக்குத் தந்த ஆதரவும் பிரமிப்பு ஊட்டுவதாகும். இதனால் இந்த மன்றத்தை முன்மாதிரியான மன்றமாக என்னால் ஆக்க முடிந்தது. அகில இலங்கை மன்றத்தில் இருந்து வந்தவர்கள் எங்கள் கணக்கறிக்கை மாதிரிகளை எடுத்துச் சென்று ஏனைய மன்றங்களுக்கும் அறிமுகப் படுத்தினார்கள்.

எங்கள் சேவைகளில் முக்கிய பணி ஒன்றாக பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலய திருவிழாக் காலங்களின் போது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு ஆலய ஒழுங்குகளைக் கவனிப்பதாக இருந்தது. அதனை இப்போதும் இந்து இளைஞர் மன்றம் கவனித்து வருகின்றது.

இக்கால கட்டத்தில் பொது மக்களின் ஒத்துழைப்புடன் பல வேலைத் திட்டங்களை மேற் கொண்டேன்.

முதலாவது, ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய வாயிற் கோபுரத்துக்கான அத்திவாரமும் முதலாம் கட்டமும் நிறைவேற்றப்பட்டது.



இரண்டாவதாக, வைரவர் கோவிலும் சண்டேஸ்வரர் கோவிலும் நிர்மாணித்தது.

மூன்றாவதாக, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் புனருத்தாபனம். இது நடைபெற்றுக் கொண்டு இருந்த போது நான் ஊரை விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டதால் தொடர்ந்து வேலைகளை வேறு நபர்களிடம் ஒப்படைத்துச் செல்ல வேண்டி ஏற்பட்டது. அதுவும் நிறைவேறிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாலாவது கட்டடத்துக்குமான ஏற்பாடு செய்து வைத்திருந்தேன். ஆனால் நான் இல்லாததால் பண உதவிகள் தடைப்பட்டதால் தொடர முடியவில்லை. அவர்கள் நான் வந்தால் பணம் தருவதாகக் கூறியிருக்கிறார்கள்.

ஏனெனில் அவர்கள் பணத்துக்கு நான் உத்தரவாதம் என்று அவர்கள் நம்பியது மட்டுமல்ல, வேலை முடிந்த கையோடு ஒவ்வொரு சதத்துக்கும் கணக்கு அவர்கள் கையில் போய்ச் சேர்ந்ததும்தான்.

ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய வாயிற் கோபுர வேலை இன்னும் அதே நிலையிலே இருக்கின்றது.

**தலைவர், பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயம், ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயம்.**
**(President – Pandiruppu Sri Manikka pillaiyar Temple and Sri Throupathai Amman Thevasthanam)**

மேற்படி இரண்டு ஆலயங்களும் பாரம்பரிய முறைப்படி நிர்வாகத்தினர் தெரிவு செய்யப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்து கொண்டிருந்தது. மருமக்கள் மான்மியம் என்று கூறப்படும் முறை. தாய் வழியில் வருபவர்களே இந்த உறுப்புரிமைக்கு உரித்துடையவர்களாக இருந்தனர். இவர்கள் பெரும்பாலானோர் வெளியூர்களில் இருந்தனர். ஊரின் தேவை பற்றிக் கவலைப்படாதவர்களாக இருந்தனர். நிர்வாகம் சீர்கெட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைவர், ஆலயங்களின் புனருத்தாபன சபை**
**(President – Temple Rehabilitation Committee)**

இதனால், இந்த நிர்வாகத்தை அப்புறப்படுத்த பல ஆண்டுகாலமாகப் பலர் முயற்சித்து வந்தனர். பின்னர் நான் வந்ததன் பின்னரும் மீண்டும் ஒரு முயற்சி எனது தலைமையில் எடுக்கப்பட்டது. இந்த ஆலயங்களின் புனருத்தாபன சபை அமைக்கப்பட்டு நான் அதன் தலைவராக ஆக்கப்பட்டேன். ஊரில் இருக்கும் ஆலயங்களை ஊரவரே நிர்வகிக்க வேண்டும் என்பதே எங்கள் வேண்டுகோளாக இருந்தது.

நாங்கள் சட்ட ரீதியாக, அரசாங்கத்துக்கு, அதாவது இந்த சமய கலாசச்சார அமைச்சுக்கு, கல்முனை உதவி அரச அதிபர் போன்றோருக்கு முறைப்பாடுகளை அனுப்பி விசாரணைகள் நடைபெற்றன. ஆனால் முடிவுகள் எமக்கு சாதகமாக அமையவில்லை. சிலர் பையன்களிடமும் முறையிட்டுப்பார்த்தனர். எதுவும் வெற்றி அளிக்கவில்லை.

முடிவு என்னவோ, 1939ல் கோட்டில் தீர்ப்பளிக்கப்பட்டவாறு, நிர்வாகச் சீர்கேட்டை நிரூபிக்க முடியவில்லை என்பது போல், இது அவர்கள் சொந்த கோவில் என்றும் பண மோசடிகளையோ நிர்வாக சீர்கேட்டினையோ அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

**அப்படியானால் நான் எப்படி அதன் தலைவராக வந்தேன்?** – என்பதற்குத் தான் இப்போது வருகின்றேன். எல்லாவற்றுக்கும் காலம் பதில் சொல்லும் அல்லவா? அந்தக் காலமும் ஒரு நாள் வந்தது. உப தலைவர் ஏற்கனவே மரணமடைந்திருந்தார். இப்போது பொருளாளரும் மரணமானார். செயலாளர் நடக்க முடியாது சுகவீனம் உற்றிருந்தார். மிகுதியாக இருந்த தலைவர் கொழும்பில் இருந்தார். எஞ்சி இருந்தது. ஒரு உதவிச் செயலாளர் மட்டுமே.

அந்த வருட திருவிழா ஆரம்பமாக இருந்த வேளை அதை அறிவிக்கும் கூட்ட அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. நான் உட்பட நிர்வாக உறுப்பினர்கள் (**முகாமைகள்** என்று அழைக்கப்படுவர்) பலர் கூட்டத்திற்குச் சென்றிருக்கவில்லை.

இது அங்கு சமூகமளித்திருந்த ஊர் இளைஞர்களுக்கு சினத்தை ஏற்படுத்தி இருந்தது. நான் திருமண வீடொன்றுக்குச் சென்று விட்டு கோவிலுக்குச் சென்ற போது கூட்டம் கலைந்திருந்தது. இளைஞர்கள் சிலர் கலந்துரையாடிக் கொண்டிருந்தனர்.

அன்று இரவு நேரம் ஒலிபெருக்கியில் நிர்வாக உறுப்பினர் நாளை மாலை கட்டாயமாக கோவில் கூட்டத்திற்கு சமூகமளிக்க வேண்டும் என்றும் வரத் தவறுபவர்கள் வேறு ஒருவரை நியமிக்க வேண்டும் என்று ஊர் முழுவதும் அறிவிக்கப்பட்டது. எல்லோரும் பயந்து போனார்கள். இது வேறு யாரோ அறிவித்தது என்று. அடுத்த நாள் மாலை பெருங் கூட்டம் கூடி இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமலர்ச்சி சனசமூக மன்றத்தினர் கூட்டத்தை நடத்தினர். நிர்வாகம் பங்குபற்றி, கோவில் திறந்து திருவிழா நடத்த நடவடிக்கை எடுக்காததினால், தற்காலிக நிர்வாகம் ஒன்றை அமைத்து கோவில் திருவிழாவை இந்த வருடம் நடத்த வேண்டும் என்று விளக்கம் கொடுத்தனர். பின்னர் நிர்வாகத் தெரிவு நடந்தது.

அவர்களே உறுப்பினர்களைத் தெரிவு செய்தனர். தலைவராக வேறு ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். அவர் அப்போது இருந்த நிர்வாகத்துக்கு அப்பாற்பட்டவர். அவர் எழுந்து கூறினார். **''நான் இதுவரை கோவில் நிர்வாகத்தில் ஈடுபட்டிருக்கவில்லை. எனக்கு அது பற்றி எதுவும் தெரியாது. ஆகவே இப்போது நிர்வாகத்தில் இருப்பவரும் கோவில் நடைமுறைகளை அறிந்தவரும் தலமைக்குரிய குடியைச் சேர்ந்தவருமான திரு. சண்முகநாதன் அவர்களை நான் தலைவராகத் தெரிவு செய்கிறேன்''** என்றார். சபையோர் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

எங்கள் ஆலயக் கல்வெட்டின் படி நிர்வாகத் தலைமை பணிக்கொணா குடியைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது. நான் அந்தக் குடியைச் சேர்ந்தவன்.

கையில் எந்தப் பண இருப்பும் இல்லாமல் ஆலய வேலைகள் ஆரம்பமாகின. நான் பொறுப்பேற்ற உடனேயே ஆலய வெளி வீதியைச் சுற்றி தூண் நாட்டி, வயர் இழுத்து, மின் விளக்குகளைப் பொருத்தி ஒளியேற்றினேன். இதற்கு ஆலயத்துக்கு எந்தச் செலவும் ஏற்படாமல் செய்தேன். முடிந்தவரை இலவசமாகப் பெறக் கூடியதை இலவசமாகவும் என்னால் முடிந்தளவு குறைந்த செலவிலும் அதை நிறைவு செய்தேன். இது முதன்மை விசேச அம்சமாக இருந்தது.

அடுத்து அந்த வருட திருவிழாவை இளைஞர்களின் உதவியுடன் மிகச் சிறப்பாக நடத்தி முடித்தேன். இரண்டாவது விசேட அம்சமாக திருவிழா நடந்து முடிந்து எட்டாம் நாள் கூட்டத்தின் போது, கணக்கறிக்கை கணக்காய்வு செய்யப் பட்டு அச்சுப்பிரதியாக எல்லோருக்கும் விநியோகித்தேன். வழமையாக அடுத்த வருடப் பொதுக் கூட்டத்தின் போது தான் முந்திய நிர்வாகம் கணக்கறிக்கை சமர்ப்பிக்கும். அதுவும் **நிலுவை எதுவும் இருக்காது.**

எனது அறிக்கையின் படி அந்த வருட செலவு போக மிகுதி இருப்பாக நாற்பதினாயிரம் கையிருப்புக் காட்டினேன். இளைஞர்கள் ஒலிபெருக்கி உபகரணம் ஒன்றை ஆலயத்துக்கு சொந்தமாக கொள்வனவு செய்து தரவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர். அதனை ஏற்று அந்த வருடமே அதனைக் கொள்வனவு செய்து கொடுத்தேன்.

தொடர்ந்து நானே தலைவராக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையின் படி அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு நிரந்தர தலைவராகத் தெரிவு செய்யப்பட்டேன். அடுத்தடுத்து வந்து வரவு மிகுதியைக் கொண்டு தீக்குழி வாசலில் அம்மன் எழுந்தருளும் பகுதியை சிற்ப வேலைகளுடன் கட்டி முடிக்கும் திட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பித்தேன். அது கட்டி முடிய இரண்டு வருடங்கள் எடுத்தன. முடிவடைந்து கலசாபிசேகம் செய்யும் தறுவாயில் நான் ஊரைவிட்டுச் செல்ல வேண்டி ஏற்பட்டது.

மீண்டும் கொழும்புக்கு வந்து தொடர்ந்து என்னையே தலைவராக இருக்க வேண்டும் என்று கேட்டனர். நானோ எனது அண்ணன் முறையான ஊர்ப்போடியார் திரு. கிருஷ்ணபிள்ளை அவர்களை தற்காலிக தலைவராக நியமித்துக் கடிதம் கொடுத்து அனுப்பினேன். அடுத்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் புதிய தலைவரைத் தெரிவு செய்யும்படி அறிவித்தேன்.

இதனிடையே பல சலசலப்புகள் இடம் பெற்றன. முதலாவது முன்னாள் தலைவரினால் எடுக்கப் பட்ட நடவடிக்கைகள். இரண்டாவது இந்திய அமைதி காக்கும் படை இருந்த போது ஏனைய இயக்கங்களால் ஏற்பட்டது. எனது உயிருக்கும் ஆபத்து ஏற்பட இருந்தது. ஆயினும் அது இந்திய பிரிக்கேடியரின் தலையீட்டால் தடுக்கப்பட்டது.

நான் தலைவராக இருப்பது ஆலயத்துக்கு மட்டுமே என்றும் அதன் நிர்வாகத்தை மட்டுமே என்னால் கவனிக்க முடியும் என்றும் இலட்சக் கணக்கானவர்கள் வரும் ஆலயத்தில் ஒவ்வொருவரின் உயிருக்கும் என்னால் உத்தரவாதம் அளிக்க முடியாது என்பதையும் பிரிக்கேடியருக்கு விளங்கப்படுத்தினேன். சிற்றிசன் கொமிட்டி இணைச் செயலாளராக இருந்ததில் பிரிக்கேடியர் என்னை நன்கு அறிவார். எனது விளக்கத்தை ஏற்றுக் கொண்டு என்னை அந்தப் பிரச்சினையில் இருந்து விடுவித்தார்.

இப்போது ஆலயம் உள்ளூர் தலைவர்களால் நிர்வகிக்கப்பட்டு நல்ல முன்னேற்றகரமான நிலமையில் இருக்கிறது என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இதற்கு நான் அடித்தளம் இட்ட பெருமையை உள்ளூர் பத்திரிகை ஒன்று அண்மையில் குறிப்பிட்டு எழுதியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருளாளர், பாண்டிருப்பு –1, வரைவற்ற சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம்**
**(Treasurer - Pandituppu - 1, Unltd.T.C.Coop.Society)**

1976ல் நானும் இன்னும் சில நண்பர்களும் மொத்தம் 15 பேர் சேர்ந்து பாண்டிருப்பு–1 சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவச் சங்கத்தை ஆரம்பித்தோம். அந்தச் சங்கத்தில் நிதிப் பொறுப்பே முக்கியமானதாகக் கருதப்பட்டதால் என்னையே அதற்கு பொருளாளராக நியமித்தனர். ஆரம்ப மாதாந்த சந்தாவாக பத்து ரூபாவை அறவிட்டோம். அதனை உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டியில் கடனாகக் கொடுத்தோம்.

பின்னர் சமாசத்திலும் உறுப்பினராக இச்சங்கத்தைச் சேர்த்து அதிலிருந்து பொதுக்கடன், வீட்டுக் கடன் என்பன பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கி வந்தோம். சில வருடங்களில் இலட்சக் கணக்கான பிரள்வு ஏற்பட்டது.

சில வருடங்களில் உறுப்பினர் நிலையான வைப்பையும் எம்மிடம் வைக்கக் கூடிய திட்டத்தை வைத்தேன். அது நல்ல வரவேற்பைப் பெற்றது. உறுப்பினர் பலர் அதில் வைப்பு வைத்தனர்.

அந்தச் சமயத்தில் விஜயம் செய்த இந்தச் சங்கங்களுக்குப் பொறுப்பான கூட்டுறவு ஆணயாளர் எமது வங்கி நடவடிக்கைகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டதுடன். எமது முன்னேற்றத்தையும் வியந்து பாராட்டினார். எமது சங்கத்தில் ஒரு கூட்டுறவு வங்கி ஒன்றினை அமைப்பதற்கு ஆவன செய்வதாகவும் கூறிச் சென்றார். ஆனால் இனக் கலவரங்கள் அதற்கு இடம் தரவில்லை என்றே கூறவேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தலைவர். வ.சி.க.வ.கூ. சங்கம்**
**(President. –Pandiruppu-1.T.C.C. Society)**

அதன் பின்னர் 1990 கலவரத்தின் போது பல உறுப்பினர்கள், நான் உட்பட, இடம் பெயர்ந்ததால் சங்க நடவடிக்கைகள் சில வருடங்களுக்கு ஸ்தம்பிதம் அடைந்து போய் இருந்தது. பின்னர் அது மீண்டும் ஆரம்பிக்கப் பட்டாலும் கடன் கொடுத்திருந்த பல இலட்சம் ரூபாய்கள் அறவிட முடியாத நிலை ஏற்பட்டது.

அடுத்து ஊருக்கு வந்த நான் தலைமைப் பொறுப்பை 2002ல் இருந்து ஏற்றுக் கொண்டதும் கடன்கள் அறவிடப்பட்டதுடன் சங்கம் நல்ல நிலையிலும் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றுவரை நானே இச் சங்கத்தின் தலைவராக இருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

**பொருளாளர், பாண்டிருப்பு மீன்பிடிச் சங்கம்**
**(Treasurer- Pandiruppu Fishing Society)**

1976 என்று நினைக்கின்றேன். எமது ஊரில் உள்ள மீனவர்கள் தங்கள் தொழிலுக்காக அயல் கிராமங்களுக்குச் சென்று வந்தனர். இதனால் சில பிரச்சினைகளும் ஏற்படுவதுண்டு. அதனையும் விட இனப் பிரச்சினைகள் ஏற்படும் போதெல்லாம் அவர்கள் தொழிலுக்குச் செல்லாது கஷ்டப் படுவதாக எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பற்றி நான் பலரிடம் கலந்துரையாடியதன் பயனாக அவர்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக எமது ஊரிலும் ஒரு ஆழ்கடல் தோணியை வைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. அதன் படி சங்கம் அமைக்கப்பட்டது. அதற்கு நான் தான் பெருளாளராக நியமிக்கப்பட்டேன்.

இதில் சங்க உறுப்பினர்கள் எல்லோரும் உத்தியோகத்தர்கள். தோணிவலைக்குத் தேவையான பணத்தை உறுப்பினர்கள் பங்குப் பணமாகச் செலுத்த அதனை எடுத்து தோணி வலை வாங்கிக் கொடுப்பதென்றும், எமக்கு லாபத்தை விட முதலைப் பாதுகாத்துத் தந்தால் போதும் அவர்கள் தொழில் செய்து பிழைத்தால் போதும் என்ற அபிப்பிராயமே பொதுவாக எல்லோருக்கும் இருந்தது.

அதன்படி தொழில் ஆரம்பிக்கப்பட்டது ஓரிரு வருடங்கள் தொழில் நடந்த போது கடலில் தோணி கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. இதனால் சில இழப்புக்கள் ஏற்பட்டன. பின்னரும் ஒரு முறை அவ்வாறான விபத்து ஒன்று ஏற்பட்டதும் நிர்வாகம் இத் தொழிலை தொடர்ந்து செய்ய விரும்பவில்லை.

ஏனெனில் களத்தில் நின்று அதைக் கவனிக்க நிர்வாகத்தினரால் முடியவில்லை. ஆகவே அதனை விற்று அவரவர் பங்குப் பணத்தை திருப்பிக் கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது அதன்படி விற்று சிறு தொகை கழிவுடன் திருப்பிச் செலுத்தப்பட்டது. அத்துடன் சங்கம் முடிவுக்கு வந்தது.

**பாண்டிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உப தலைவர்**
**(Vice President—Pandiruppu R.D.S)**

பாண்டிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக சிவஸ்ரீ. மா.கு. கணேசதுரைக் குருக்கள் ஐயா இருந்த காலத்தில் நான் அதன் உப தலைவராக இருந்தேன்.

இந்தக் காலப் பகுதியில் கல்முனை எம்.பியிடம் கேட்டு ஒரு கிராம முன்னேற்றச் சங்கக் கட்டிட நிதியைப் பெற்றுக் கொண்டோம். அதற்கான கட்டிடத்தையும் எல்லோருடைய ஒத்துழைப்புடனும் கட்டி முடித்தோம். அதன் திறப்பு விழாவுக்கு முன்னர் அதற்கான மின் விநியோகத்தைப் பெற வேண்டும் என்று நான் பாடுபட்டேன். காரணம் அந்த வீதியில் மின்சாரம் இருக்கவில்லை. உள்ளூராட்சி சபை அந்த வீதிக்கு மின்சாரம் வழங்க எம். பி. பணம் ஒதுக்கீடு செய்தால் மின்சாரம் தருவதாகக் கூறியது.

எம். பி. யிடம் கூறி அதற்கான ஒழுங்கை செய்திருந்த வேளை, எம். பி. யின் ஆதரவாளர் ஒருவர் தான் நீண்ட நாள் ஆதரவாளர் அந்த வீதிக்கு மின்சாரம் வழங்க முன்னர் தனது வீதிக்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்று வாதிட்டு தடைகளை ஏற்படுத்தினார். நாமும் விடவில்லை எம். பி. யிடம் வாதிட்டு வென்று வீதிக்கு மின்சாரம் எடுத்து கிராம அபிவிருத்தி சங்கத்துக் கட்டிடத்துக்கும் மின்சாரம் எடுத்து கட்டிடத் திறப்பு விழாவை நடத்தினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு நாங்கள் பாவித்த துரும்பு வீதிக்கு மின்சாரம் தந்தால் வீதியிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டுரிமையாளாகள் மின்சாரம் எடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கும் கடிதங்களைப் பெற்று சமர்ப்பித்ததுதான்.

**மறுமலர்ச்சி சனசமூக நிலையத்துக்கு ஆலோசகர்**
**(Advisor — Resilience Community Centre)**

பாண்டிருப்பில் மறுமலர்சச்சி சனசமூக நிலையம் ஒன்றிருந்தது. அதற்கு என்னை ஆலோசகராக நியமித்து இருந்தார்கள். இது ஒரு பதவி வழி கவுரவம் என்று கருதியே நான் ஏற்றுக் கொண்டிருந்தேன்.

ஆனால் நாள்கள் செல்லச் செல்ல என்னிடம் பல ஆலோசனைகளுக்கும் ஓடிவரத் தொடங்கினார் அப்போதிருந்த செயலாளர், திரு. சிவலிங்கம் வடிவேல் அவர்கள் அரசிடம் இருந்து நிதியுதவி பத்திரிகைகளுக்கு பெறுவதால் நிறைய பேப்பர் வேலைகள் கேள்விக் கொத்துக்கள் வரும் அவற்றை நிரப்பிக் கொடுக்க வேண்டி இருந்தது.

இந்த வேலையை நான் ஒழுங்காக தங்கு தடையின்றி செய்து கொடுத்ததால். அந்தச் சங்கம் பாராட்டப்பட்டதோடு அதனை அம்பாறை மாவட்டத்தின் முன்மாதிரிச் சங்கமாகவும் அறிவித்தார்கள்.

இளைஞர்கள் எல்லோரும் பிரிந்து போய்விட்டதால் அது இப்போது செயல்படுவதாக இல்லை.

**மனேஜர், ஈஸ்ரண் றேடிங் கோப்பரேஷன்.**
**(Manager – Eastern Trading cooperation)**

கல்முனையில், அடிக்கடி தமிழ் முஸ்லீம் கலவரம் ஏற்படுவதுண்டு. அதனால் இனங்களுக்கிடையே அமைதியின்மை அடிக்கடி ஏற்படும். ஆட்கள் கடத்தப்படுவதும், கொல்லப் படுவதும், கடைகள் எரியூட்டப்படுவதுமாக சில நாட்களுக்குத் தொடரும். கல்முனை நகரிலே கடைகளும் பிரதான சந்தையும் அரச காரியாலயங்களும் இருந்தன. இது தமிழ்ப் பிரதேசமாக இருந்த போதும், இவை அனைத்தும் முஸ்லீம்களின் கட்டுப்பாட்டிலே இருந்தன.

இதனால் இவ்வாறான சந்தர்ப்பங்களில் கடைவீதிக்குச் செல்வதோ பொருட்களைக் கொள்வனவு செய்வதோ தமிழர்களுக்குப் பெரும் சிரமமான காரியமாக அமைந்து இருந்தது. இதனால் நாங்கள் சில பேர் சேர்ந்து எங்களுக்கென ஒரு மொத்த விற்பனை ஸ்தாபனத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று திட்டமிட்டோம். இதற்காக இப்பகுதியில் முன்னணி தொழிலதிபர்களின் உதவியை நாடி அவர்களை அழைத்து எமது திட்டத்தை விளங்கப்படுத்தினோம். அவர்கள் தங்களுக்கு இதில் ஈடுபட முடியாது என்றும் அதை ஆரம்பிப்பதற்கான பண உதவியை தந்து உதவுவதாகவும் கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் படி ஆரம்பிக்கப்பட்டதுதான் ஈஸ்ரண் ரேடிங் கோப்பரேஷன். இது 1987ல் ஆரம்பிக்கப்பட்டது. இதைக் கொண்டு நடத்த ஒருவரும் முன்வராத போது, நான் முன்னின்று இதனைப் பொறுப்பேற்று நடத்தினேன்.

ஆரம்பத்தில் இது நல்ல முறையில் தான் நடந்தது. கல்முனை வியாபாரிகள் ஆட்டம் காணும் நிலைக்கு வந்தார்கள். ஆனால் எங்கள் பொருட் கொள்வனவு செய்தவர்களின் தவறுகளால் பொருட்கள் விலையை கூட்டி விற்க வேண்டி ஏற்பட்ட போது வியாபாரிகள் மீண்டும் கல்முனை நகரை நாடிச் செல்ல ஆரம்பித்தார்கள். இதனால் எங்கள் வியாபாரம் வீழ்ச்சியடைந்தது.

இதனால் இதனைக் கொண்டு நடத்துவது சிரமமாக இருந்தது. பலர் இதில் லாபத்தை எதிர்பாராமல் இருந்த போதும், ஒரு சிலர் லாபத்தை எதிர்பார்த்து ஏமாந்து போயினர். இதனைப் பொது மக்களுக்கான சேவையாக அவர்கள் கருதாததே அதற்குக் காரணம்.

அதனால் இலாபக் கணக்கு பார்ப்பதற்கும் இருப்பு எடுப்பதற்கும் ஒருவரை பங்குதாரர் ஒருவர் நியமித்தார். அது சில மாதங்கள் எடுத்தது. அதுவரை கொள்முதல் ஏதும் செய்யவில்லை. வியாபாரம் அடிபட்டுப் போய் விட்டது. இதனால் அதனை 1988ல். மூட வேண்டி ஏற்பட்டது. மிகுதிப் பொருட்களை விற்று பங்குப்பணம் மீளளிக்கப்பட்டது. முன்னின்றவர்களே நஷ்டப்பட்டனர்.

**உப தலைவர் கல்முனை முத்தமிழ் கழகம்.**
**(Vice President Kalmunai Muththamizh kazhakam)**

ஆரம்ப நாட்களில் மூத்த எழுத்தளர்களினால் கல்முனை தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப் பட்டுப் பல வருடங்களாக நடைமுறையில் இருந்தது. இதில் இன மத பேதம் இன்றி தமிழில் எழுதுபவர்கள் பலரும் அங்கத்துவத்திலும் பதவிகளிலும் இருந்து நடத்தி வந்தனர்.

அந்த நாட்களில் நான் வெளியூர்களில் கடமையாற்றியதனால் இதில் நான் அங்கத்துவம் பெற்றிருக்கவில்லை. சில வேளைகளில் கூட்டங்கள் நடக்கும் போது நான் ஊரில் இருந்தால் விசேச அழைப்பின் பேரில் கலந்திருக்கிறேன். அவ்வளவு தான்.

பின்னர் இதில் அங்கத்துவம் பெற்றிருந்த முஸ்லீம் எழுத்தாளர்கள் சிலர் இதன் பெயரை கல்முனை எழுத்தாளர் சங்கம் என்று மாற்றியதாகவும் அதனால் அதற்குள் சலசலப்பு ஏற்பட்டுப் பலர் பிரிந்து நிற்பதாகவும் அறிந்தேன். அப்போது நான் கல்முனைக்கு மாற்றம் பெற்று வந்து எனது மனைவியின் பெயரில் கல்முனையில் ஒருவியாபார நிறுவனம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தேன்.

இது பற்றிய விபரம் எனக்குக் கிடைத்ததும், கல்முனை முத்தமிழ் கழகம் என்ற ஸ்தாபனத்தை நிறுவுவது சம்பந்தமாக ஒரு யாப்பை ஆக்கிக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு விலகி நின்றவர்களைச் சந்தித்து விளங்கப் படுத்தினேன். அதில் முதன் முதல் எனக்கு ஆதரவு தந்தவர் ஒரு முஸ்லீம் கவிஞர் நண்பர் மரதூர்வாணன் என்பவராகும். அதன் பின் அவர் எனது வேலையை இலகுவாக்கினார்.

கல்முனை முத்தமிழ் கழகம் எனது கடையின் பின்பக்க அறையில் அங்குரார்ப்பணமாகியது. அதற்கு **கவிஞர் பாண்டியூரன்** தலைவராக நான் உப தலைவராக நியமிக்கப்பட்டேன். அதிலும் நான் முன்னர் குறிப்பிட்ட நண்பர் ஜனாப் மரதூர்வாணனுடன் ஜனாப் யுவன் என்னும் கவிஞரும் எங்களுடன் இணைந்து இருந்தனர். இது 1975ல் இடம் பெற்றது.

நாங்கள் சில கவியரங்குகளை, மேடை நிகழ்ச்சிகளை நடத்தி விளம்பரத்தைப் பெற்றுக் கொண்டோம். எங்கள் வளர்ச்சி கல்முனை எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பொறுக்க முடியவில்லை. இதனால் அவர்கள் நடத்திய சாகித்திய விழாவில் வெளியிட்ட சஞ்சிகையில் எங்களில் பலரை, குறிப்பாக என்னையும் நண்பர் மணிக்கவிராயரையும் புறக்கணித்திருந்தார்கள்.

இது பற்றி நாம் அப்போது வெளிவந்த சுடர் என்னும் சஞ்சிகையில் இலக்கியப் பிரச்சினையாக கிளப்பி இருந்தோம். அவர்களால் சரியான பதில் தரமுடியவில்லை. அதனை பின்னர் கீழே பார்ப்பீர்கள்.

## இந்துமதி –சமய சஞ்சிகைக்கு ஆலோசகர்
## ((Advisor - Inthumathy a religious Magazine)

எமது ஊரைச் சேர்ந்த சிவஸ்ரீ க.ஐ. யோகராஜா ஐயர் எமது ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய குருக்களாக இருந்த போது இந்துமதி என்னும் ஒரு சமய சஞ்சிகையை வெளியிட்டார். அவரே அதன் ஆசிரியராக இருந்தார். அதற்கு என்னை ஆலோசகராக இருக்கும்படி வேண்டினார். நானும் ஏற்றுக் கொண்டேன்.

இதில் எனக்கு எந்தச் சிரமமும் இருக்கவில்லை. விடயங்களைப் பரிசீலித்து வெளியிடுவதற்கு அனுமதிப்பது மட்டும் தான் எனது கடமையாக இருந்தது.

## சர்வோதய சங்கத்தின் – போஷகர்.
## (Patron — Sarvodaya Society)

ஊரில் ஒரு சர்வோதய சங்கம் அமைக்கும் படி பலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் யாரும் அதனைக் கவனத்தில எடுக்கிறார்கள் இல்லை என்றும் என்னிடத்தில் வந்து கூறப்பட்டது. இதனை அமைப்பதன் மூலம் ஒரு பாலர் பாடசாலையை நடத்தக் கூடிய சாத்தியம் இருப்பதாகவும் கூறப்பட்டது. அப்போது நான் பல சங்கங்களில் முக்கிய பதவிகளில் இருந்தேன். அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கூறினேன் என்னால் அமைத்துத் தரமுடியும் ஆனால் எந்தப் பதவியும் வகிக்க முடியாது என்று. ஆகவே தலைவராக இருக்க ஒருவரைத் தேடி-எடுத்துக் கொண்டு ஆரம்பிப்போம் என்றேன்.

அதன் படி ஓய்வு பெற்ற ஆசிரியர். திரு.வி. இரத்தினசிங்கம் ஐயா அவர்களை அணுகி சம்மதம் கேட்டேன் அவரும் மனமுவந்து சம்மதம் தரவே சர்வோதய சங்கம் அமைக்கப்பட்டது. அதற்கு என்னைப் போஷகராக நியமித்தார்கள். அதில் பல குழுக்கள் அமைக்கப்பட்டன. பாலர் குழு, சிறுவர் குழு, இளைஞர் குழு, முதியவர் குழு, பொதுக் குழு என்ற பல குழுக்கள் அமைக்கப்பட்டது. பாலர் பாடசாலைக்கு ஆசிரியராகவும் ஒருவரைத் தெரிவு செய்தோம்.

பாலர் பாடசாலைக்கு அரச காணியில் ஒரு கொட்டில் அமைக்க பணம் பொருட்கள் தேவைப்பட்டன. அவற்றை ஊர் மக்களிடம் இருந்து பெற்றுக் கொடுத்தேன். இளைஞர்கள் கொட்டிலை அமைத்தார்கள். பாடசாலை அமைத்து செயற்பட ஆரம்பித்தது.

பின்னாளில் இந்த பாலர் பாடசலை ஆசிரியை அகில இலங்கை ரீதியில் சர்வோதய நிறுவனத்தின் இணைப்பாளராக படிப்படியாக உயர்ந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் அந்த நன்றியை இப்போதும் என்னிடம் காட்டிக் கொள்வார்.

இதன் பலன் தான் நான் ஏற்கனவே சுட்டிக் காட்டிய சர்வோதயத்தில் இரண்டு வருடங்கள் பொறியியலாளராகக் கடமையாற்றக் கூடியதாக இருந்தது.

## தலைவர், அம்பாரை மாவட்ட இந்து இளைஞர் பேரவை (President – Ampara District Y.M.H.A. Federation)

அம்பாரை மாவட்டத்தில் அப்போது 40 இந்து இளைஞர் சங்கங்கள் இருந்தன. நான் அதில் பாண்டிருப்பு இந்து இளைஞர் மன்றத்தின் தலைவராக இருந்தேன்.

இவ்வாறு ஒவ்வொரு மன்றத்தின் தலைவர் செயலாளர்கள் கூடி அம்பாரை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் உறுப்பினர்களைத் தெரிவு செய்வது வழக்கம். இவ்வாறு தெரிவின் போது கல்முனையில் நடந்த பொதுக் கூட்டத்தின் போது அடுத்த ஆண்டுக்கான தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டேன். தொடர்ந்து சில ஆண்டுகள் இந்தப் பதவியில் இருந்தேன்.

அப்போது ஒவ்வொரு வருடமும் வருடாந்தக் கூட்டத்தை ஒவ்வொரு ஊரிலும் நடத்தினேன். வழமையாக கல்முனை நகரத்தில் நடத்தி வந்த நடைமுறையை மாற்றியதுடன். அந்தந்த மன்றங்கள் கூட்டத்தை ஒழுங்கு பண்ணி நடத்தும் பொறுப்பையும் அவர்களிடமே ஒப்படைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாண்டிருப்பு சமாதான சபைக்கு – செயலாளர்**
**(Secretary – Pandiruppu Peace committee)**

ஊர்ப் பிரச்சினைகளைக் கவனிக்கும் பொருட்டு ஒரு சமாதான சபை அமைக்கப்பட்டு இருந்தது. அதற்கு என்னை செயலாளராக நியமித்தார்கள். அதற்கு வரும் ஒழுங்கைப் பிரச்சினைகள், வீதி வளவுப் பிரச்சினைகளைச் சமாதானமாக தீர்த்து வைத்தோம். சில வருடங்களில் அது இயங்காது போய்விட்டது.

**கல்முனை சிற்றிசன் கொமிட்டிக்கு – இணைச் செயலாளர்**
**(Joint-Secretary Kalmunai Citizen committee)**

ஒரு முறை கல்முனை நகரில் தமிழ்க்கடைகள் சில எரிக்கப்பட்டதனால் தமிழ்–முஸ்லீம் உறவு விரிசலடைந்தது. அதனை தீர்க்கும் பொருட்டு அப்போதைய பாதுகாப்பு அமைச்சராக இருந்த திரு. ரஞ்சன் விஜயரட்ண அவர்கள் கல்முனைக்கு விஜயம் செய்து தமிழ் – முஸ்லீம் இரு இனங்களையும் இணைத்து ஒரு சிற்றிசன் கொமிட்டியை அமைத்து இனிமேல் எந்தப் பிரச்சினையும் வராமல் இந்த இரு இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் தத்தம் பக்கம் வரும் பிரச்சினைகளை கட்டுப்படுத்துவதோடு இரு பகுதியாரும் ஒன்று சேர்ந்து கதைத்து பிரச்சினைகள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார். இதற்கு தமிழ்ப் பகுதி உறுப்பினரில் இருந்து நான் இணைச் செயலாளராக நியமிக்கப் பட்டேன்.

இது இந்திய அமைதி காக்கும் படை இருக்கும் வரை ஒழுங்காகச் செயல்பட்டது. பின்னர் மறைந்து போனது.

**போசகர், இந்துமத கலாச்சார அபிவிருத்தி சபை, பாண்டிருப்பு**
**(Patron – Hindu Cultural Development Society— Pandiruppu)**

பாண்டிருப்பில் அமைந்திருந்த இந்துமத கலாச்சார அபிவிருத்தி சபைக்கு என்னைப் போசகராக நியமித்திருப்பதாக அறிவித்திருந்தார்கள். சில கூட்டங்களில் கலந்து சில ஆலோசனைகள் வழங்கியதுடன் சரி. அதன் பின்னர் எனக்குப் போதிய நேரம் இன்மையால் கலந்து கொள்ள முடியவில்லை.

அது எங்கள் ஆலயக் கட்டிடத்தில் இயங்கி வந்தது. அதில் வாசிப்பதற்கு பத்திரிகைகளும் கூட ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இது சிலகாலம் ஒழுங்காக நடந்தது. பின்னர் நிதிப்பிரச்சினை காரணமாக மூடப்பட்டதென அறிந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைவர், பஞ்சாயத்து சபை. பாண்டிருப்பு**
**(President – Panchayat Board— Pandiruppu)**

நான் ஆலயத் தலைவராக இருந்த போது, பஞ்சாயத்து சபை அமைக்கப்பட்டது. நான் கூட்டத்துக்கு சமூகம் அளிக்காத போதும் என்னையும் நிர்வாக உறுப்பினர்களில் ஒருவராக நியமித்திருப்பதாக எனக்கு அறிவிக்கப்பட்டது. அப்போதைய பாடசாலை அதிபரே பஞ்சாயத்து சபைக்கு தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். ஒரு சில கூட்டங்களிலே அவரது செயல்பாடு திருப்தி அளிக்காததினால் என்னைத் தலைவராக்கினார்கள்.

நான் அந்தச் சபையை ஒழுங்காக நல்ல முறையில் நடத்தினேன். பாண்டிருப்புக்கு மட்டுமென அது ஸ்தாபிக்கப்பட்டாலும் எனது நடைமுறைகளும் தீர்ப்பும் அயலூர் கிராம மக்களையும் கவர அவர்களிடம் இருந்தும் முறைப்பாடுகள் விசாரணைக்காக எம்மிடம் வந்தன. இதில் பக்கத்து முஸ்லீம் கிராமமும் அடங்கும். எதிராளிகளுக்கு அழைப்பாணை அனுப்பி வரவழைத்து விசாரித்து முடிவினை வழங்கினேன்.

எங்கள் கிராமப் பிரச்சினைகள் வரும் போது உறுப்பினர்களை இரகசியமாக அனுப்பி உண்மை நிலையை விசாரித்த பின்னரே இரு பகுதியையும் விசாரித்து தீரப்பு வழங்கினேன். தீர்ப்புகள் நியாயமாக இருந்ததால் எதிராளிகளும் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நடந்தனர். 1990ல் நான் ஊரை விட்டுச் சென்றதுடன் இது செயலற்றுப் போய் விட்டது.

**பாண்டிருப்பு சமூக பொருளாதார அபிவிருத்தி சங்கத்தின் தலைவர்**
**(President— Pandiruppu Socio-Economic Development society)**

1988ன் கடைசிப் பகுதியில், பாண்டிருப்பு சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தை அமைத்தேன். அதற்கு என்னையே தலைவராக நியமித்தனர். நான் மறுத்த போது, திட்டங்களின் அடிப்படையில் பல காரியாலயங்களுக்குச் சென்று உத்தியோகத்தர்களைச் சந்தித்துக் கதைக்க வேண்டி இருப்பதால் என்னையே இருக்கும் படி பணித்தனர். எனக்கு இருக்கும் பணிகளைக் கூறியும் இதையும் உங்களால் தான் நடைமுறைப்படுத்த முடியும் என்று கூறிவிட்டனர்.

1989ல் செயற் திட்டங்கள் வகுக்கப்பட்ட போதும் அதனைச் செயற்படுத்துவதற்கிடையில் நான் 1990 ல் ஊரை விட்டுச் சென்ற விட்டதால் அதனை மற்றவர்களால் கொண்டு நடத்த முடியவில்லை. அது செயலற்றுப் போய்விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுவாக:**

இப்போது நாம், எனது பொது சமய, சமூகப் பணிகளின் இறுதிக்கு வந்துள்ளோம். நான் எவ்வளவு தான் திறமையாகச் செயலாற்றினாலும் ஒரு சிலர் எனக்கு எதிர்ப்பினைக் காட்டவும் செய்தனர் என்பது மறுக்க முடியாத உண்மை. 100 சதவீதம் ஆதரவைப் பெற முடியாது போனாலும் பெரும்பான்மையானவர்கள் எனக்கு ஆதரவு தந்தது மகிழ்ச்சிக்குரியது.

நான் அதிகமான செயல்களில் வெற்றி பெற்றமைக்கு எனது கடுமையான உழைப்பே காரணம் என்பதை நான் இங்கு கூறித் தான் ஆகவேண்டும். அதாவது எந்த உறுப்பினர் தன் பணியைச் செய்யத் தாமதித்தாலும் அல்லது தவறினாலும் அப் பணியையும் நான் செய்து செயலை வெற்றி பெறச் செய்வது எனது வழக்கமாக இருந்தது.

ஒருவர் கடமை தவறுவதானால் ஒரு சங்கத்தின் செயற்பாடு முடங்கிவிடக் கூடாது, அது பொது மக்களுக்குச் சிரமத்தைக் கொடுக்கக் கூடாது என்பதில் நான் கண்ணும் கருத்துமாய் இருந்தேன்.

இதைவிட பணச்செலவில் மிகக் கவனமாக நடந்து கொண்டேன். கணக்கு வழக்கு உரிய முறையில் காட்டப்பட வேண்டும், அது ஒவ்வொருவர் கையிலும் சென்றடைய வேண்டும் என்பதில் கவனமாக இருந்ததில் பல விடயங்களில், பல உள்ளங்களை வெற்றி பெறக் கூடியதாக இருந்தது.

இவ்வாறு இருந்த போதும் 1990 களின் பின்னர் பல சங்கங்கள் செயலிழந்து போக நான் காரணமாய் இருந்திருக்கிறேன் என்பது துக்ககரமான சம்பவம். அவ்வாறு செல்லும் படி என்னைத் தூண்டியதும் ஊர் மக்கள் தான் என்பதையும் நான் இங்கு கூறவேண்டி இருக்கிறது.

ஒரு சேவையாளருக்கு ஏற்பட்ட அனர்த்தம் எனக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற கவலையில் ஊர் மக்களும் சொந்தங்களும் என்னையும் எனது மகனையும் அனுப்பி வைத்தனர். அப்போதும் இவ்வளவு சேவையாற்றிய எனக்கு இக்கதி நேர்ந்து விட்டதே என்று கவலைப்பட்டவர்களின் செய்தியும், அத்தோடு பொதுப்பணி செய்பவர்கள் எதுவரினும் மக்களைக் கைவிட்டுச் சென்றிருக்கக் கூடாது என்று கூறிய செய்திகளும் எனது காதுக்கு எட்டத் தான் செய்தது.

என்னை வழி நடத்திய இறைவனுக்கு இரு கரம் கூப்பி நான் கண்ணீர் மல்க நன்றி கூறுகின்றேன்.

இதனால் தான் நான் 12 வருடங்களுக்குப் பிறகு ஊருக்கு வந்தாலும் ஊர் மக்களுக்குச் சேவையாற்றக் கூடியதாக இருக்கிறது. சுவர் இருந்தால் தானே சித்திரம் வரையலாம்.? அது மட்டுமின்றி நான் வெளியூரில் இருக்கும் போதும் பலர் என்னை நாடி வந்து உதவிகள் பெற்றுச் சென்றிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக நான் எந்தப் பொதுப் பணியில் ஈடுபட்டாலும் அதில் நேர்மையான இதயத்துடனும், முழுமனதுடனும், அர்ப்பணிப்புடனும், எனது நேரம், காலம், செல்வம் எல்லாவற்றையும் செலவழித்தே செய்திருக்கிறேன். எங்கெங்கு நான் சேவையில் இருந்தேனோ அங்கெல்லாம் எனது சேவையின் பெறுபேற்றின் அடையாளமாக ஏதோ ஒன்றைச் செய்து விட்டு வந்திருக்கின்றேன். இதனால் எதிரிகளையும் சம்பாதித்து இருக்கிறேன். எனது உயிருக்கு ஆபத்தினை ஏற்படுத்த எத்தனை பேர் முயன்றிருக்கின்றனர். ஆனாலும், அந்தப் பணியிடங்களில் எல்லாம் என் நினைவு நிலைத்திருக்கும் என்று நினைக்கிறேன். இது தான் நான் இறந்த பின்னர் பேசப்படும் எச்சம் என்று நினைக்கிறேன்.

**உறுப்பினர் – பிரம்ம குமாரிகள் உலக ஆன்மிக பல்கலைக்கழகம் இராயஸ்தான்**
**(Member -Brahma Kumaris Spritual World University, Rajastan)**

முடிவாக, இப்போது நான் பிரம்ம குமாரிகள் ஆன்மீக நிலையம் இலங்கைக் கிளையில் உறுப்பினராக இருந்து கொண்டு கல்முனை, பாண்டிருப்பு நிலையங்களில் ஆன்மீக சேவையாற்றிக் கொண்டிருக்கின்றேன். இதில் நான் சேர்ந்து இப்போது 15 வருடங்களாகின்றன.

இதில் 9 வருடங்கள் அதன் தலைமை நிலையம் இருக்கும் இந்தியா, இராஜஸ்தான், சென்று பயிற்சிகள் பெற்று வந்திருக்கிறேன். இனி வருங்காலத்திலும் செல்லக் கூடியதாக இருக்கும். இப்போது இங்கே தியானம் கற்பிக்கும் ஓர் ஆசிரியராக இருக்கிறேன். அத்துடன் நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஆங்கிலத்தில் இருக்கும் இந் நிலையத்துக்குரிய ஆன்மீக நூல்களை தமிழில் மொழி பெயர்த்து வருகின்றேன்.



*பிரம்ம குமாரிகளால் பெற்றோர் தின விழாவில் கௌரவிக்கப்பட்ட போது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உறுப்பினர் சமாதான நீதவான்களின் மனித உரிமைகள் நிறுவனம்**
**(Member – Human Rights Organization of Justice of Peace)**

அடுத்து, அண்மையில் மனித உரிமைகள் சமாதான நீதவான்கள் நிறுவனத்தில் ஓர் உறுப்பினராகச் சேர்ந்துள்ளேன். இது அண்மைக் கால ஏற்பாடு. இனிமேல் தான் இதிலிருந்து ஆற்றக் கூடிய சேவை என்ன என்பதை அறிய முடியும்.

இப்போது என்னை கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உதவிப் பணிப்பாளராக நியமித்திருக்கிறார்கள். அதற்கான அறிமுக அட்டையும் நியமனக் கடிதமும் அனுப்பியிருக்கிறார்கள்.

**இணைப்பாளர் நால்வர் கோட்டம் கல்முனை**
**Co-ordinator Naalvar kottam Kalmunai**

அண்மையில் என்னை நால்வர் கோட்டப் பணிப்பாளர் தங்கள் சமய ஸ்தாபனத்துக்கு இணைப்பாளராக சேர்த்திருப்பதாக அறிவித்து என் அனுமதியைக் கோரியிருக்கிறார். சம்மதம் தெரிவித்து இருக்கின்றேன்.

**பொருளாளர் கல்முனை தமிழச் சங்கம்**
**Treasurer – Kalmunai Tamil Sangam**

கல்முனையில் ஒரு தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தரும்படி கேட்டார்கள் அதற்கான வேண்டிய அனைத்து உதவிகளையும் வழங்கினேன். முதலில் ஆலோசனைக் கூட்டத்தையும், பின்னர் அங்குரார்ப்பணக் கூட்டத்தையும் நடத்தினோம். இப்போது இதிலும் என்னை பொருளாளராக (நிதிப் பொறுப்பாளராக) நியமித்திருக்கிறார்கள். இதன் மூலம் இப்போது பல நிகழ்ச்சிகளைச் செய்து கொண்டிருக்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டம் பதவிகள் வகிப்பது
## AWARDS AND POSTS HELD

(Human Rights Organization of Justice of Peace)
**சமாதான நீதவான்களின் மனித உரிமைகள் நிறுவனம்**

Appointed as Asst. Director for Kalmunai Area
கல்முனைப் பிரதேசத்துக்கு உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருப்பது

அகில இலங்கை சமாதான நீதவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டிருப்பது
(Justice of the Peace for the whole Island by the Ministry of Justice)

**THE UNITED ORGANIZATION OF ALL COMMUNITIES**
Samasri Deshamaniya awarded on June 26th 2011
அகில இன நல்லுறவு ஒன்றியம் சாமஸ்ரீ தேசமான்ய என்னும் பட்டம் 2011 ஜூன் 26ல் வழங்கிக் கௌரவித்தது.



*அகில இன நல்லுறவு ஒன்றியம் **சாமஸ்ரீ தேசமான்ய** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்த போது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாபூசண விருது 2011

2011 ஆம் ஆண்டுக்கான 27ஆவது அரச கலாபூசணம் விருது அரச கலாச்சார அமைச்சினாலும் இந்து கலாச்சார திணைக்களத்தினாலும் இலக்கியம் எழுத்துத் துறைக்காக வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவ்விழா கொழும்பு 07 ஆனந்த குமாரசாமி மாவத்தையில் அமைந்துள்ள ஜோன் த சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில், 2011 மார்கழி, 17ஆம் திகதி கலாச்சார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் கௌரவ டி. பீ. எக்கநாயக்க அவர்கள் தலைமையில் கலைத்துறைக்கு உன்னத சேவையாற்றிய கலைஞர்களை கௌரவித்து கலாச பூசண அரச விருது வழங்கப்பட்டது.

அகில இலங்கை ரீதியில் இவ்விருது வழங்கலுக்காக 50 தமிழ்க் கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அம்பாரை மாவட்டத்திலிருந்து இவ்விருதிற்காக நான் உட்பட நான்கு கலைஞர்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.



அரச கலாச்சார அமைச்சினாலும் இந்து கலாச்சார திணைக்களத்தினாலும் இலக்கியம் எழுத்துத் துறைக்காக **கலா பூசண** அரச விருது வழங்கி கௌரவிக்கப்பட்டபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்துலகில் பொன் விழா காணும் 'முகில்வண்ணன்' (2011இல் ஐம்பது வருடங்கள்)

இனி எனது எழுத்துலக வாழ்க்கை பற்றிப் பார்ப்போம். எழுத்துல வாழ்க்கை பற்றி எழுதும் போது, என்னோடு சம்பந்தப் பட்ட பத்திரிகைகள் பற்றியும் நான் எழுத வேண்டி இருக்கிறது. அவர்கள் செய்த நல்லது கெட்டது எல்லாம் இதில் வரலாம். என்னுடைய வாழ்க்கையோடு சம்பந்தப் பட்டிருப்பதனால் நான் அதைக் குறிப்பிட வேண்டி இருக்கிறது. அவர்களைப் பற்றிக் குறை கூறுவதற்காக இது எழுதப்படவில்லை. எனக்கு ஏற்பட்ட இழப்புகள் இதில் அடங்கி இருக்கின்றன. அதனால்...

எழுத்துலகுக்கு வருவதற்குரிய முன்னேற்பாட்டை பற்றிக் கொஞ்சம் முதலில் பார்ப்போம். எனது தந்தை எங்களை விட்டுப் பிரிந்த ஆண்டு 1955 என்று முன்னர் குறிப்பிட்டு இருந்தேன். அப்போது நான் ஜே. எஸ். சி. (எட்டாம் ஆண்டு) படித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது நான் எழுத்துலகுக்கு வர காலாக அமைந்த **திரு. தமிழ்வாணன்** அவர்களின் கல்கண்டு சஞ்சிகையைக் குறிப்பிட்டாக வேண்டும். அப்போது இலங்கையில் 5 சதம் விற்ற இந்த சஞ்சிகையையும் இதனைப் போன்று கரும்பு என்னும் இன்னுமொரு சஞ்சிகையையும் இந்தியாவில் இருந்து வரும்.

ஒவ்வொரு வாரமும் வாங்கிப் படிப்பதை நான் வழக்கமாக்கிக் கொண்டேன். தொடர்ந்து கல்கண்டு, குமுதம், கல்கி போன்ற பத்திரிகைகளையும் அப்போது இந்தியாவில் இருந்து சந்தா செலுத்தி நேரடியாகப் பெற்று வாசித்து வந்தேன்.

ஒரு நாள் விதியில் நடந்து போகும் போது ஒரு பத்திரிகை நறுக்கு பறந்து கொண்டிருந்தது. அது எனது காலடியில் வந்து விழ எடுத்து வாசித்தேன். அதில் பெரிய எழுத்துக்களில் ''கண்டது கற்கப் பண்டிதனாவான்'' என்ற வாசகம் இருந்தது. அன்றிலிருந்து கையில் கிடைத்தது எல்லாவற்றையும் படிக்கும் பழக்கத்தைப் பின்பற்றினேன்.

இதற்காக நான் கல்முனை நகரில் இருந்த மணமகள் புத்தகசாலைக்குச் செல்வது வழக்கம். அங்கு கதைப் புத்தகத்தை வாங்கினால் வீட்டுக்கு (நடந்து தான் வருவது) வந்து சேரும் முன்னர் வாசித்து முடித்துவிடுவேன்.; சில வேளைகளில் அங்கு நின்ற படியே சில புத்தகங்களைப் படித்து விட்டும் வருவதுண்டு. இவ்வாறு தான் எனது வாசிக்கும் பழக்கம் அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு நிறைய வாசித்ததனால் எனக்கு எழுத வேண்டும் என்ற எண்ணம் அப்போது ஏற்படவில்லை. பின்னர் அப்படி வரக் காரணமாக இருந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். ஆனால் எழுத்தாளனாக வரவேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கக் காரணமாக இருந்தது **திரு. தமிழ்வாணன்** அவர்கள் கூறிய கைரேகை சாஸ்திரம்.

கைரேகை இவ்வாறு அமைந்தால் எழுத்தாளனாக வரலாம் என்று அவர் கூறியிருந்தார். நான் அவ்வாறு எனது ரேகையை எண்ணத்தின் மூலம் வளர்த்துக் கொண்டேன். அப்போதும் எழுத வேண்டும் என்ற எண்ணத்தை விடப் படிக்க வேண்டும் என்ற எண்ணமே முனைப்புடன் இருந்தது.

பின்னர் நான் **எஸ்.எஸ்.சி (விஞ்ஞானம்)** மூன்று வருடம் படிக்க வேண்டி இருந்தது. இதில் முதலாம் ஆண்டு படிக்கும் போது 1959ல் பாடசாலைப் பத்திரிகைக்கு ஒரு கதை எழுதித் தரும்படி தமிழாசிரியர் வற்புறுத்தி எழுதி வாங்கிக் கொண்டார். அதுவும் வெளிவந்தது. அதன் பின்னரும் சில கதைகள் எழுதி வாங்கி எடுத்துக் கொண்டார். ஆனால் பத்திரிகை மீண்டும் வெளிவரவில்லை என்று நினைக்கின்றேன்.

இந்த காலகட்டத்தில் **திரு. எஸ்.பொ.** அவர்களுடைய **தீ. வீ, சடங்கு,** போன்ற நூல்கள் வெளி வந்து என்னையும் இவ்வாறு எழுத வேண்டும் என்ற ஆவலைத் தூண்டியது. எனது தேசியப் பத்திரிகைகளின் எழுத்துலகப் பிரவேசம் 1961ல் தினகரனில் ஒரு கட்டுரையுடனும் ஒரு கவிதையுடனும் ஆரம்பமாகியது.

சிலபேர் சில காலத்தின் பின் தாங்கள் இத்தனையாம் ஆண்டில் இருந்து எழுதியதாக எந்த ஆதாரமும் இன்றிக் கூறுகிறார்கள். இப்போது அப்படிக் கூறுவதும் கூட ஒரு வழக்காகிவிட்டது என்று நினைக்கிறேன். இதை எவரும் ஆராய்ந்து பார்க்கப் போவதில்லை என்ற தைரியம் அவர்களை ஊக்குவிக்கிறது எனலாம்.

நான் 1961ல் தேசியப் பத்திரிகையில் எழுதினேன் என்பதற்கான ஆதாரத்தை இங்கே தருகிறேன். இக் கட்டுரை நான் பாடசாலையில் பயின்று கொண்டிருந்த போது எழுதியது. இது வெளிவந்த பின்னர் தான் எங்கள் தமிழ் ஆசிரியருக்குக் கூடக் காட்டினேன். இத்தனைக்கு இக்கட்டுரை ஒரு பண்டிதரை எதிர்த்து எழுதியதாகும். எனது ஆதாரத்தை கீழே தருகிறேன் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் நடக்கும் பேச்சுப் போட்டிகள்

**(திருமதி கங்கேஸ்வரி கந்தையா அவர்கள் 14–10–61 தினகரனில் எழுதியிருந்த ''பேச்சுப் போட்டிகளில்; கவனிக்க வேண்டியவை'' என்ற கட்டுரையைத் தொடர்ந்து மற்றொரு வாசகர் தனது கருத்தை இங்கு கூறுகிறார்)**

*(இக் கட்டுரை 21–10–61ல் தினகரனில் வெளிவந்தது)*

பேச்சுப் போட்டி என்றால் என்ன? அதற்கு வேண்டிய அம்சங்கள் எவை? பேச்சுப் போட்டிகள் ஏன் நடத்தப் படுகின்றது? என்பதை எல்லாம் அறிந்தவர்கள் தான் மத்தியஸ்தம் வகிக்க வேண்டும்.

பேச்சுப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகிப்பவர்கள் வித்துவானாகவோ, பாராளுமன்றப் பிரதிநிதியாகவோ, கல்லூரி ஆசிரியராகவோ, அல்லது பெரிய பட்டம் பதவி வகிப்பவராகவோ இருக்க வேண்டியதில்லை. ஆனால் அவர்கள் பேச்சுக் கலையில் வல்லவர்களாக இருக்க வேண்டும்.

**நடிகர்களின் நடிப்பு**

சிலர் சினிமா நடிகர்களின் நடிப்பைப் பின்பற்றி அனாவசியமான முகபாவங்களைக் காட்டி அபிநயஞ் செய்வது பொருத்தமான தல்ல. **''சினிமாக் கதாநாயகர்களை மனதில் நினைத்து அபிநயஞ் செய்வது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்''** என்றும் **''உணர்ச்சியுள்ள பேச்சுக்களைப் பேச வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் பேச்சுக்களைத் தெரிவு செய்யும் நிலை மாற வேண்டும்''** என்றும் திருமதி கங்கேஸ்வரி கந்தையா கூறியிருக்கின்றார்.

கழகக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள், வரவேற்புரை, நன்றியுரை வழங்கும் கூட்டங்கள் தவிர மற்றக் கூட்டங்களுக்கு, முக்கியமாக பேச்சுப் போட்டிக்கு உணர்ச்சியுள்ள பேச்சுக்களே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

பேச்சுப் போட்டிக்கு முக்கிய அம்சங்கள் ஐந்து அதில் முதலாவது நடிப்பு, ''உங்களுக்குப் பேச ஆசையா? அப்படியானால் ஓரளவு நீங்கள் நடிக்கவும் பழகிக் கொள்ள வேண்டும். நடிப்புத் திறன் உங்கள் சொல்வன்மைக்கு மிக்க ஊக்கமும் உணர்ச்சியும் அளிக்கும் என்கிறார்கள் முதிர்ந்த பெரும் பேச்சாளர்களாகிய கே.வி வீரராகவன், பி.ஏ.பி.எல். அன்புப்பழம்நீ என்பவர்கள். நாம் சாதாரணமாகப் பேசும்போதே நமது கைகால்கள் அசைகின்றன. அசையாமல் நின்று பேசினால் (முடியாது) அது இயந்திரப் பொம்மை பேசுவது போலல்லவா இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி இருக்கும் போது பேச்சுப் போட்டிக்கு நடிப்பு முக்கியம் என்பதை திருமதி கங்கேஸ்வரி கந்தையா அறியாதது விந்தைதான்.

**உணர்ச்சி**

இரண்டாவது முக்கியத்துவம் பெறுவது உணர்ச்சி " உணர்ச்சி, உள்ளத்துடிப்பு இவற்றை அடிப்படையாகக் கொண்டு எழும் பேச்சு சரசரவென்று ஓடிவரும். கூவிப் பேச வேண்டாம். உணர்ச்சி தான் பேச்சு உணர்ச்சி உள்ள இடத்தில் பேச்சு உண்டு" என்கிறார் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள்.

பேச்சாளருக்கு முக்கியமாக அமைந்திருக்க வேண்டிய பண்பு உணர்ச்சி. உணர்ச்சியில்லாப் பேச்சு வெறும் சாரமற்ற சக்கையாகும். உணர்ச்சியில்லாத பேச்சு எப்படித்தான் சோபிக்க முடியும்? எப்படித் தான் அது பிறர் உள்ளத்தில் பதிய முடியும்? ஒரு பொம்மைப் பேச்சாளன் எப்படித் தனது (உணர்ச்சியற்ற) பேச்சினால் மக்களின் மனதை மாற்றித் தன் கருத்துக்களைப் பதிய வைக்க முடியும்?

**சொன்னயம்**

மூன்றாவது சொல் நயம், நான்காவது அங்க நெளிவுகள், ஐந்தாவது சபை நோக்கு. பேச்சுப் போட்டிகளில் மத்தியஸ்தர்கள் கவனிக்க வேண்டியவை நடிப்பு, உணர்ச்சி, சொல்நயம், அங்க நெளிவுகள், சபை நோக்கு இவை ஐந்துமே. பேச்சாளருக்கு அளிக்கப்படும் புள்ளிகள் இந்த ஐந்து அம்சங்களுக்கும் அளிக்கப் படவேண்டும். மத்தியஸ்தர்கள் சிரித்துக் கதைத்துப் பேசிக் கொண்டிருந்தால் இவற்றைக் கவனிக்க முடியாது. பேச்சுப் போட்டி முடியும் வரை மத்தியஸ்தர்களுக்கிடையே மௌனம் நிலவவேண்டும்.

**இலட்சியம்**

பேச வேண்டும், பேச்சாளனாக வரவேண்டும் என்று ஆசையும் ஊக்கமும் உள்ள மாணவ மணிகளுக்கு ஆக்கம் அளிக்கும் முகமாக பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும். அன்றி பெயருக்காகவும் புகழுக்காகவும் நடத்துதல் விரும்பத் தாகாததாகும் இப்படிப்பட்ட போட்டிகளில் மாணவிகளுக்கு தனிப்பட்ட பரிசு வழங்குதல் விரும்பத் தக்கது. ஆயினும் வேறுபாடு இல்லாதிருத்தல் நல்லதாகும்.

"நடுநிலமை தவறாதிருத்தல் நடுவர்களின் தலைமைக் கடன். ஒவ்வொரு பேச்சாளனின் பேச்சையும் மதிக்கத்தான் அவர்கள் அழைக்கப் படுகிறார்களே தவிர பேச்சாளரை ஜாதி முறைபற்றியோ, ஆண்--பெண் என்று பாகுபடுத்தியோ கல்லூரிக்கு ஒருவர் என்றோ, இனத்தவர் என்றோ, பெரிய இடத்துப் பிள்ளை என்றோ தேர்ந்தெடுத்து சிறப்புப் புள்ளியளித்தல் கூடாது.

**"கலைத் தேர்வு ஒன்றையே கவனித்தல் வேண்டும்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கட்டுரையைத் தொடர்ந்து நான் எழுதத் தொடங்கினேன். எனது எழுத்தாற்றலுக்கு ஈடு கொடுக்க முடியவில்லை.

ஆனால் எனது தூண்டப் பட்ட எழுத்தாற்றல் நிற்கவில்லை. இதனால் **ஆம்பல்** என்னும் கையெழுத்துப் பத்திரிகையை ஆரம்பித்தேன். நானே இதன் ஆசிரியராக இருந்தேன். எனது தமிழாசிரியரை ஆலோசகராகக் கொண்டு இதனை நடத்தினேன். இது கையெழுத்துப் பத்திரிகை என்றாலும் உண்மையில் தட்டச்சு செய்யப் பட்டு இரண்டு பிரதிகள் எடுக்கப் பட்டு ஒன்று எங்களிடையேயும் மற்றது மட்டக்களப்பில் கல்வி பயின்ற எங்கள் பாடசாலை நண்பன் மூலமாக அங்கும் விநியோகிக்கப்பட்டது. சிறுகதைப் போட்டி கூட வைத்துப் பரிசு கொடுத்திருக்கிறேன்.

அதன் பின்னர் குடும்பப் பிரச்சினைகள் வேலை தேடுதல் போன்றவற்றால் எழுத்தைப் பற்றிச் சிலகாலம் சிந்திக்கவே இல்லை. வேலை கிடைத்து பயிற்சி முடித்து வேலைக்காக ஒரு மலைப்பிரதேசத்துக்கு சென்றிருந்தேன் 1965 என்று நினைக்கிறேன் முதலாவது சிறுகதை அந்த சிங்களப் பிரதேசம் தந்தது. நங்கீ என்னும் அக்கதையை ராதா என்னும் சஞ்சிகையயே 1966 ஜனவரியில் வெளியிட்டது.

தொடர்ந்து நான் எழுதிய சிறுகதை, நாவல், சிறுவர் கதைகள், சிறுவருக்கான நாவல், கட்டுரைகள், கவிதைகள் என்று எதை எழுதினாலும் களம் தந்து பிரசுரித்தது ராதா. இது குணசேன சமாசத்தின் வெளியீடாகும். பின்னர் வேறு ஒரு தினசரியை அது பிரசுரித்த போது இவர்களுக்குள் ஏதோ பிரச்சினை வர ராதா நின்று போயிற்று.

அப்போது அதற்கு **அழுத கண்ணீர்** என்னும் நாவல் ஒன்றினை அனுப்பி இருந்தேன். அதைத் தேடி அங்கே போன போது அதனை ராதா ஆசிரியரிடம் தான் கேட்க வேண்டும் என்று முகவரியைத் தந்தார்கள். அவருக்கு எழுத அவர் தான் அங்கிருந்து எதையும் எடுத்து வரவில்லை என்று பதில் வந்தது. ஆக அந் நாவல் தொலைந்தது தொலைந்தது தான்.

இதன் பின்னர் **வீரகேசரி, மித்திரன், தினகரன், தினபதி, சிந்தாமணி** போன்ற பத்திரிகைகள் எனக்கு நல்ல களம் தந்தன. இதில் தினகரனைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். **ராதா** போன்று தினகரனும் நான் என்ன எழுதினாலும் பிரசுரகளம் தந்ததை குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஒரு நாவலை இரண்டு வருடங்கள் வைத்திருந்து பிரசுரித்து இருந்தது.

**வீரகேசரி** ஒரு நாவல், சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், என்பனவற்றை வெளியிட்டு இருக்கின்றது.

அதே மாதிரி **மித்திரன்** குறுநாவல், சிறுகதைகள், கவிதைகள் என்பனவற்றை வெளியிட்டு இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தினகரன்** நாவல், சிறுவர் நாவல், சிறுகதைகள், பலவிதமான கட்டுரைகள், நிறையக் கவிதைகள் என்பன வெளியிட்டு இருக்கின்றது.

**தினபதி** எனது சமயக்கட்டுரைகளை பக்திக் கவிதைகளையும் ஒரு கதையையும் வெளியிட்டு இருக்கிறது. சமயக் கட்டுரைகள் மூலமாக நல்ல பாராட்டுக்கள் கிடைத்து இருக்கின்றன.

**சிந்தாமணி** எனது பயணக் கட்டுரையும், கவிதைகளும் வெளியிட்டு இருக்கின்றது. பயணக் கட்டுரைக்கு நிறையச் சன்மானமும் தந்திருக்கின்றது. இவை முக்கியமான பத்திரிகைகள்.

இவை போக, இன்னும் சில பத்திரிகைகளில். சஞ்சிகைகளிலும் எழுதி இருக்கிறேன். அவையாவன **சுதந்திரன், சுடர், சூடாமணி, தினத்தந்தி, நவமணி, தாய் நாடு, சங்கமம்** போன்றவற்றுக்கும் எழுதி இருக்கிறேன்.

இதிலும் எழுதாத பத்திரிகைகளையும் குறிப்பிட வேண்டும் என்று நினைக்கின்றேன். **தினக்குரல்** அதில் முதலிடத்தை பிடிக்கிறது. இதன் பிரதம ஆசிரியர் **திரு. ஆ. சிவநேசச்செல்வன்** அவர்கள் **வீரகேசரியில்** பிரதம ஆசிரியராக இருந்த போது, ஒரு நாவலை நேரடியாக அவரிடம் கொடுத்திருந்தேன். ''இது ஏற்கனவே **சிந்தாமணிக்குக்** கொடுத்திருந்து பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தது. அவர்கள் நிபந்தனைக்கு ஒத்துப் போக முடியாமல் வாங்கி வந்திருக்கிறேன்'' என்று குறிப்பிட்டே கொடுத்தேன்.

அது ''என் வாழ்வு உன்னோடு தான்'' என்பதாகும். நான் ஒரு முறை படித்துவிட்டு பிரசுரிக்கிறேன் என்றவர், அமெரிக்கா போய் வந்ததன் பின்னர் நாவலைக் காணவில்லை என்றார். அதனால் அவருக்கு எதுவும் எழுதாமல் இருந்தேன். அதனாலே அவர் **தினக்குரல்** ஆரம்பித்த போதும் அதற்கு எழுதவில்லை. அவர் வீரகேசரியில் இருந்து விலகிய பின்னர் **வீரகேசரிக்கு** எழுதினேன். ஒரு எழுத்தாளன் ஒரு நாவலை எழுத எத்தனை சிரமமப் படுவான் என்பதை அறியாத ஆசிரியருக்கு எழுதி என்ன பயன்? என்றுதான் எழுதாமல் விட்டேன்.

**சுடரொளி** பத்திரிகைக்கு இன்னும் எழுதச் சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. இதே மாதிரி **நவமணி**, சிறுகதைகளும் குறுநாவலும் வெளியிட்டிருந்தாலும், அதுவும் ஒரு நாவலைத் தொலைத்து இருக்கிறது. **''என்னருகே நீயிருந்தால்''** என்னும் நாவலைக் கொடுத்திருந்தேன் பிரசுரத்துக்கு ஏற்றிருந்தார்கள்.

ஆனால் பின்னர் கேட்ட போது நாவலைக் காணவில்லை. கதைக்குப் பொறுப்பாக இருந்தவர் விலகி விட்டார் அவரிடம் தான் கேட்க வேண்டும் என்று கூறிவிட்டார்கள். அவரை நான் எங்கு தேடிப்போவேன்? ஆனால் **உன்னருகே நானிருந்தால்.** என்று ஒரு நாவல் வெளிவந்ததாக அறிந்தேன். அது என் நாவலாக இருக்க வேண்டும் என்று சந்தேகம். ஆனால் அதைப் பார்க்கக் கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக மொத்தம் மூன்று நாவல்களைத் தொலைத்த எழுத்தாளன் நானாகத் தான் இருக்க முடியும் என்று நினைக்கிறேன். அதிகம் எழுதுவதால் பிரதிகள் வைக்க முடியாததே இதற்குக் காரணம்.

இன்னுமொரு நாவல் **வீரகேசரி** நாவல் போட்டிக்கு அனுப்பியிருந்தேன். அதன் நிலைமை என்ன வென்பது இன்னும் தெரியவில்லை. இனித்தான் போய்ப் பார்க்க வேண்டும். கடிதம் எழுதிப் பதில் போடும் பழக்கம் இலங்கைப் பத்திரிகைகளுகக்கு இல்லை. **அமரர். திரு எஸ்.டி. சிவநாயகம்** மட்டும் இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்களில் விதி விலக்காக இருந்தார்.

அவருக்கு நான் எனது என்னருகே நீயிருந்தால் என்னும் நாவலை அனுப்பியிருந்தேன் அதனைத் திருப்பி அனுப்பிய போது. நல்ல தமிழில் எழுதிய நெடுங்கதை இது என்றும், தொடர் கதையாகப் பிரசுரிப்பதற்கு வாராவாரம் திருப்பங்கள் உள்ளதாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டு திருப்பி அனுப்பி இருந்தார். அவரது பெருந்தன்மையை இப்போது நான் நினைத்தே ஆக வேண்டும்.

**முகில்வண்ணன்** என்னும் எனது பெயருக்கேற்ப நான் மழைபோல் எழுதிக் குவித்தேன். ஆறு மாதத்துக்கு எழுதுவேன் அதன் பின்னர் ஆறு மாதங்களுக்கு எனது படிப்புக்களைக் கவனிப்பேன். இந்த ஆறு மாதத்தில் எழுதியவை அடுத்து எழுதும் வரை பத்திரிகைகளுக்கு அனுப்புவதற்குப் போதுமானதாக இருக்கும்.

நிறையவே நாவல்கள் எழுதினேன். பிரதிகள் வைக்காததால் தெலைக்கவும் நேரிட்டது. ஒவ்வொரு பத்திரிகைக் காரியாலயத்திலும் இருபதுக்கு மேற்பட்ட விடயங்கள் இருப்பில் இருக்கும்.

இந்த நாட்களில் நான் இரவு பகலாக எழுதிக் கொண்டிருப்பேன். ஆனால் எனது மனைவி நான் என்ன எழுதுகிறேன். என்ன பத்திரிகைகளில் வெளிவருகிறது என்று கவலைப்பட்டதே இல்லை. படித்துப் பார்த்து அபிப்பிராயம் கூறியதே இல்லை.

அதாவது எனது எழுத்துக்கு தடையாக என்றும் இருந்ததே இல்லை. இரவில் நேரஞ்செல்ல எழுதிக் கொண்டிருந்தால் நேரத்துக்குப் படுங்கள் நாளைக்கு வேலைக்குச் செல்ல வேண்டும் என்று ஞாபகப் படுத்துவதுடன் சரி. ஆனால் நான் ஒன்றை எழுதத் தொடங்கினால் அது முடியும் வரை தூங்க மாட்டேன். சிறுகதை என்றால் எழுதி முடித்து கடித உறையில் இட்டு முத்திரை ஒட்டி அடுத்த தபாலிடுவதற்குத் தயாராக வைத்த பின் தான் தூங்கச் செல்வேன்.

வேறு விடயங்களை அரைகுறையில் விட்டு தூங்க வந்தாலும் நித்திரை வாராமல் அந்த விடயத்தைப் பற்றியே விடியும் வரை நினைத்துக் கொண்டிருப்பேன். இப்போதும் இந்த நிலை எனக்கு இருக்கிறது. ஆனால் தியானம் செய்யத் தொடங்கிய பின்னர் இந்த அழுத்தத்தைக் குறைக்கக் கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியச் செய்திகள்

### ராதா

நான் ஆரம்ப காலத்தில் எழுதிய போது எனக்கு களம் அமைத்துத் தந்த **ராதா** என்னும் சஞ்சிகையைக் கூறிப்பிட வேண்டும். ஆரம்பத்தில் நான் எழுதிய எல்லா விடயங்களும் ராதாவில் வெளிவந்த வண்ணம் இருந்தன. அது ஒரு பொற்காலம் என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

ஆனால் இதற்கும் ஒரு சோதனைக் காலம் வந்தது. அப்போது அது நின்று போயிற்று. அவ்வேளையில் அப்பத்திரிகையில் இருந்த **அழுத கண்ணீர்** என்னும் நாவலைப் பெறமுடியாது போயிற்று.

அது அந்தப் பத்திரிகை நின்றதால் நான் விட்ட அழுத கண்ணீரோ?

### சிந்தாமணி தினபதி

**சிந்தாமணி தினபதி** என்னும் பத்திரிகைகளும் எனக்கு நல்ல களம் தந்தன. சிந்தாமணி எனது பயணக் கட்டுரையைத் தொடராக வெளியிட்டது மட்டுமின்றி நல்ல சன்மானத் தொகையையும் வழங்கியது. **தினபதி** வெள்ளி விருந்து என்னும் சமயக் கட்டுரைகளை வெள்ளி தோறும் வெளியிட்டு என்னைக் கௌரவித்தது.

ஆனால் ஒரு தொடர் கதையை வெளியிடுவதற்காக அது வெளிவரும்வரை வேறு பத்திரிகைக்கு எழுதக் கூடாது என்ற நிபந்தனையின் காரணமாக அவர்களிடம் இருந்த அனைத்து விடயங்களையும் திரும்பப் பெற்றுக் கொண்டேன்.

### தினகரன்

அடுத்து **தினகரனை** எடுத்துக் கொண்டால் **அமரர் ஆர். சிவகுருநாதன்** அவர்கள் இருந்த காலம் முழுவதும் நிறைய விடயங்கள் வெளிவந்த வண்ணம் இருந்தன. நாவல், குறுநாவல், சிறுவர் நவீனம், சிறுகதைகள், கவிதைகள், அறிவியல், கல்விக் கட்டுரைகள், சமயக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள் என்று எழுதிய எல்லாம் வெளிவந்த வண்ணம் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரகேசரி

**வீரகேசரி** எனக்கு நல்ல களம் தந்த பத்திரிகைகளில் ஒன்று எனக் கூறலாம். வீரகேசரியில் ஒரு தொடர் நாவலும், சிறுகதைகளும், கவிதைகளும் கட்டுரைகளும் வெளிவந்து இருக்கின்றன.

ஆனால் பிற்காலத்தில் **சூடாமணி** மூடிய பின்னர் அதிலிருந்த ஒருவர் அங்கு வந்து சேர்ந்த பின்னர் எனக்கு எதிராக இயங்கியதாக அறிந்தேன். எனது சிறுகதைகள் போடுவதை அவர் நிறுத்தியதாகவும் அறியக் கிடைத்தது.

இது பற்றி நான் கவலை அடைய வில்லை. ஒரு கதவு மூடினால் இன்னுமொரு கதவு திறக்கும் என்பார்கள் அதன்படி இதன் பின்னரே நூல் போடும் முயற்சியில் இறங்கினேன். ஆக அந்த ஆசிரியருக்கும் நன்றி.

பத்திரிகைகளா இல்லை எழுதுவதற்கு? ஆனால் கவலைப்பட்ட விடயம் பிரதம ஆசிரியர் **திரு. ஆ.சிவநேசச்செல்வன்** அவர்களிடம் **என் வாழ்வு உன்னோடு தான்** நாவலைக் கொடுத்திருந்தேன். அதனை அவர் வெளியிடுவதாக அறிவித்திருந்தார். ஆனால் அவர் அமெரிக்காவுக்கு ஒரு பயணம் சென்று வந்த போது அதைக் காணவில்லை என்று கூறிப்பிட்டார்.

நாவல்களுக்குப் பிரதி வைத்திருப்பதில்லை. அதனால் அந்த இழப்பு எனக்கு ஈடுசெய்ய முடியாததாக இருந்தது.

## மித்திரன்

**மித்திரன்** வீரகேசரி நிறுவனத்தின் ஒரு மாலைத் தினசரியாக அப்போது வந்து கொண்டிருந்தது. ஆரம்ப காலத்தில் இருந்து குறுநாவல் ஒன்றையும் பல சிறு கதைகளையும் பல கவிதைகளையும் வெளியிட்டு இருக்கின்றது.

## தினமுரசு

**தினமுரசு** ஞாயிறு வெளியீடாக வெளிவந்தது. எனது சிறுகதைகளை நிறையவே வெளியிட்டு இருக்கிறது. ஒரு மாதம் மூன்று சிறுகதைகளை வெளியிட்டு வாசகர்களின் வயிற்றெரிச்சலையும் கொட்டிக் கொண்டது எனலாம் அத்துடன் நிறையவே கவிதைகளையும் வெளியிட்டு இருக்கின்றது. இதில் வெளிவந்த கதைகள் அனைத்தும் **அவள் ஒரு தமிழ்ப் பெண்** என்னும் தொகுதியாக வெளிவந்து இருக்கிறது.

## நவமணி

பின்னர் வெளிவந்த பத்திரிகைகளில் **நவமணி**யும் ஒன்று. இதில் ஒரு குறுநாவலும் சிறுகதைகளும் கவிதைகளும் வெளிவந்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமணியில் ஒப்படைக்கப்பட்ட **என்னருகே நீயிருந்தால்** என்னும் நாவல் கதைக்குப் பொறுப்பாக இருந்தவர் மாறிச் சென்றதுடன் தொலைந்து விட்டதாகக் கூறினார்கள்.

**தினத்தந்தி**

இதே போன்று பிற்காலத்தில் வெளிவந்த பத்திரிகைகளில் ஒன்றுதான் **தினத்தந்தி**. இதிலும் பல சிறு கதைகளும் பல கவிதைகளும் வெளி வந்திருக்கின்றன.

**சுதந்திரன்**

இதில் ஒரே ஒரு சிறுகதையும் கவிதை கட்டுரைகளும் வெளி வந்திருக்கின்றன.

**சுடர்**

இது சுதந்திரன் பத்திரிகை நிறுவனத்தின் வெளியீடாகும். இதில் ஒரே ஒரு கதையும் கட்டுரைகளும் வெளிவந்திருக்கின்றது.

**சூடாமணி**

இதில் ஒரு சிறுகதை வெளிவந்திருக்கிறது. ஒரு தொடர்கதை அனுப்பியிருந்தேன். அதனால் வேறு சிறு கதைகள் அனுப்பவில்லை. ஆனால் இத்தொடர்கதை **எஸ்.டி. சிவநாயகம்** அவர்களின் குறிப்புடன் திருப்பியனுப்பப்பட்டிருந்தது.

அது **"இது நல்ல தமிழில் எழுதிய நெடுங்கதை. வாரா வாரம் எதிர்பார்க்கக் கூடிய திருப்பங்கள் இல்லாததால் தொடராக வெளியிட முடியவில்லை"** என்ற குறிப்பிட்டுத் திருப்பி அனுப்பி இருந்தார்.

பின்னர் வெளிவந்த சில வெளியீடுகள், வெளிவந்து நின்று போன பல பத்திரிகைகளிலும் ஒவ்வொரு கதையாவது வெளி வந்திருக்கும்.

**தினக்குரல்**

இதில் மட்டும் தான் நான் எதுவும் எழுதவில்லை. காரணம் எனது தொடர் கதையைத் தொலைத்த ஆசிரியர் அதில் கடமை புரிந்ததாலாகும். மற்றும் படி பத்திரிகைக்கும் எனக்கும் எதுவும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியப் பிரச்சினைகள்

இலக்கியச் செய்திகளைக் கூறிய நான் இலக்கியப் பிரச்சினைகள் சிலவற்றையும் இங்கு குறிப்பிடுதல் நல்லது என்று நினைக்கின்றேன். 1975 ஆம் ஆண்டு தேசிய சாகித்திய விழா கல்முனையில் நடைபெற்றது. இதற்கென ஒரு குழு அமைக்கப் பட்டிருந்தது. அதற்குரியவர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டார்கள் என்று தெரியவில்லை.

ஒரு சில குறிப்பட்டவர்கள் மட்டுமே கல்முனையில் இலக்கியவாதிகள் என்பது போல் அது இருந்தது. எங்களுக்கு எந்த அழைப்பும் இல்லை. பரவாயில்லை அவர்கள் என்னவென்றாலும் செய்து விட்டுப் போகட்டும்.

ஆனால் சாகித்ய விழா மலர் ஒன்று வெளியிடப்பட்டது. அதில் கல்முனைப் பிரதேச இலக்கியவாதிகள் பற்றிய ஒரு கணிப்பீட்டை **ஜனாப் வி.எம். இஸ்மாயில்**( அதிபர் ) எனப்படும் **'மருதூர்கொத்தன்'** அவர்கள் அந்தக் கட்டுரையை எழுதி இருந்தார்கள். மூத்த எழுத்தாளர்களான **திரு. சண்முகம் சிவலிங்கம், எம்.ஏ. நுஃமான் எம்.ஏ** போன்றோரும் அக்குழுவில் இருந்ததாக அறிந்தோம்.

இவர்கள் இருந்தும் இவ்வாறான ஒரு பெருந் தவறு எவ்வாறு இடம் பெற்றது என்பதே எமது கேள்வியாகும். அவர்களுக்காக நடத்தப்பட்டது எனில் பரவாயில்லை. ஆனால் இது கல்முனைப் பிரதேசத்துக்கு என்று நடத்தப்பட்டது. கல்முனைப் பிரதேச எழுத்தாளர்களை இலக்கியவாதிகளை அது எடை போட்டிருந்தது.

அதில் எங்களைப் போன்ற பலர் வேண்டுமென்றே விடுபட்டதாக நாங்கள் கருதினோம். இதனால் இந்தப் பிரச்சினையை அப்போது வெளிவந்த **சுடர்** சஞ்சிகையில் (அதில் இலக்கியப் பிரச்சினைகள் அலசி ஆராயப்படுவது வழக்கம்) இலக்கியப் பிரச்சினைக்கு எழுதினோம்.

முதலில் **கவிஞர் நோ. மணிவாசகன்** எழுதி சுடரில் வெளிவந்த கட்டுரையை இங்கு தருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியப் பிரச்சினைகள்

## தமிழ் சாகித்திய விழா மலர்

### இஸ்மாயிலின் 'மதிப்பீடும்' மணிவாசகனின் குறைபாடும்

15.11.75ல் கல்முனையில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ் சாகித்திய விழாவையொட்டி வெளிவந்த மலரில் ஜனாப் இஸ்மாயில் (மருதூர்க்கொத்தன்) என்பவர் கல்முனைப் பிராந்திய எழுத்தாளர்கள் பற்றிய – அவர்களது சிருஷ்டிகள் பற்றிய ஒரு மதிப்பீட்டுக் கட்டுரையை எழுதியிருந்ததைக் கண்டு, என் மனம் வெகுவாகக் கவலைப்படுகின்றது.

காரணம் – அவரும் 'மதிப்பீடு' செய்ய முன்வந்து விட்டார் என்பதற்காக அல்ல: **'எல்லாம் தெரிந்தவாறு'** கல்முனைப் பிராந்திய கவிதா உலகின் தோற்றம் – வளர்ச்சி பற்றி எழுத முற்பட்டு தனது ''ஞானசூன்ய'' மதிப்பீட்டின் இலட்சணத்தைப் பகிரங்கப் படுத்திக்காட்டி, கணிசமான அளவு பெயர் பெற்ற சிறுகதை எழுத்தாளரான ஜனாப் இஸ்மாயில் அவர்கள், தமக்கே எம்மால் ஒரு 'மதிப்பீடு' செய்யும் நிலையை உண்டுபண்ணி விட்டாரே என்பது தான் – அந்தக் கவலை.

**'செய்வன திருந்தச்செய்'** என்று மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் இவர் எந்த விடயத்திலும் (துறையிலும்) முன்மாதிரியாக விளங்கிடத் தனது ஆற்றலைப் பயன்படுத்தியிருக்கலாம்.

1963ம் ஆண்டிலிருந்து கவிதைகள் எழுதி வரும் என்னை – எனது பெயரை இவரது மதிப்பீடு, எந்தத் தரப்பிலும் தன்னகத்தே கொண்டிருக்கவில்லை. இது ஏன் என்றே புரியவில்லை. தற்செயலாக மறந்து விட்டிருக்கலாம் என்றும் ஒப்பக்கொள்வதற்கில்லை. காரணம் **முகில்வண்ணனின்** பெயரும் விடுபட்டிருக்கின்றன. இதற்கு மறதி என்றோ சமாதானம் சொல்லித் தப்பிவிட இயலாது, தீர்க்கமான ஒரு ஆராய்வு நிகழ்த்தி ஒரு தரமான **'மதிப்பீடு'** செய்யும் திறன் இந்த மதிப்பீட்டாளரிடம் இருக்கவில்லை என்பதைத் தவிர, வேறு என்னால் எதுவும் சொல்ல முடியவில்லை.

இவரது கட்டுரையில் எனது பெயரும் இடம் பெற்றிருந்தால், அது எனக்குக் **'கௌரவம்'** என்று நினைத்து நான் இவ்விதம் எழுதிட வரவில்லை. இதை நான் ஒரு கௌரவப்பட்டியல் என்று கருதவும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த **'மதிப்பீடு'** முழுக்க முழுக்க சரியானதா என்பதைச் சற்று நிதானித்து, இப்போதாவது ஆராய்வு நடத்தி, மறுபரிசீலனை செய்து பார்க்க தூண்டுவதற்காகவே இதனை எழுதிட முற்பட்டேன்.

**திரு. சண்முகம் சிவலிங்கம், ஜனாப் எம்.ஏ. நுஃமான், ஜனாப் அன்புமுகைதீன்** போன்றவர்களையும் உள்ளடக்கிய கல்முனை சாகித்திய விழாக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று இந்த மதிப்பீட்டுக் கட்டுரை வெளிவந்ததும் பிறிதோர் கவலையை உண்டு பண்ணாமலில்லை.

ஓய்ந்து விட்ட பேனாக்களை நினைவு கூர்ந்து எழுத வந்த இவர், ஓயாமல் எழுதி வருகின்ற பேனாக்களை மறந்து, இந்த மதிப்பீடு செய்திட முனைந்தமை, கவிதா உலகுக்கே இழைக்கும் பெரும் துரோகம் என்றுதான் கருதவேண்டி இருக்கின்றது.

நானறிய 1974 – 1975ல் பேனாதுக்கி வசன கவிதை (புதுக்கவிதைகள்) எழுத முற்படும் **'களான்குஞ்சு'** களைத் தூக்கிப் பிடிக்கும் இவரது பேனா 1963ல் இருந்து எழுதிவரும் எனது பேனாவுக்கு **'கல்தா'** கொடுத்தது ஏன்? அதற்கு அவர் விளக்கம் கூறியே ஆக வேண்டும்.

இப்படியான தவறுகள் மலிந்த மதிப்பீடுகளை, வழக்காக்கி, அதை நீதிமன்றங்களில் தாக்கல் செய்வதற்குச் சட்டம் வகுக்கப்படுமாயின், என் பெயரை – எனது சமகால இலக்கிய கர்த்தாவான **'முகில்வண்ண'**னது பெயரை இருட்டடிப்புச் செய்த இந்தப் **'படுகொலைச்'** சம்பவத்தை விசாரணைக்குள்ளாக்கி, வெட்டவெளிச்சமாக்கித் தண்டனை பெற்றுக் கொடுக்கக் கூடிய போதுமான **''தஸ்தாவேஜுக்கள்''** (பிரசுரமான கவிதைகள்) என்னிடமும் முகில்வண்ணனிடமும் தயாராக இருக்கின்றன என்பதைக் கூறிவைக்க ஆசைப்படுகின்றேன்.

ஜனாப் இஸ்மாயில் (மருதூர்க்கொத்தன்) அவர்கள் இதற்குப் பகிரங்கமாகப் பதில் சொல்ல வேண்டும். சொல்வாரா?

நோ. மணிவாசகன்

இது வெளிவந்து அடுத்த மாதம் என்னுடைய கட்டுரை வெளிவந்திருந்தது. அது பின்வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியப் பிரச்சினைகள்

**மருதூர்க்கொத்தனார் மறுப்பாரா?**

சென்ற இதழ் சுடரில் இப் பகுதியில் வெளியான **திரு. நோ. மணிவாசகனின்** கடிதத்தைக் கண்ணுற்றேன். கன கச்சிதமாக மணிவாசகன் எழுதியுள்ள பிரச்சினைக்கு மருதூர்க்கொத்தன் அவர்கள் பதில் சொல்லத் தயாரா? – சொல்வாரா? ——— சொல்ல முடியுமா அவரால்?

கல்முனைப் பிரதேசத்தையே பிறப்பிடமாகவும்——— வளர்ப்பிடமாகவும் (பல வருடங்களாக) தொழில் இடமாகவும் கொண்ட நான் கல்முனை கலை இலக்கிய வெளிப்பாடுகள் பற்றி மதிப்பிட்ட வி.எம் இஸ்மாயிலின் **''கலைக் கண்களுக்கு''** த் தெரியாமல் போனது வியப்புக்கு மட்டுமே உரியது. இது பற்றிப் பலர் என்னிடம் வினவினர். அதில் குறிப்பாக எனது பெயர் விடுபட்டதில் முதலில் நான் அதிர்ச்சி அடைந்தாலும், பின்னர் கட்டுரையை ஊன்றிப் படித்ததும், இஸ்மாயிலைப் பொறுத்தளவில் அவர் அப்படிச் செய்ததின் காரணம் எனக்கு விளங்கியது.

காரணம் வி.எம். இஸ்மாயில் என்னும் **மருதூர்க்கொத்தன்** என்னை மதிப்பிடக் கூடியளவுக்கு இலக்கிய சேவை – என்னைப் போல் ஆற்றியவரல்ல. என்பது ஒன்று. மற்றது, அவர் அக்கட்டுரையில் **'மதிப்பட்டவர்கள்'** எல்லாம் ஒருவகையில் அவருடன் ஒப்பிட்டு நோக்கப்பட்டிருத்தலைக் காணலாம். ஆனால் என்னை அவருடன் ஒப்பிட முடியாது, என்பது அவருக்குத் தெரியும். எனது சாதனைப் பட்டியலை இத்துடன் இணைத்திருக்கிறேன் அவரிடம் இருந்து அவரது சாதனைப் பட்டியலை பெற்று நான் கூறும் இக்கூற்று சரியா பிழையா எனக் கூறட்டும் சுடர்.

**ஒப்பிட்டு நோக்குகையில்,**

(1) **நீலாவணனின்** இலக்கியப் பண்ணையில் பூத்த மலர்களில் நானும் ஒருவன் என்றும்

(2) கவிதைத் துறை பற்றிக் கூறுகையில் அறுபதுக்குப் பிறகு எழுதத் தொடங்கியவர்கள் என்ற வரிசையில் நானும் இந்தக் காலப் பகுதியில் கவிதைகள் எழுதி இருக்கிறேன் என்பதை வரலாற்றுக்காக இங்கு சொல்லி வைக்க வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தக் காலப் பகுதியில் எழுதிய **கா.வே. சண்முகநாதன்** என்னும் **முகில்வண்ணன்,** உள்ளத்து உணர்ச்சிகளை கொட்டி எழுதும் **கவிஞர் காசி ஆனந்தனுக்குப்** பிறகு தமிழ் உணர்ச்சியை அழகு தமிழ் கவிதையில் வடிப்பதையே தாகமாகக் கொண்ட **நோ. மணிவாசகன்** என்னும் மணிக்கவிராயர் போன்றோர் இவர் கருத்தில் படாததேனோ? தம்மையே மிஞ்சி விட்டார்கள் என்றா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) புனைகதைத் துறை பற்றிக் குறிப்பிடுகையில், ''கல்முனைப் பிரதேசத்து எழுத்தாளர்கள் கவிதைத் துறையில் காட்டுகின்ற ஆர்வத்தை நாவல், சிறுகதை, உருவகக் கதைத் துறையில் காட்டுவதாகத் தெரியவில்லை.'' என்று குறிப்பிடுகின்றார். – 'தெரியாதவர்' ஏன் அதனை எழுதத் துணிந்தார்? – இதிலும் தன்னைப் பற்றி ''நானும் சிறுகதைத் துறைக்கு இயன்றதைச் செய்திருக்கிறேன்'' என்று குறிப்பிட்டிருத்ததைக் காணலாம்.

'பாவம் மருதூர்க்கொத்தனார்' – சிறுகதை மாத்திரமல்ல – நாவல், கட்டுரைகள் எழுதவல்ல சிறந்த இலக்கிய கர்த்தாக்கள் கல்முனையில் ஏன்? – தனக்குப் பக்கத்தில் இருப்பதைக் கூட அறியவில்லைப் போலும். இல்லை – அறிந்தும் வெளிக்காட்ட விரும்பவில்லையா?

(4) கட்டுரைத் துறையில் தன்னை விட்டு விட்டார் – எதுவும் எழுதவில்லைப் போலும். – பரவாயில்லை. எழுதிய எங்களை தவறவிடலாமா? – இது எந்த வகையில் தர்மமாகும்?– இதுவே எனது கேள்வி?

(5) அடுத்து நாடகத் துறையில்...'' நானும் எழுதிய நாடகங்கள்... வசன நாடகத் துறையில் நானும் கனியும் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளோம்'' என்று இப்படி ஒவ்வொரு துறையிலும் தன்னை மேம்படாதவர்களோடு தன்னை ஒப்பிட்டு நோக்கும் இவர் மனப் பாங்கினை நாம் தெளிவாகக் காணக் கூடியதாக இருக்கின்றது.

தான் ஈடுபாடு கொண்ட துறைகளில் தன்னோடொத்த அல்லது தனக்கு கீழ்ப்பட்டவர்களையே வெளிச்சம் போட்டுக் காட்ட விரும்பினார் என்பது வெள்ளிடைமலை. அவர் தனியே குறிப்பிட விரும்பாத துறைகளான நாவல் துறையில் கல்முனைப் பிரதேசத்தில் **''மருதூர்வாணன்'' ''முகில்வண்ணன்''** என்னும் இருவரையும் மட்டுமே குறிப்பிட முடியும். அதில் நானும்... என்று எதுவும் கூறிவிட முடியாது.

ராதாவில் நான் எழுதிய **'மணற்கோலம்'** என்னும் தொடர் கதையும் **'சிங்கராஜா'** என்ற சிறுவர் நவீனமும் மித்திரனில் வெளியான **'ஆனந்தக் கண்ணீர்'** என்னும் குறுநாவலையும் படியாத – அறியாத அவர் எப்படி கல்முனைப் பிரதேசத்தைப் பற்றிக் குறிப்பிட முடியும்? – என்ன தகுதியுடன் எழுதினார்? – எப்படி எழுதினார்?

அடுத்து பாடல் துறையை எடுத்துக் கொண்டால் கல்முனைப் பிரதேசத்தில் இருந்து ஈழத்துப் பாடல்களும் மெல்லிசைப் பாடல்களும் எழுதும் – ஒலிபரப்பாகும் ஒரே பாடலாசிரியர் **'முகில்வண்ணன்'** என்றே கூறமுடியும். இதிலும் நானும்.... என்று கூறுவதற்கு ஏதுவும் இல்லை.

ஆக, முகில்வண்ணன் மணிக்கவிராயர் போன்றோரைத் தொடாமல் விடுவதே சமயோசிதம் என்று கருதினார் போலும். இல்லையெனில் தன்னைவிடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்துறைகளிலும் சிறந்த இலக்கிய கர்த்தாக்களை வெளிக் கொணர்ந்து தான் தலைகுனிய வேண்டிவரும் என்று எண்ணியவர் இன்று... அவருடைய இலக்கிய வியாபார – விளம்பரத் தன்மையை நாம் வெளிக் காட்டச் சந்தர்ப்பம் தந்துவிட்டார்.

அவருடைய மதிப்பீடு ஒரு கல்வெட்டு – வரலாற்று நிகழ்ச்சியென்ற பெரும் நினைப்போடு எழுதப் பட்டிருத்தலைக் காணலாம். இதில் பலரை இருட்டடிப்புச் செய்து விட்டால் வரலாற்றில் இருந்து இவர்கள் அழிக்கப் பட்டு விடுவார்கள் என்று அவர் எண்ணினார் போலும்.

அதனால் தான் நற்பிட்டிமுனையைச் சேர்ந்த **திரு எஸ். குணரெத்தினம் (அதிபர்)** பாண்டிருப்பைச் சேர்ந்த **திரு. வி. இரத்தினசிங்கம் (அதிபர்)** நீலாவணை **தேவராஜ்** பாண்டியூர் **பரமேஷ்** கல்முனையைச் சேர்ந்த **கலைக்கொழுந்தன், செல்வி பிரோஸா ஹூஸைன்** போன்ற இன்னும் பலர் விடுபட்டுப் போயினர்.

என்னை இவர் மதிப்பிட வேண்டிய அவசியம் எனக்கில்லை. நான் எழுதியவற்றை தொகுத்து நூலாக வெளியிடும் போது காலமே பதில் சொல்லும். ஆனால் எனது பெயர் விடப்பட்டதைப் பற்றிப் பெரும் கவலைப்பட்ட திரு. பாண்டியூரன், திரு சண்முகம் சிவலிங்கம் போன்றோருக்கு அவர் கூறிய சமாதானம் என்னைச் சமாதானப்படுத்துவதாக இல்லை. – சமாதானப் படுத்தவும் முடியாது.

காரணம் 1961ம் ஆண்டு பாடசாலையில் ஜி. சி. ஈ படித்துக் கொண்டிருக்கும் போதே பண்டிதை திருமதி கங்கேஸ்வரி கந்தையா அவர்களின் கட்டுரை ஒன்றை எதிர்த்து எழுதி **'முகில்வண்ணன்'** என்ற பெயரில் தினகரன் மூலம் அறிமுகமானவன் – அதற்கு முதல் 1959ம் ஆண்டிலிருந்து பாடசாலைப் பத்திரிகையில் பல கதைகள் எழுதியிருக்கிறேன்.

சமாதானம் அடைய முடியாத காரணம் இன்னுமொன்று, 'மருதூர்வாணனின்' முதலிரவு சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் 22.09.70ல் ஒரே மேடையில் முகில்வண்ணனுடன் ஆய்வுரை நிகழ்த்தியவர் மருதூர்க்கொத்தன். அப்போது மணற்கோலம் நாவல் வெளிவந்து முடிந்திருந்தது. – மருதமுனையில் பலரும் அறிந்த நிலையில் இருந்தேன். அப்போதாவது முகில்வண்ணன் என்றால் யாரென்று அறிந்திருப்பாரே? அதுதான் போகட்டும் 1975ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கல்முனை முத்தமிழ் கழகம் ஆரம்பிக்கப் பட்டபின் முகில்வண்ணன் யாரென்பது மருதூர்க்கொத்தனாருக்கு நிச்சயமாகத் தெரிந்த தொன்றே!

இதிலிருந்து தெளிவாவது என்னவெனில் மணிவாசகன் கூறியது போல் இது வேண்டுமென்றே செய்யப்பட்ட "படுகொலை" என்பதாகும் மணிவாசகன் கூறிய எனது தஸ்தாவேஜூகளின் பட்டியலை இத்துடன் இணைத்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவையும் – இதில் சிலவற்றையேனும் படியாத ஒருவன் எப்படி மதிப்பீடு செய்ய – தன்னால் முடியாத செயலென்றில் இறங்க முடியும்? அதற்கும் சில தகுதிகள் வேண்டும்.

தகுதியும் தரமும் மிக்க திரு. சண்முகம் சிவலிங்கம், ஜனாப் எம்.ஏ. நுஃமான் போன்றவர்கள் – அதே வட்டத்தைச் சேர்ந்தாலும் நடுநிலையில் நின்று செய்ய வேண்டிய செயலொன்றை – ஒன்றுமே அறியாத வி.எம். இஸ்மாயில் செய்ய வந்ததால் ஏற்பட்ட குறைப்பிரவசமே சாகித்தியா விழா மலரில் வெளிவந்த கட்டுரை.

இது மருதூர்க்கொத்தனின் தவறு மட்டுமல்ல – எதனை எவன் செய்வான் என்பதை ஆய்ந்து அறிந்து அதனை அவன் கையில் ஒப்படைக்காத சாகித்திய மண்டலத்தின் விழாக்குழுவின் பிழையே என்பேன்! இதற்கு அவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

வரலாற்றை எழுதப் போகும் ஒருவன் தன் மனம் போனபடி எழுதமுடியாது. சரியான உண்மைகளைத் தேடி அறிந்து அறிந்ததற்கு ஆதாரம் வைத்து எழுதவேண்டும். ஆனால் மருதூர்க்கொத்தன் தம் வட்டத்தில் சேர்ந்தவர்கள் எல்லாம் கவிஞர்கள் என்றும் – தன்னுடன் கூடப் பழகுபவர்கள் – தான் அறிந்தவர்கள் மட்டுமே கல்முனைப் பிரதேச இலக்கியகாரர்கள் என்றும் எண்ணி விட்டார் போலும்!

உண்மையான ஒரு இலக்கியப் படைப்பாளி எப்போதும் தன்னைப் பற்றி பிறருக்கு தம்பட்டம் அடிப்பவனல்ல. அவனை அறிந்து – தரம் அறிந்து நாடிச் செல்ல வேண்டியது வரலாற்று – விமர்சன ஆசிரியர்களின் கடமையாகும்.

நான் கூறியது போல், இன்றைய இளைஞர்கள் – படைப்பாளிகள் பலர் அறியாத இருவரைப் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஒருவர் நற்பிட்டிமுனையில் இருக்கும் எஸ்.குணம்.

இவர் தன்னடக்கத்தோடு தன்னால் முடிந்தவரை இலக்கியத்திற்கு பல சேவை செய்திருத்தலைக் காணலாம். அவர் தான் **"எஸ்.குணம்"** என்னும் **எஸ். குணரெத்தினம்** தலைமை ஆசிரியர். இவர் 1952ம் ஆண்டு முதல் வீரகேசரி, தினகரனில் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளும் சுதந்திரனில் சிறுகதைகளும் எழுதி வந்திருக்கின்றார்.

கவியரங்குகளில் பங்கு பற்றியிருக்கும் இவர் பல பத்திரிகைகளில் கவிதைகளும் எழுதி இருக்கின்றார். பாடசாலைகளில் நாடகங்கள் எழுதி நடித்தும் இருக்கும் இவரின் மாணவர்களே **திரு. ஜீவா ஜீவரெத்தினம், திரு பாண்டியூரன், ஜனாப் எம். ஏ. நுஃமான், ஜனாப் மருதூர்க்கனி, திரு. கல்முனைப் பூபால் முதலானோர்.** அவரது சேவையில் குறிப்பிடத் தக்கதாக இருப்பது ஐங்குறுநூறு என்னும் தமிழ்க் காப்பியத்துக்கு உரைநடையாக்கம் செய்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர் பாண்டிருப்பைச் சேர்ந்த திரு வி. இரத்தினசிங்கம் ஆசிரியர் அவர்கள். இவர் இதுவரை கிழக்கிலங்கையிலுள்ள ஆலயங்களின் வரலாறுகளை ஆராய்ந்து எழுதியுள்ளார். இது மட்டுமின்றி நான்கு இலவச வெளியீடுகள் வெளியிட்டும் உள்ளார். இதில் குறிப்பிடத் தக்கது இதுவரை ஏட்டுப் பிரதியாக இருந்த **''பாரத முடிசூட்டுச் சருக்கம்''** என்னும் பகுதியினை அச்சிட்டு புத்தக ரூபமாக —— அதுவும் இலவச வெளியீடாக வெளியிட்டிருப்பதாகும்.

இவற்றை உற்று நோக்கும் இடத்து மருதூர்க்கொத்தன் எழுதிய மதிப்பீடு தன்னைச் சார்ந்தவர்களையும் தன்னுடன் பழகியவர்களையும் மட்டுமே அன்றி கல்முனைப் பிரதேசத்தின் ஒரு பகுதியைக் கூட அல்ல என்பதை ஆணித்தரமாகக் கூறிவைக்க ஆசைப்படுகின்றேன்.

**திரு மணிவாசகன்** நானுட்பட நான் மேலே தொட்டுக் காட்டியவர்கள் மட்டுமின்றி இன்னும் எத்தனையோ இலக்கிய கர்த்தாக்கள் நிறைந்திருக்கும் கல்முனைப் பிரதேசத்தைக் காட்டச் சில **''காளான் குஞ்சு''**களைக் காட்டி விட்டால் போதும் என்று எண்ணினார் போலும் மருதூர்க்கொத்தன்?

மேலே குறிப்பிட்ட இவர்கள் எல்லாம் இலக்கியகாரர்கள் இல்லையா? — இவர்களைக் குறிப்பிட ஏன் மனம் வரவில்லை மருதூர்க்கொத்தனாருக்கு? என்ன பதில் சொல் முடியும் அவரால்?

**'முகில்வண்ணன்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய சேவைக்குக் கிடைத்த பாராட்டு

நான் என்னை விளம்பரப் படுத்திக் கொண்டு எந்த சேவையையும் செய்ய வில்லை. நான் முகில்வண்ணன் என்ற பெயரில் இருபதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை வெளியூரில் இருந்தே எழுதினேன். அதனால் யார் இந்த **முகில்வண்ணன்** என்று பல எழுத்தாளர்களுக்குத் தெரியவில்லை.

முதன் முதலில் என்னை அறிந்து, வீட்டுக்கு வந்து எனது கதைகளை வாங்கிச் சென்று படித்து, பாராட்டி விட்டு, இவற்றை நூலாக்கம் செய்யும் படி கூறியவர் திரு. சண்முகம் சிவலிங்கம் அவர்கள் தான்.

இரண்டாவதாக அமரர் கவிஞர் பாண்டியூரன் அவர்களிடம் எனது கவிதைகளைக் கொண்டு காட்டினேன். அவரும் என்னை உற்சாகப் படுத்தி பாராட்டியதோடு எவ்வாறு சில திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்ற ஆலோசனைகளையும் கூறினார்.

மூன்றாவதாக அமரர் மகாகவி **நீலாவணனைக்** குறிப்பிட்டே ஆக வேண்டும். அப்போது நான் தினபதியில் வெள்ளி விருந்துக் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருந்தேன். திடீரென ஒரு நாள் நான் எதிர்பார்க்காத வேளையில் வீட்டுக்கு வந்தவர் ''தம்பி'' என்று அழைத்தார்.

அப்போது நான் வேலைக்குச் செல்வதற்கு புறப்பட்டுக் கொண்டிருந்தேன். **''வாருங்கள் இருங்கள்''** என்றேன். **''இல்லை நான் பாடசாலைக்குச் சென்று கொண்டிருக்கிறேன். உங்கள் சமயக் கட்டுரைகளை படித்து வருகின்றேன். மிக அற்புதமாகக் கையாளுகிறீகள். எவரும் கைவைக்கத் தயங்கும் துறை இது. இது ஒரு கத்தியைக் கையாள்வது போன்றது. அதைப் பாராட்ட வேண்டும் என்று எண்ணிப் பல நாட்களாகி விட்டது. அது தான் அவசரமாக வந்தேன். தொடர்ந்து எழுதுங்கள் நல்ல வரவேற்புக் கிடைக்கும்''** என்றார். நான் முன்னர் ஒரு போதும் அவருடன் கதைத்ததே இல்லை. திடீரென வந்தார். அவசரமாகக் கதைத்தார். அதே வேகத்துடன் வெளியேறி விட்டார். நான் திகைத்துப் போய் நின்றேன்.

இதே போன்று நான் திருகோணமலையில் வேலை செய்த போது எனது வெள்ளி விருந்துக் கட்டுரைகள் வெளி வந்து கொண்டிருந்தன. அங்கு நான் ஒரு விடுதியில் தங்கியிருந்தேன். அங்கு ஞானமார்க்கத்தில் ஈடுபட்ட ஒருவர் இருந்தார்( அவர் பெயரை மறந்து விட்டேன் ) அவர் அப்பேதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்துக்கு வரமாட்டார். ஆனால் வெள்ளி தோறும் அவர் கரத்தில் தினபதி பத்திரிகை இருக்கும். நான் வேலை முடிந்து வர ஆறு மணிக்கு மேலாகிவிடும். நான் வந்ததும் தினபதியைத் தந்து இதில் இருக்கும் வெள்ளி விருந்து கட்டுரையைப் படித்துப் பாரும். என்று அதைப் பற்றி என்னிடமே புகழ்ந்து தள்ளுவார். அவருக்குத் தெரியாது அதை நான் தான் எழுதுவது என்றும் அதனை நான் ஏற்கனவே படித்து விட்டுத்தான் வந்திருக்கிறேன் என்றும். இப்படி ஆள் யாரென்று அறியாமல் கூறுவது உண்மையான விமர்சனமாக இருக்கும். எனது வேலை முடிந்து நான் மூன்று மாதத்தில் திரும்பி வந்து விட்டேன். வரும்போதும் அவரிடம் நான் உண்மையைச் சொல்லவில்லை. அது அவரை ஏமாற்றியதாகப் போய்விடும் என்பதால்.

அடுத்தது **திரு. எஸ்.பொ.** அவர்கள் என் **அவள் ஒரு தமிழ்ப் பெண்** என்னும் சிறுகதைத் தொகுதிக்கு வழங்கிய ஆசியுரையில் ஒரு பகுதியை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இத்தகைய மண்ணின் படைப்பிலக்கிய முனைப்புகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் தராளராகவும் **''முகில்வண்ணன்''** வாழ்கின்றார் என்கிற சிறப்பினைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

அவள் ஒரு தமிழ்ப பெண் என்கிற பெயர்கூட பாண்டிருப்பு மண்ணின் தமிழ் நேசிப்பின் பிரிக்க முடியாத கூறாகவே எனக்குப் படுகிறது. இங்கு தொகுக்கப்பட்டுள்ள கதைகள் சிலவேனும் உண்மை நிகழ்வுகளை ஆதாரமாகக் கொண்டவை என முகில்வண்ணன் உரிமை பாராட்டுகின்றார்....

முகில்வண்ணனின் இலக்கியப்பணி வாழவும் தொடரவும் வாழ்த்தவும் உரிமையை நான் எடுத்துக் கொள்ளுதல் பொருந்தும் என் பிள்ளைகள் மட்டக்களப்பு மைந்தர்கள் எனத் தம்மை அடையாளப் படுத்துவதிலேயே பெருமைப்படுகிறார்கள். அந்தப் பிள்ளைகளின்(என் பிள்ளைகள்) என்கிற பெருமிதத்துடனும் முகில்வண்ணனின் தமிழ் ஊழியத்தை மனசாரப் பாராட்டுகிறேன்.

இவ்வாறு இலக்கிய **சித்தர் எஸ்.** பொ அவர்கள் அவுஸ்திரேலியாவிலிருந்து எனது நூலுக்கு ஆசியுரை வழங்கியிருப்பது எனக்கு பெருமையளிப்பதாகும். அடுத்தது **மறவன்புலவு க. சச்சிதானந்தன்** ஐயா அவர்கள் எனது இனியும் நான் இராமன் தான் நூலில் கூறியிருப்பதில் சில பகுதிகளைத் தருகின்றேன். ஈழத்தின் மிகச் சிறந்த படைப்பாளிகளுள் ஒருவரான முகில்வண்ணனின் சிறுகதைத் தொகுப்பை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

**காலத்தின் நிலைக்கண்ணாடியாய், சமூக நிலையின் மறுபதிப்பாய், பேச்சு மொழியின் வட்டார, கால வெளிப்பாடாய், வாழ்வியலின் ஊடகமாய், மனித உணர்வுகளின் பெட்டகமாய், அவரது ஒவ்வொரு கதையும் வாசிப்பவரை மெய்மறக்கச் செய்வன...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவர் படைப்பில், கண்ணகி குமுறுவாள், இராமன் வருவார், கைகேயி காட்டாவாள், பாரதக் கதை குறிப்பாகும், திருவள்ளுவர் கூறுவன வலம் வரும், பழமொழிகள் உலாவும், திரைப்படப் பாடல் வரிகள் அலைபாயும், நாட்டார் பாடல் தெம்மாங்கு பாடும்...''**

இவ்வாறு என்னை வரிக்கு வரி புகழும் ஐயா என்னை முன்பின் தெரியாதவர். எனது எழுத்துக்களிலே அவர் என்னைத் தரிசித்திருக்கிறார். அத்தனைக்கு அவை அவரை ஈர்த்து இருக்கின்றன என்பதே என் அபிப்பராயம்.

என்னை அறியாமல் இன்னும் எத்தனையோ உள்ளங்கள் பாராட்டி இருக்கலாம் அவர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.



*இந்தியாவில் எழுத்தாளர் **''கொடிவழி''** அருணகிரி அவர்களைச் சந்தித்த போது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்முனை தமிழ்ச் சங்கத்தில் இனியும் நான் இராமன் தான் நூல் வெளியீட்டு விழாவின் போது




செல்லக்கிளி நூல் வெளியீட்டு விழாவில் கௌரவிக்கப்பட்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவில், 'காந்தளகம்' உரிமையாளர் திரு. மறவன்புலவு க. சச்சிதானந்தன் அவர்களைச் சந்தித்த போது



இந்தியாவில், எழுத்தாளரும் நாவலாசிரியருமான திரு. பாவை சந்திரன் அவர்களையும் மனைவியையும் சந்தித்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இனி வெளிவந்த விடயங்களைப் பார்ப்போம்:**
**இதுவரை நூலாக வெளிவந்திருப்பவை இவை,**

1. அவள் ஒரு தமிழ்ப் பெண் — சிறுகதைக் தொகுதி.
2. ஆனந்தக் கண்ணீர் — இரு குறு நாவல்கள்

இவை இரண்டும் பிரான்ஸ் ஸ்ரீபாரதி பதிப்பகத்துடன் இணைந்து சென்னை மித்ரா வெளியீட்டகம் வெளியிட்ட நூல்கள்.

1. இனியும் நான் இராமன் தான் — சிறுகதைத் தொகுதி

இது சென்னை காந்தளகம் வெளியீடாக இப்போது வெளிவந்திருக்கும் நூல்.

**அடுத்து வெளிவந்து இருப்பது**

1. செல்லக்கிளி — நாவல்
2. முருகனருள் — முருகன் கவிதைகள்
3. ஸ்ரீ திரௌபதை அம்மன் — ஆலய வரலாறு

இது தினகரனில் 1990ல் இனப்பிரச்சினை கூர்மை அடைந்திருந்த போது வெளி வந்தது. அப்போது வடக்கு கிழக்குக்கு தமிழ்ப் பத்திரிகைகள் வராததால் இதனை தமிழகம் எங்கும் இருந்த தமிழ் மக்கள் படிக்கவே இல்லை. ஆகவே இதனை அவசரமாக வெளியிட வேண்டி இருக்கிறது. இதனையும் சென்னை காந்தளகம் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

இனித் தொடர்ந்து வெளிவர இருப்பதையும் பார்த்து விட்டு தொகுத்து இருப்பதையும் பார்ப்போம்

**அடுத்து வெளிவர இருப்பவை**

1. பொங்கல் கவிதைகள் — கவிதைகள்
2. நீறு பூத்த நெருப்பு — சிறுகதைத் தொகுதி
3. அறிவியல் கட்டுரைகள் 50 — கட்டுரைகள்
4. ஒரு தேடல் — கவிதைகள்

**தொகுத்திருப்பவை**

**அ. சிறுவர் இலக்கியம்**

1. சிறுவர் சிறுகதைகள் — மூன்று தொகுதிகள்
2. சிறுவர் நவீனம் — நான்கு தொகுதிகள்
3. சிறுவர் கவிதைகள் — இரு தொகுதிகள்
4. சிறுவர் பாடல்கள்
5. அறிவியல் கட்டுரைகள் 50 — கட்டுரைகள்
6. விடலை இலக்கியம் — நாவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆ. நாவல்கள்

| | | |
|---|---|---|
| 1. | கலைந்து போகும் கோலங்கள்( மணற் கோலம்) | – ராதா |
| 2. | செல்லக்கிளி | – தினகரன் |
| 3. | இராசாத்தி (உன்னைக் காணாத நெஞ்சு) | – வீரகேசரி |

### இ. குறுநாவல்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஆனந்தக் கண்ணீர் | மித்திரன்( வெளி வந்தது) |
| 3. | அஞ்ஞாத வாசம் | நவமணி |
| 4. | கண்ணிலே நீரெதற்கு? | வீரகேசரிக்கு அனுப்பியிருப்பது |
| 5. | வித்தியாசமானவள் | தினகரனுக்கு அனுப்பியிருப்பது |

### ஈ. கட்டுரைகள்

| | | |
|---|---|---|
| 1. | பயணக் கட்டுரை | சிந்தாமணி |
| 2. | அறிவுக் கட்டுரைகள் | தினகரன் |
| 3. | சமயக் கட்டுரைகள் | தினகரன் தினபதி |
| 4. | ஆராச்சிக் கட்டுரை | தினபதி |
| 5. | இலக்கியம் கட்டுரைகள் | பல பத்திரிகைகளில் |
| 6. | ஞானக் கட்டுரைகள் | சங்கம யுகம் |
| 7. | குடிகளின் வரலாறு | ஆய்வுக் கட்டுரை |
| 8. | திருப்பாவை திருவெம்பாவை | ஆய்வுக் கட்டுரை |
| 9. | தியானம் என்றால்.. | கட்டுரைத் தொகுப்பு |
| 10. | பாரதியார் ஒரு யுக புருஷர் | கட்டுரைத் தொகுப்பு |
| 11. | நாளும் நாமும் | கட்டுரைகள் |

### உ. கவிதைகள்

| | | |
|---|---|---|
| 1. | சிறுவர் கவிதைகள் | இரு தொகுப்புகள் |
| 2. | முருகனருள் | கவிதைத் தொகுப்பு |
| 3. | திருவாருள் மாலை | கவிதைத் தொகுப்பு |
| 4. | .பாமலர்கள் | கவிதைத் தொகுப்பு |
| 5. | தந்தையானவள் | குறுங்காவியம் |
| 6. | முத்துச் சரம் | அம்மன் கவிதைகள் |
| 7. | பக்திக் கவிதைகள் | தொகுப்பு |
| 8. | ஞானக் கவிதைகள் | தொகுப்பு |
| 9. | பொங்கல் கவிதைகள் | தொகுப்பு |
| 10. | ஒரு தேடல் | கவிதைகள் |
| 11. | தரிசனம் | கவிதைகள் |
| 12. | விடிவு வரும் | கவிதைத் தொகுப்பு |
| 13. | ஏனையவை | தொகுப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊ. சிறுகதைகள்**

| | | |
|---|---|---|
| 1. | அவள் ஒரு தமிழ்ப் பெண் | 1வது வெளிவந்த தொகுதி |
| 2. | இனியும் நான் இராமன் தான் | 2வது வெளிவந்த தொகுதி |
| 3. | நீறு பூத்த நெருப்பு | 3வது வெளிவர இருப்பது |
| 4. | மனுஷ்யா | 4வது வெளிவர இருப்பது |
| 5. | இன்னும் தொகுக்க | 5வது தொகுதி |
| 6. | ஞானக் கதைகள் | ஆன்மீகக் கதைகள் |
| 7. | சிறுவர் கதைகள் | (இரு தொகுதிகள்) |
| 8. | பரமார்த்த குருவின் கதை | (தொகுப்பு) |

**எ. வெளிவர இருப்பவை பற்றிய விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | அஞ்ஞாத வாசம் | இரு குறுநாவல்கள் |
| 2. | சிங்கராஜா | சிறுவர் நவீனம் |
| 3. | பளிங்கு மாளிகை | சிறுவர் நவீனம் |
| 4. | பாதாளக் கிணறு | சிறுவர் நவீனம் |
| 5. | கிறிஸ்மஸ் பரிசு | சிறுவர் நவீனம் |
| 6. | பூங்கவிதைகள் | சிறுவர் பாடல்கள் |
| 7. | பொன் மலர்கள் | சிறுவர் கவிதைகள் |
| 8. | இறைவன் பெருமை | சமயக் கட்டுரைகள் |
| 9. | இராசாத்தி | நாவல் (வீரகேசரி) |
| 10. | கலைந்து போகும் கோலங்கள் | நாவல் (ராதா) |
| 11. | அறிவுக் களஞ்சியம் | (கட்டுரை தொகுப்பு) |
| 12. | நீறு பூத்த நெருப்பு | 3வது, சிறுகதைத் தொகுதி |
| 13. | மனுஷ்யா | 4வது, சிறுகதைத் தொகுதி |
| 14. | உண்மையே பேசு | சிறுவர் சிறுகதைகள் |
| 15. | பயந்த புலி | சிறுவர் சிறுகதைகள் |
| 16. | பொங்கல் கவிதைகள் | கவிதைத் தொகுப்பு |
| 17. | முகில்வண்ணன் கவிதைகள் | கவிதைத் தொகுப்பு |
| 18. | முத்துச் சரம் | அம்மன் கவிதைகள் |
| 19. | திருவெம்பாவை திருப்பாவை | ஆராச்சிக் கட்டுரை |
| 20. | பாரதியார் ஒரு யுக புருஷர் | கட்டுரைகள் |
| 21. | திருவருள் மாலை | முருகன் கவிதைகள் |
| 22. | பாமலர்கள் | முருகன் கவிதைகள் |
| 23. | ஒரு தேடல் | புதுக் கவிதைகள் |
| 24. | ஞானக்கதைகள் | ஆன்மீகக் கதைகள் |
| 25. | தந்தையானவள் | கவிதைகள் |
| 26. | சண்முகநாதன் ஒரு .... | வரலாறு |
| 27. | குடிகளின் வரலாறு | வரலாறு |
| 28. | தரிசனம் | கவிதைகள் |
| 29. | சகோதர பாசம் | சிறுவர் சிறுகதைகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏ. மொழி பெயர்ப்புகள் (ஆன்மீக நூல்கள்)**

1. இன்றைய நல்ல நாளுக்கான சிந்தனைகள்
2. இறைவன் – எனக்கு இனியவன்
3. ஆதி தேவி ஜெகதாம்பா சரஸ்வதி
4. ஆத்மாவின் இறக்கைகள் (அச்சில் வர இருப்பது)

**ஒ. வானொலி**

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஒலிபரப்பில்**

01. ஈழத்துப் பாடல்கள், மெல்லிசைப் பாடல்கள் ஒலிபரப்பாகியுள்ளன.
02. சிறுவர் மலரில் சிறுவருக்கான பாடல்கள், கதைகள் ஒலிபரப்பாகியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்னிணைப்பு**

செல்லக்கிளி – நாவல்
நயவுரை.
11.09.2011,
மட்டக்களப்பு.

நூலாசிரியர்: முகில்வண்ணன்.

**நயவுரை:**
**திருமதி. றூபி வலன்ரீனா பிரான்சிஸ்**
முதுநிலை விரிவுரையாளர்.
கிழக்குப் பல்கலைக்கழகம்.
வந்தாறுமூலை.
இலங்கை.

கல்முனையைச் சேர்ந்தவரும் சண்முகநாதன் என்னும் இயற்பெயரையுடையவருமான முகில்வண்ணன் அவர்கள், 1959 அளவில் எழுத்துலகில் பிரவேசித்தவர். கடந்த ஐந்து தசாப்தங்களாக எழுதிவருபவர். தொழிலால் பொறியியலாளர்.

**'அவள் ஒரு தமிழ்ப்பெண்','இனியும் நான் இராமன்தான்'** என்னும் இரு சிறுகதைத் தொகுதிகளையும் **'ஆனந்தக் கண்ணீர்' என்னும் இரு குறுநாவல்கள் அடங்கிய குறுநாவல் தொகுதி ஒன்றினையும்** வெளியிட்டுள்ளார்.

**'செல்லக்கிளி'**(2011) என்னும் இந்த நாவல் அவரது நான்காவது வெளியீடாகும். இவற்றைவிட ஆறு சிறுவர் இலக்கியங்கள் உட்பட 12 ஆக்கங்கள் எதிர்காலத்தில் வெளிவரவிருப்பதாக அறிய முடிகின்றது.

**'செல்லக்கிளி'** என்னும் நாவல், சென்னை **'காந்தளக'** வெளியீடாக சுமார் 300 பக்கங்களில் வெளிவந்துள்ளது. 15 அத்தியாயங்களில் கதை விவரிக்கப்படுகின்றது.

**கதைச்சுருக்கம்:**

இக் கதையின் நாயகி, ராஜேஸ் என்கின்ற ராஜேஸ்வரி: வீட்டில் செல்லமாக 'பேபி' என அழைக்கப்படுபவள். இரு அண்ணன்மாருக்கு ஒரே தங்கை. தந்தையை இழந்தவள். மட்டக்களப்பு நகர்ப்புறப் பாடசாலையில் க.பொ.த (உ/த) கற்பவள். அழகும் அறிவும் நற்பண்பும் உடையவள். மாமாங்கம் அவளது ஊர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதியான வாழ்க்கை வாழும்அவளது தாய் மாமனின் மகனான செல்வன், தனக்கு மனைவியாக அவள் வரவேண்டுமென விரும்புகின்றான். ஆனால் சிறு வயது முதலே ஒன்றாகப் பழகி வந்ததால் ராஜேஸின் மனதில் வேறுபட்ட எண்ணம் எதுவும் இருக்கவில்லை.

இந்நிலையில் சிங்களவாடியைச் சேர்ந்தவனும், நகரில் தொழில் புரிபவனும், விளையாட்டு வீரனுமான ரமேஷ் அவளது அழகில் மயங்கி அவளைச் சுற்றிச் சுற்றி வருகின்றான்.

மாமாங்கப் பிள்ளையார் ஆலயத் திருவிழாக் காலங்கள், நகரில் இடம்பெறும் விசேட நிகழ்வுகள் என்று சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவளது கண்ணில் படும்படியாகத் தொடரும் அவன், பாடசாலை விட்ட வேளையில் பாடசாலை தொடக்கம் பஸ் நிலையம் நிலையம் வரை அவளைத் தொடர்கின்றான்.

அவனது நடவடிக்கைகளை அறிந்தும் காதலுக்கு இடம்கொடாமல் கல்வியிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறாள் அவள். ஆனால் அவளது தோழிகள் அவனது காதலை ஏற்குமாறு அவளைத் தொடர்ந்து வற்புறுத்துகிறார்கள்.

தற்செயல் சந்திப்புப் போல சில சந்திப்புக்கள் திட்டமிட்டு அவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. தோழிகளின் இடைவிடாத நச்சரிப்பும். ரமேஷின் நண்பர்கள் சிலர் ராஜேஸின் தோழிகள் சிலரின் Boy Friends ஆக இருப்பதும் ரமேஷ் கலந்து கொள்ளும் விளையாட்டு நிகழ்வுகளுக்குப் பலவந்தமாக அவளையும் இழுத்துச் செல்வதுமான சூழல்கள் அவள் மனதையும் படிப்படியாக மாற்றிவிட காதல் ரமேஷையும் ராஜேஸையும் இணைத்து வைக்கின்றது.

வீட்டாரின் எதிர்ப்புக்களையும் சமாளித்துவிடுகிறான் ராஜேஸ். ஏமாற்றத்தைத் தாங்க முடியாத செல்வன் வெளிநாடு சென்றுவிடுகின்றான். செல்வனின் அக்கா அருந்ததி, ராஜேஸ் மீது தீராத வன்மம் உள்ளவள். தனது தம்பியான செல்வனுக்கு அவளை மணம் முடித்து வைத்து அவளைத் தன் அடிமையாக்க நினைத்தவள். ரமேஷ் – ராஜேஸ் காதலால் தன் எண்ணம் தவிடு பொடியானதால் ராஜேஸைப் பற்றித் தரக்குறைவாக ஊரில் வம்பு பேசுகின்றாள்.

இந்நிலையில் தொழிலின் உயர்கல்விக்காக ரமேஷ் கொழும்பிற்குச் செல்ல நேர்கின்றது. அங்கு தங்கியிருக்கும் வீட்டிலுள்ள இளம்பெண் ஒருத்தி தந்திரமாக அவனை மதுவினால் மயக்கி தனக்கு இணங்க வைத்து விடுகின்றாள். மது மயக்கத்தால் தவறிழைக்கும் ரமேஷ் அந்தப் பெண்ணையே திருமணம் செய்ய நேர்கின்றது.

இதனால் பாதிப்புறும் ராஜேஸும் அவளது குடும்பத்தினரும் நிம்மதியை இழக்கின்றார்கள். ரமேஷ், ராஜேஸைக் கைவிட்டமைக்கு ராஜேஸின் நடத்தையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் எனப் பிழையாக அவதூறினை அருந்ததி பரப்புகின்றாள். தனது மன அமைதிக்காக ஒன்றுவிட்ட தமக்கையின் வீட்டிற்குச் செல்லும் ராஜேஸை அங்கும் நிம்மதியாக இருக்க முடியாதபடி அத் தமக்கையின் கணவருக்கும் அவளுக்கும் தவறான தொடர்பு இருப்பதாக அபாண்டமாகப் பழி சுமத்துகின்றாள்.

தனது வாழ்க்கையைச் சீர்குலைக்கவென்றே கங்கணம் கட்டிக் கொண்டு அலையும் அருந்ததியை வெல்ல, தன்னை முழுமையாக உணரும் ஒருவனுடன் மணவாழ்க்கையில் இணைய முடிவெடுக்கிறாள் ராஜேஸ். இதன் மூலம் தன் தாய்க்கும் சகோதரர்களுக்கும் கூட அமைதியையும் நிம்மதியையும் ஏற்படுத்திக் கொடுக்க முடியுமென்றும் அவள் நம்புகிறாள்.

இரு குழந்தைகளுக்குத் தந்தையும் மனைவியை இழந்தவனும் சட்டத்தரணியுமான ஆனந்தனுக்கு இரண்டாம் தாரமாக அவள் வாழ்க்கைப்பட சூழல் கனிந்த வேளையில், அருந்ததியின் சூழ்ச்சியால் அந்தச் சம்பந்தமும் குலைந்து போகிறது.

எக் காலத்திலும் அருந்ததியால் தான் நிம்மதியாக வாழ முடியாது என உணரும் ராஜேஸ் தற்கொலை செய்து கொள்கின்றாள். அவளது அகால மரணம் தாயின் இறப்பிற்கும் காரணமாக அதனால் குடும்பமே சிதைவுறுகின்றது.

கதையின் இறுதிக் கட்டத்தில் ரமேஷிற்கு வஞ்சகம் செய்த அருந்ததியினதும் ரமேஷினதும் குடும்ப நிலவரங்களை முத்தாய்ப்பாய் கூறி கதையை நிறைவு செய்கிறார் முகில் வண்ணன்.

1983 கலவரத்தால் பாதிப்புறும் ரமேஷ் குடும்பம் உடமைகள் யாவற்றையும் இழந்து உடுத்த உடையுடன் கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு வந்து சேர்கின்றது.

ராஜேஸின் வாழ்வினைச் சீரழிப்பதிலேயே தன் பொழுதுகளை கழித்த அருந்ததி தன் மகளைக் கவனிக்காமல் விட்டுவிடுகிறாள். தன் இஷ்டத்திற்குத் திரியும் அவளது மகள் லாவண்யா, காதலில் விழுந்து தாயாகும் நிலைக்குத் தள்ளப்படுகையில் அவளது காதலனும் கலவரத்தில் இறந்துவிடும் செய்தி கிடைக்கின்றது.

கதையின் இறுதியில் பின்வரும் நீதியினைக் குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

**''நேற்று நீ எதை விதைத்தாயோ அதை இன்று அறுக்கிறாய்.**
**இன்று எதை விதைக்கிறாயோ அதை நாளை அறுப்பாய்.**
**அதுதான் நியதி. உனது ஒவ்வொரு செயலுக்கும் எதிர்வினை உண்டு.**
**இதையே நீ விதி என்கிறாய். இதை நீ அனுபவித்தே ஆக வேண்டும்.**
**இதை உணர்ந்து கொண்டால் துன்பமில்லை.''**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லமாக வளர்க்கப்பட்ட ராஜேஸ் செல்லக்கிளியாக வாழ வேண்டியவள், ஆனால் செல்லாக்காசாக, உலகைவிட்டே செல்லும் கிளியாக இதில் படைக்கப்பட்டுள்ளாள். அவளைச் செல்லக்கிளியாகப் பார்க்க நினைத்த சகோதரர்க்கும் தாய்க்கும் அவளை அன்பு செய்தோர்க்கும் ஏமாற்றமளித்து பறந்துவிடுகிறாள்.

அவளது முடிவிற்குக் காரணமானவர்கள், அவளது நிம்மதியைக் குலைத்தவர்கள் அனைவருமே தமது நிம்மதியை இழக்கிறார்கள்.

இந்நாவல் கூறும் கதை யதார்த்தமானதுதான். காதல் கதை. காதல் வளர்த்தெடுக்கப்படுவதும், தோல்வியில் முடிவதும், மீண்டெழ முயற்சிப்பதும், மனச் சமாதானத்திற்காகவும் சுற்றஞ் சூழலுக்காகவும் பொய்யாக வாழ முடிவெடுப்பதும் அது முடியாததென்ற முடிவில் தவறான முடிவுகளுக்கு எத்தனிப்பதும் இக்கதையின் பிரதான அம்சங்கள்.

வீண்பழியால் பிறர் வாழ்வைச் சீரழிக்கும் அருந்ததி போன்றவர்களும், வீண்பழியை ஆராய்ந்து பார்க்காது உண்மையென நம்பும் ஆனந்தன் போன்றவர்களும், காதலியைச் சந்தர்ப்ப வசத்தால் கைவிட்டுச் செல்லும் ரமேஷ் போன்றவர்களும் இவர்களுக்கெல்லாம் ஈடுகொடுத்து வாழ முடியாமல் தோற்றுப் போகும் ராஜேஸ் போன்றவர்களும் இன்றும் எம் மத்தியில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள்.

களமும் சூழலும் காலமும் மாறினாலும் சில விடயங்களும் மனிதநடத்தைகளும் மாறாதிருக்கின்றமை யதார்த்தமானது.

இக்கதையின் களம் மட்டக்களப்புப் பிரதேசம் குறிப்பாக மட்டக்களப்பு நகராக முன்னைய காலங்களில் நாளும் பொழுதும் கலகலப்பாக இருந்த புளியந்தீவுப் பிரதேசம்.

கதை நிகழும் காலமாக 1970-80 கள் அமைகின்றன. இப்போது 50-60 வயதைக் கடந்திருப்பவர்கள் இக்கதைக் காலப் பகுதியில் இளைஞர்களாக இருந்திருப்பார்கள் என்று ஆசிரியர், முன்னுரையில் குறிப்பிடுவதிலிருந்து அக்காலத்தை வரையறை செய்ய முடிகின்றது.

1985ல் இவரால் எழுதப்பட்ட இக்கதை, 1990ம் ஆண்டுக் காலப்பகுதியில் இக்கதை தொடர் கதையாக **'தினகரன்'** பத்திரிகையில் வெளிவந்ததாகவும் அப்போதிருந்த சூழலால் பத்திரிகை மட்டக்களப்பிற்குக் கிடைக்கப்பெறாமல் ஆசிரியர் உட்பட யாரும் இங்கு இதனை அறிந்திருக்கவில்லையென்றும், கொழும்பிற்குச் சென்ற சந்தர்ப்பமொன்றில் இதுகுறித்து அறிந்து பின்னர் சுவடிக்காப்பகத்தில் பிரதிகளைப் பெற்றுக்கொண்டதாகவும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970 –80கள் காலப் பகுதியை மையமாக வைத்துப் புனையப்பட்ட இக் கதை நூலுருப் பெற்றிருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது.

1. இக்காலத்திற்குரிய மட்டக்களப்புச் சூழல் அதன் மெருகும், இயல்பும், யதார்த்தமும் சற்றேனும் குறவுறாத வகையில் இந்நாவலில் வெளிக்கொணரப்பட்டிருப்பது.

2. இதனை உறுதியாகச் சொல்லக் கூடிய வகையில் அந்தக் குறிப்பிட்ட காலத்திலும், களத்திலும்நான் வாழ்ந்தவள் என்ற வகையில் உறுதியாகக் கூறக்கூடிய உரிமையும் அவற்றை நினைவில் மீளக் கொணர வாய்ப்பினை இந் நாவல் தந்தமையுமான நெகிழ்வு.

இக் கதையில் வரும் பெயர்கள், சம்பவங்கள் ஆகியனவற்றை கற்பனை என ஆசிரியர் குறிப்பிட்டாலும் அந்தக் காலத்து நடைமுறைகளும் சூழலும் யதார்த்தமாக இந்நாவலில் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. உண்மைச் சம்பவங்கள் சில இணைக்கப்பட்டிருக்கின்றன.

இந்நாவலில் வருகின்ற விடயங்களோடும் பிரதேச களத்தோடும் குறித்த காலத்தோடும் எனக்கு மிக நெருக்கமான பிணைப்பு உண்டு. புளியந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டு இளமைக்காலம் வரை அங்கேயே வாழ்ந்தவள் நான். நகர்ப்புறப் பாடசாலையில் கல்விக் காலம் கழிந்தது. இக் கதையில் குறிப்பிடப்படும் இடங்கள் மற்றும் சில சம்பவங்கள் என் நினைவில் வந்து போகின்றன.

குறிப்பாக இந்நாவலில் வரும் றஷீதியா ஹோட்டல் – அங்கு சுவைக்கும் ஐஸ்கிறீம் – பஸ் நிலையத்தின் அருகே இருந்த மில்க் பார், பத்திரிகை விற்கும் சந்திக்கடை, முற்றவெளி – அங்கு நடைபெற்ற நிகழ்வுகள், பிரமாண்டமான பொருட்காட்சி நிகழ்வு – அதில் பாடசாலை மாணவர்கள் பங்கு கொண்டமை ஆகியன குறிப்பிடத்தக்கன.

தற்போதில்லாமல் அன்றைய காலங்களில் மாணவிகள் பாடசாலைக்கு பஸ்ஸிலேயே சென்று வருவார்கள். ஆசிரியர் முன்னுரையில் குறிப்பிடுவதைப் போல,**'அந்த நாட்களில் மாணவ மாணவியர் பைசிக்கிளில் செல்வது குறைவு. அதிகமானவர்கள் பஸ்களிலே வந்து நகரின் மத்தியில் இருக்கும் பஸ்நிலையத்தில் இறங்கிப் பட்டாம் பூச்சிகள் போன்று வெவ்வேறு திசைகளில் தாம் படிக்கும் பாடசாலைகளுக்குச் செல்வார்கள். ஸ்கூல்பேக் காவும் பழக்கமும் அப்போது இல்லை'**

பஸ் நிலையம் காதலர்களின் சந்திப்பு நிலையமாகவும், காத்திருக்கும் நிலையமாகவும் இருந்த நிலைமைகள் நிறைந்த காலமது. செல்போன்கள் இல்லாத காலம். தபால்காரனே காதலர்களின் கடவுளாக இருந்த காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை விட்டதும் மாணவிகளின் பின்னால் 'சைட்' அடித்துக் கொண்டே பஸ் நிலையம் வரை சைக்கிளில் பவனி வரும் இளைய ஆண்களின் ஊர்வலம் நடக்கும்.

பின்னேர வேளைகளில் வெள்ளைப் பாலத்துக் கம்பிகளில் **'ஒற்றைக்காலில் தவமிருக்கும் கொக்குகளாய்'** இளம்பெண்களுக்கு நக்கலடிக்கும் – இதனை **'சீனி போடுதல்'** என்ற அக்காலச் சொற்றொடராலேயே ஆசிரியர் குறிப்பிட்டுள்ளமை நயத்தற்குரியது – கண்டிப்பாரும், தண்டிப்பாரும் இல்லாத விடலைக் கூட்டம்.

கச்சான் காலங்களில் இவர்களின் தொல்லையிலிருந்து தப்ப அவஸ்தைப்படும் யுவதிகள் என அந்தக் காலங்களை எம் மனக்கண் முன் நிதர்சனமாகக் கொணர்கின்றார் ஆசிரியர்.

மாணவிகள் தம் பின்னால் அலையும் இளைஞர்களுக்கு வைக்கும் பட்டப்பெயர்கள் வெகு பிரபலம். இந் நாவலில் அவற்றுட் சில குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆடு போல தாடி வைத்திருப்பவன் – **ஆட்டுக்காரன்,** போகுமிடமெல்லாம் பின்னாலேயே அலைபவன் – **பொலிஸ் நாய்,** தனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தை எப்போதும் பேசுபவன் – **லண்டன் மாப்பிள்ளை,** முடியை வளர்த்திருப்பவன் – **ஹிப்பி** என இவை வருகின்றன.

பாடசாலைக் காலமே இந்நாவலை ஆக்கிரமித்திருப்பதால் அந்தக் கால பாடசாலை உலகம் விவரணமாய் விரிகின்றது. பொதுப்பரீட்சை முடிவுகள் அறிவிக்கப்படுவதும் மாணவர்களின் கூட்டம் அவற்றை அறிவதற்கு பாடசாலைக்குப் படையெடுப்பதுமான விவரணங்கள் 'இன்றநெற்றில் முடிவுகளை முன் கூட்டியே அறிந்துவிட்டு பாடசாலையை மறந்து விடும் இன்றைய தலைமுறை அறியாத ஒன்று.' நாவலில் இந்நிகழ்வு பற்றிய விவரிப்பு அற்புதமாக அமைகின்றது.

''காலையிலேயே புறப்பட்டுச் சென்று விட்டாள் ராஜேஸ். பிள்ளைகள் எல்லோரும் கூடி நின்று கலகலத்துப் பேசிக்கொண்டிருந்தனர். முடிவறியும் ஆர்வம் ஒரு புறம். பல நாள்களுக்குப் பிறகு சந்திப்பதில் அனைவருக்கும் அதிகம் கதைக்க வேண்டியிருந்தது.

தபாற்காரன் பாடசாலை வளவினுள் வந்ததும் எல்லோருடைய சத்தமும் அடங்கி அமைதி தோன்றியது. முடிவறியும் ஆவலில் கதைக்க வேண்டிய அனைத்தையும் மறந்து போயினர். சிலருக்கு மனம் திக் திக் என்றது. சிலர் என்ன முடிவு வந்தாலும் ஏற்கத் தயாராக இருந்தனர். கேற்றுக்கு வெளியே பல – தாய் தந்தையர், சுற்றத்தார்,'போய் பிரண்ட்ஸ்' எனப் பலரும் கூடி நின்றனர். அதிபர் முடிவுகளை முறைப்படி வாசிக்க முன்னர், பாடசாலைக்குப் பெருமை தேடித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்த இருவரது பெஸ்ட் ரிசல்ட்டுகளை முதலில் அறிவிக்கின்றேன். நந்தினி நாலு 'டி' யும், நாலு 'சீ' யும்: ராஜேஸ் மூன்று 'டி' யும், நாலு 'சீ' யும், ஒரு 'எஸ்' உம் என்றார்.''

— என அவ்விபரிப்பு வருகின்றது.

டி, சீ, எஸ் என்ற தரத்தில் க.பொ.த சா/தரப் பெறுபேறுகள் நிர்ணயிக்கப்பட்ட காலம் அது. தற்போது ஏ, பி, சீ, எஸ் என வரும்.

பாடசாலைக் காலத்தின் இன்னுமொரு இயல்பான நிகழ்வினையும் யதார்த்தமாக ஆசிரியர் குறிப்பிடுவதைக் காணலாம்.

அதாவது பாடசாலை ஆரம்பமாகும் முதல் நாளிலும் பரீட்சை முடிவுகள் வெளிவரும் நாளிலும் வகுப்புகள் நடப்பதில்லை என்பதை பாத்திரங்களின் உரையாடலினுடாக நாசூக்காகக் கூறிச் செல்கின்றார். விடுமுறையின் பின்பு பாடசாலை ஆரம்பமாகும் முதல் நாள் பற்றிய விபரிப்பு வருமாறு அமைகின்றது.

''ஜனவரி 2 இல் பாடசாலை தொடங்கியது. எதிர்பார்த்தது போல் வகுப்பில் எல்லோரும் வந்திருந்தார்கள் நீண்ட நாள்களுக்குப் பிறகு எல்லோரும் சந்தித்ததால் அவரவர்கள் லீவில் நின்றபோது என்ன படம் பார்த்தார்கள் — என்ன செய்தார்கள் — எங்கு போனார்கள் — என்ன உடுப்பு வாங்கினார்கள் — என்னென்ன விஷேஷங்கள் வீட்டில் நடந்தேறின, அவர்களது போய் பிரண்ட்ஸைச் சந்தித்தது, கடிதம் போட்டது எல்லாவற்றையும் ஒருவருக்கொருவர் தத்தம் ரகசியங்களை சொல்ல வேண்டியவர்களிடம் சொல்லியும், மறைக்க வேண்டியவர்களிடம் மறைத்தும் பேசிக் கொண்டார்கள்.'' என விபரித்துள்ளார் ஆசிரியர்.

இன்றெல்லாம் பாடசாலை முதல்நாட்களில் கதைத்துப் பரிமாறிக் கொள்ள இங்கு குறிப்பிட்டதைப் போல நீண்ட விடயங்கள் இருக்காது, அவ்வப்போது எல்லாவற்றையும் பரிமாறிக் கொள்ள செல்போன் இருப்பதால்.

பாடசாலைகள் பங்குபற்றிய பொருட்காட்சி நிகழ்ச்சி பற்றிய விபரணமும் இந்நாவலில் வருகின்றது. ராஜேஸூம் ரமேஸூம் சந்திக்கின்ற களமாக அது குறிப்பிடப்படுகின்றது. குறித்த காலப் பகுதியில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்ற பொருட்காட்சியும் மழை வெள்ளத்திலும் மக்கள் முண்டியடித்துக் கொண்டு பார்த்த அனுபவங்களும் உண்மையானவை.

பொருட்காட்சிகளின்போது காட்சிப்படுத்தப்படும் பொருட்கள் அல்லது செய்முறை விளக்கங்களுக்காக அங்கு நிற்கும் மாணவ மாணவியரிடம் வேண்டுமென்றே வினாக்களைத் தொடுத்து கேலி பண்ணுவதும் ஆசிரியர்கள் அவ்விடத்திற்கு வந்தால் நழுவுவதும் இயல்பாகவே சித்திரிக்கப்பட்டுள்ளன.

அக்காலத்தில் இரு நேரப் பாடசாலை முறைமை நடைமுறையில் இருந்தமையையும் ஆசிரியர் கதையினூடே புலப்படுத்திச் சென்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புப் பிரதேசத்திற்கேயுரிய தனித்துவமான பேச்சுவழக்குச் சொற்களும், மரபுகளும் இந்நாவலில் பதிவு செய்யப்பட்டிருப்பது இந் நாவலின் மற்றுமோர் சிறப்பாகும்.

மட்டக்களப்பு வழக்கில் 'வாங்களன்' (வாருங்கள்),'வந்தனான்' (வந்தேன்),'போனனான்' (போனேன்),'எண்ட' (என்னுடைய),'ஏவம் கேட்டல்' (ஒருவர் சொல்லுவதனைக் கேட்காமல் நடந்து பாதிப்புறும்போது அதனையிட்டு தான் முன்பு சொன்னதை ஞாபகமூட்டிக் கேட்டல்),'பொடியன்கள்' (இளைய ஆண்கள்) எனப் பல சொற்களைக் கூறலாம்.

மட்டக்களப்புப் பேச்சு வழக்கிற்கு உதாரணமாக ராஜேஸூக்கும் அவளது சின்னண்ணன் சுகுணனுக்கும் இடையே நடைபெறும் ஏட்டிக்குப் போட்டியான பின்வரும் உரையாடலினைக் கூறலாம்.

''நாளையண்டைக்குப் போகக்குள்ள எனக்குப் பத்து ரூபா தர வேணும் அம்மா. பரீட்சை எல்லாம் முடிய பிரெண்ட்ஸ் எல்லாம் றஷீதியாஷூக்குப் போய் ஐஸ்கிறீம் குடிக்கிறதெண்டு சொன்னவங்க. அண்டைக்குத்தான் எல்லோரும் கடைசியாகச் சந்திக்கப் போகிறோம். பிறகு எப்பவோ யார் யார் சந்திக்கப் போறோமோ தெரியாது.'' என்றாள்.

யாருக்கும் தெரியாமல் பின்னால் வந்து நின்ற சின்னண்ணன் சுகுணன் இதைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவளுடன் 'தனகுவது' அவனது பொழுதுபோக்கு. ''என்னம்மா தருவியளா?'' என்றாள் ராஜேஸ்.

''என்னடி பத்து ரூவாயா? தருவாவோ பார்ப்போம். உனக்குத் தந்தா எனக்கும் தர வேணும்'' என்றான் சுகுணன்.

''உன்னிட்ட ஆரு கேட்டது? நீ போய் உண்ட வேலையைப் பாரன். இஞ்ச பாருங்கம்மா சின்னண்ணனை'' என்று சிணுங்கினாள்.

''அம்மா அவளுக்குத் குடுத்தா எனக்கும் தர வேணும். நானும் ஐஸ்கிறீம் குடிச்சு எத்தனை நாளாச்சு''

''ஓம் அவர் படிச்சுக் கிழிக்கிறதுக்குள்ள அவருக்கு ஐஸ்கிறீம்''

''இல்ல.... அம்மா மட்டும்தான் படிக்கிற எண்டு நினைப்பாக்கும். அடுத்த வருஷம் ஏ.எல்ல ஐயா நாலு ஏ எடுத்துக் காட்டுவார். அப்ப தெரியும் எண்ட திறமை.''

''ஓ..ஓ ..நாலு ஏ எடுப்பாராம். நாலு 'எவ்' எண்டு சொல்லு. ஏன் இன்னும் கொஞ்ச நேரம் கூடப் படுத்தா நாலு ஏ எடுக்கலாம். இப்ப ஏழு மணக்கு எழும்புற நீ எட்டு மணிக்கு எழும்பு.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பாத்திரங்களின் உரையாடல்களாக அமையப் பெறும் பகுதிகளில் மட்டக்களப்பின் பிரத்தியேகமான வழக்குச் சொற்களையும், மரபுகளையும் அதிகம் காணலாம்.

இந்நாவலில் பாத்திர உரையாடல்கள், நிகழ்வுகள் ஊடாக கதை வளர்த்துச் செல்லப்படுகையில் சில இடங்களில் ஆசிரியரும் தன் கருத்துக்களையும் சம்பவம் தொடர்பான அபிப்பிராயங்களையும் கூறிச் செல்வதைக் காணலாம்.

*உதாரணமாக:* **'செல்வன் வீட்டைக் கொஞ்சம் எட்டிப் பார்ப்போமே'** *(பக்: 191)*,**'இதுக்கு நாள்கால் நாட்டியது அருந்ததி அல்லவா. அதைப் பார்ப்போம்.'** *(பக்: 209)* கதையின் தொடர்ச்சிக்கு சிறு நெருடலாக இது அமைந்தபோதிலும் தொடர்கதையாக இது வடிவமைக்கப்பட்டமையால் இத்தகைய அணுகுமுறையினை ஆசிரியர் கடைப்பிடித்திருக்கக் கூடும் என எண்ண இடமுண்டு.

அடுத்து, இந்நாவலில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய இன்னுமோர் முக்கியமான அம்சமுண்டு. அதாவது பாடசாலை மாணவியரான இளம் யுவதிகள் தம்மையொத்த தோழிகளுடன் உரையாடும் அம்சங்களையும், பிரத்தியேகமானதும் இரகசியமானதுமான விடயங்களைப் பரிமாறிக் கொள்ளும் தன்மைகளையும் மிகவும் துல்லியமாகப் பதிவு செய்துள்ளார்.

சுருக்கமாகக் கூறுவதாயின் ஆசிரியர் ஆணாக இருப்பினும் பெண் பிள்ளைகளிடையே இடம்பெறும் தனிப்பட்ட உரையாடலை மிக நுணுக்கமாகக் கவனித்து அவற்றைப் பெண் கதாபாத்திரங்களின் ஊடாக இந்நாவலில் வெளிக்கொணர்ந்துள்ளார். நாவலை ஊன்றி வாசிப்போருக்கு அவற்றை அடையாளம் கண்டு கொள்வது சிரமமாயிராது.

**நூலின் அட்டைப்படம், மட்டக்களப்புப் பிரதேசச் சூழலை குறிப்பாக கதை நிகழும் களம், மற்றும் கதையில் இடம்பெறும் முக்கிய இடங்கள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.**

**முன்அட்டையில்,**
மாமாங்கப் பிள்ளையார் ஆலயச் சூழல், பாடசாலை மாணவியர், காதலனும் காதலியுமான சோடி ஒன்று எனவும்

**பின் அட்டையில்,**
பிரதான சந்தியில் அமைந்துள்ள மணிக்கோட்டுக் கோபுரமும், முகில்வண்ணன் அவர்களது நிழற்படமும் அவர் பற்றிய குறிப்புக்களும் இடம்பெற்றுள்ளன.

இன்றைய நவீன மாற்றங்கள் புளியந்தீவை ஆட்கொள்ளாத காலத்தின் பதிவுகளைத் தாங்கியுள்ள வகையிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புப் பிரதேசத்தின் வழக்காறுகளையும் பேச்சுவழக்கினையும் பதிவுசெய்து வைத்துள்ள வகையிலும்,

இயல்பான சூழலில் சுதந்திரமான செயற்பாடுகள் நடைபெற்ற முறைமையினை வெளிக் கொணர்ந்த வகையிலும்

இந்நாவல் முக்கியத்துவம் பெறுகின்றது.

மில்க் பாரும், முற்றவெளியும், றஷீதியாஸ் ஹோட்டலும், அதனருகேயிருந்த பேக்கரியும், பத்திரிகை விற்ற சந்திக் கடையும் ஒரு காலத்தின் நிஜங்கள். அவை வெறும் கல்லாலும் மண்ணாலும் ஆன கட்டிடங்களோ வெளியோ அல்ல.

நினைவுகளையும் வரலாற்றையும் பல்வேறு உணர்வுகளையும் ஒருமைப்பாட்டையும் சுமந்து நின்ற ஞாபகச் சின்னங்கள். இவற்றினூடாக உயிருள்ள கதையொன்றினை நகர்த்திச் சென்றதன் மூலம் அவற்றை வரலாற்றிலும் நிலை பெற வழி செய்துள்ளார் இந்நாவலின் ஆசிரியர்.

பழைமை எப்போதும் பவித்திரமானது. அதனை மெருகும் இயல்பும் குன்றாமல் அடுத்த தலைமுறைக்குக் கையளிப்பது என்பது எல்லோர்க்கும் சாத்தியப்படாதது. ஆயினும், அக் கையளிப்பைச் சாத்தியப்பாடுடையதாக்கி என் போன்றவர்கள் வாழ்ந்து அனுபவித்த அந்தப் பழைய மட்டக்களப்பை எனது பிள்ளைகள் போன்றோருக்கும் அதற்கும் அடுத்தடுத்து வரவிருக்கின்ற தலைமுறைக்கும் **'எழுத்துமுதுசொம்'** ஆக ஆசிரியர் தந்திருப்பதன் மூலம் இந்நாவல் மேலும் சிறப்புறுகின்றது.

இது இந்நாவல் பெற்றிருக்கும் அனைத்துச் சிறப்புக்களிலும் சிகரமாக அமைவது எனக் கூறுவதில் தவறில்லை.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் மிகச் சொற்பமானோரே நாவல் எழுதுகின்ற நிலையில் ஆசிரியர் தொடர்ந்தும் இத் துறையில் ஈடுபட்டு தனித்துவமான இடத்தினைப் பெற வேண்டும் என்பதே என் போன்றோரின் வேணவா.

ஆசிரியருக்கு எனது வாழ்த்துக்கள்.

**றூபி வலன்ரீனா பிரான்சிஸ்**

முதுநிலை விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்னிணைப்பு 2**

*இந்திய பத்திரிகையான ஜனசக்தியில் வெளிவந்த செல்லக்கிளி நாவலுக்கான விமர்சனம்:*

விமர்சித்திருப்பவர்: **''பாலுபிரியா''**
வெளிவந்த திகதி: செப்டம்பர் 25. 2011

**செல்லக்கிளி**

இலங்கையில் உயர்தொழில் நுட்பவியலாளராகவும் சிறந்த தொழில் அதிபராகவும் விளங்கிய முகில்வண்ணன் வே.சண்முகநாதன் என்பவரால் இலங்கை தினகரன் நாளிதழில் 1990இல் தொடராக எழுதி இளைஞர்களை மட்டுமில்லாமல் அனைத்துத் தரப்பு மக்களின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்று இப்போது நூல் வடிவம் பெற்றிருக்கிறது.

நாவலின் காதாநாயகி ராஜேஸ்வரி என்ற ராஜேஸ். ராஜேஸ் உடன் பிறந்தவர்கள் இரண்டு அண்ணன்கள். மூத்தவன் ரமணன் இளையவன் சுகுணன். தந்தையார் இறந்து விட்டார். தாயார் இருக்கிறார். ராஜேஸின் தாய் மாமானின் மகன் செல்வராஜ் என்ற செல்வன், மகள் பெயர் அருந்ததி.

ராஜேஸ் பள்ளியில் படிக்கும் நகரிலே வேலை செய்பவன் ரமேஷ். இவன் சிறந்த கால்பந்து விளையாட்டு வீரன். இவன் ராஜேஸை உயிருக்கு உயிராகக் காதலிக்கிறான். தாய் மாமன் மகன் செல்வத்திற்கும் ராஜேஸை மணந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் ராஜேஸ் ரமேஷைத்தான் விரும்புகிறாள். இதற்கிடையில் ரமேஷ் மேற்படிப்புக்காக கொழும்பு செல்ல நேரிடுகிறது.

அருந்ததி செல்வச் செருக்கினால் திமிர் பிடித்தவள். யாரையும் மதிக்க மாட்டாள். அருந்ததியின் தந்தை அருந்ததிக்கு மாப்பிள்ளையை வாங்கினார் என்றே சொல்லலாம். கை நிறைய சீதனப் பணம், வீடுவளவு நகைநட்டு என்று ஏராளமாகக் கொடுத்தார்.

கல்யாணம் முடித்த புதிதில் ஏதோ தனது கணவன் என்று மதிப்புக் கொடுத்தாள். அதன் பிறகு அதெல்லாம் காற்றில் பறந்து விட்டது. அவனது சம்பளத்தை பிச்சைச் சம்பளம் என்று கூறும் அவள், எங்கட வீட்டில் உள்ள வேலைக்காரர்களுக்கு இதைவிட கூடுதலாகக் கொடுக்கிறோம் என்று கூறத் தொடங்கிவிட்டாள்.

நல்லவேளை, கல்யாணம் முடித்த புதிதில் கணவன் மனைவியாக வாழ்ந்த வேளை, அதுவும் இளமைக் கனவுகளை அனுபவிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டிருந்த படியால் கர்ப்பம் தரித்தாள். லாவண்யா பிறந்தாள். அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு கணவன் மனைவி உறவு பாதிக்கப்பட்டு விவாகரத்து என்று முடிவுக்கு வந்தது.

அருந்ததிக்கு ராஜேஸ் அழகாக இருப்பதால் அவள் மீது பொறாமை. அவளை எப்படியாவது தனது தம்பி செல்வத்துக்கு கட்டிவைத்து பழிவாங்க வேண்டும் என்று துடித்தாள். அது நிறைவேறாமல் போய்விட்டது.

கொழும்பு சென்ற ரமேஷ் தங்குவதற்கு தனியாக ரூம் கிடைக்காத காரணத்தால் ஒரு தமிழ்க் குடும்பத்துடன் தங்க வேண்டியதாகிவிட்டது. அந்த வீட்டில் ஷர்மினி ஷாமினி என அக்கா தங்கைகள். அவர்களுடைய தாய் இறந்து விட்டதால் இருவரும் தோழிகளாகவே பழகினார்கள்.

இவர்கள் ரமேஷை வளைத்துப் போட திட்டமிடுகின்றனர். ஷர்மினி பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது ரமேஷுக்கு குளிர்பானத்தில் மது கலந்து கொடுத்து அந்த மயக்கத்திலேயே அவனுடன் உடலுறவு கொண்டு ஷர்மினி கர்ப்பமாகிறாள். இதனால் ராஜேஸ் ரமேஷ் காதல் முறிகிறது.

பிறகு ராஜேஸ் நீண்ட யோசனைக்குப் பிறகு இரண்டு குழந்தைகளின் தந்தையான வழக்கறிஞர் ஆனந்தனை திருமணம் செய்து கொள்ள முடிவு செய்கிறாள். அருந்ததி கலகம் செய்து இந்த திருமணத்தை நடக்க விடாமல் செய்து விடுகிறாள்.

இதனால் மனமுடைந்த ராஜேஸ் தற்கொலை செய்து கொள்கிறாள். அந்த அதிர்ச்சி தாங்காமல் அவளது தாயாரும் இறந்து போகிறார்.

அருந்ததியின் மகள் லாவண்யா பக்கத்து வீட்டுப் பையன் மகேந்திரனை காதலித்து நெருங்கிப் பழகியதால் மூன்று மாத கர்ப்பமாக இருக்கிறாள். அவளுக்கு வயதோ பதினான்கு தான். மகேந்திரன் கொலை செய்யப்பட்டு உயிரிழக்கிறான்.

ரமேஷ் தனது குடும்பத்தாருடன் கலவரத்திலிருந்து தப்பிவந்து பிச்சைக்காரன் போல் ரோட்டில் திரிந்து கொண்டிருக்கிறான். இது தான் கதை.

**''நேற்று நீ எதை விதைத்தாயோ அதை இன்று அறுக்கிறாய். இன்று எதை விதைக்கிறாயோ அதை நாளை அறுப்பாய். அது தான் நியதி. உனது ஒவ்வொரு செயலுக்கும் எதிர்வினை உண்டு. இதை நீ விதி என்கிறாய். இதை நீ அனுபவித்தே ஆக வேண்டும். இதை உணர்ந்து கொண்டால் துன்பமில்லை.** என்று கூறி கதையை முடிக்கிறார் நாவலாசிரியர். பெண்களுக்குள் எத்தனை விதமான பெண்கள் இருக்கிறார்கள் என்பதை நாவலாசிரியர் யதார்த்தமாக இந்த நாவலில் எடுத்துக் காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்னிணைப்பு 3**

இந்தியப் பத்திரிகையாகிய தினமலரிலும் ஒரு மதிப்புரை வெளிவந்திருக்கிறது என்பதை அறிகிறேன். அதன் பிரதி கிடைக்கவில்லை.

பத்திரிகை: தினமலர்

வெளிவந்த திகதி: 30.08.2011

உரை: மதிப்புரை

இதைப் படித்தவர்கள் இதைக் குறிப்பிட்டு, நூல் கேட்டு காந்தளகத்திற்கு எழுதிய கடிதம் மூலம் ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிண்ணினைப்பு 4

இதுவரை வெளியான நூல்களின் அட்டைப் படங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org